# நிவேதினி

பால்நிலைக் கற்கைநெறிச் சஞ்சிகை

இதழ் 12, 2008

*நூற்பதிப்பு:*
2008

*பதிப்புரிமை:*
பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம்

*பிரதிகள்:*
300

*அளவு:*
1/8

*அச்சு:*
ஓவ்செற்

*பக்கங்கள்:*
94

*கடதாசி:*
70 கிராம் வெள்ளைத் தாள்

*வெளியீடு:*
பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம்

*அச்சுப்பதிப்பு:*
யுனி ஆர்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்,
48B, புளுமெண்டால் வீதி, கொழும்பு 13.

*விலை:*
ரூபா 250/-

ISSN:1391 - 0353

# நிவேதினி

## பால்நிலைக் கற்கை நெறிச் சஞ்சிகை

## இதழ். 12, 2008

பிரதம ஆசிரியர்
செல்வி திருச்சந்திரன்

ஆசிரியர் குழு
தேவகௌரி சுரேந்திரன்
மகேஸ் வைரமுத்து
சிவமணி பரராஜசிங்கம்

# இவ்விதழில் ...


பக்கம்

முன்னுரை V

## பகுதி I
## பெண்களும் இலக்கியமும்

போரையும் அரசியல் வன்முறையையும் எதிர்க்கும்
பெண் கவிதைக்குரல் 03
**-சித்திரலேகா மௌனகுரு-**

பெண்நிலைவாதமும் தேசியவாதமும் : ஈழத்துப் பெண் போராளிகளது
எழுத்துக்களின் அடிப்படையில் சில புரிதல்கள் 21
**-செ. யோகராசா-**

காலக்கனவு: ஒரு பெண்ணிய நாடகத்தின் ஆக்கம் 39
**-பொன்னி அரசு-**

பெண்நிலைவாத தலித் பார்வையில் சாதிய ஆணாதிக்கமும்
அடையாள அரசியலும் : இமையத்தின் 'செடல்' நாவல் பற்றிய ஒரு வாசிப்பு 46
**-ச. ஆனந்தி-**

தமிழ் உடலரசியலின் மூன்றாம் பரிமாணம் 61
**-குட்டி ரேவதி-**

## பகுதி II
## பெண்களும் சமூகக் கட்டமைப்புக்களும்

பெண்கள் அனுபவிக்கும் அனர்த்தங்களை எதிர்கொள்ளல் 69
**-அனுசூயா சேனாதிராஜா-**

பண்பாட்டிற்கு மறுபக்கங்களும் உண்டு 78
-செல்வி திருச்சந்திரன்-

# முகவுரை

பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனத்தினால் 2007ம் ஆண்டு கார்த்திகை மாதம் 30ம் திகதியும், மார்கழி மாதம் 01ம் திகதியும் நடாத்தப்பட்ட கருத்தரங்கில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகளே இவ் நிவேதினியின் பிரசுரமாக வெளிவருகிறது.

**தேசியம், மதம், அரசியல், வாழ்வியல் போன்றவற்றில் ஊடுருவி நிற்கும் ஆண் தலைமைத்துவத்தை எதிர்கொள்ளும் பெண் நிலைவாதம்** என்ற தொனிப்பொருளில் இக்கருத்தரங்கு நடாத்தப்பட்டது. பல்கலைக்கழக விரிவுரையாளர்களும், எழுத்தாளர்களும் கட்டுரைகள் சமர்ப்பித்தனர். கருத்தரங்கில் கருத்துக்களை கேட்போராகவும், கருத்துக்களுக்கு விமர்சனம் வைப்போராகவும் பலர் சமூகமளித்திருந்தனர். செயல்வாதிகள், ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள் என்ற ரீதியில் பெண்களும், ஆண்களும் பங்குபற்றியிருந்தனர். தெற்காசிய நிலையில் இக்கருத்தரங்கு நடாத்தப்பட்டாலும், இந்தியாவில் இருந்து மாத்திரமே கட்டுரையாளர்கள் வந்திருந்தனர். சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகளை இரு பிரிவுகளாக நாம் பிரித்துள்ளோம். முதலாம் பகுதி இலக்கியத்தை ஒட்டியதாகவும், இரண்டாம் பகுதி பொதுவான பல சமூக, அரசியல், பொருளாதார விடயங்களை அடக்குவனவாகவும் இருக்கின்றன.

கடந்த இருபது வருடங்களாக நம் நாட்டில் நடந்துவரும் போரும் அதன் உள்கிடக்கையான தேசீயமும் இலங்கை கட்டுரையாளர்களால் அவர்களுடைய கட்டுரைகளில் தவிர்க்க முடியாத கருப்பொருள் ஆகியுள்ளன. சித்திரலேகா மௌனகுரு, கவிதையின் ஊடாக ஒலிக்கும் வன்முறையை எதிர்க்கும் குரல்களை இனங்கண்டுள்ளார். செ. யோகராசா தேசியத்தின் ஊடாக ஒலிக்கும் பெண் போராளிகளின் பெண்ணிலைவாத கருத்துக்களை புரிந்துகொள்ள முயற்சித்துள்ளார்.

இந்திய பெண்ணிலைவாதிகளான பொன்னியும், ஆனந்தியும் தங்களது ஆக்கங்களை இந்தியப் புலத்திலிருந்து தந்திருக்கிறார்கள். ஆனந்தி இமயத்தின் 'செடல்' நாவலை சாதீய ஆணாதிக்கம், அடையாள அரசியல் போன்றவை தலித் பெண்ணிய பார்வையில் எப்படி வெளிப்படுகிறது என்பதை எடுத்தியம்பியுள்ளார். பொன்னி, பெண்ணிலைவாத நாடகத்தின் ஆக்கம் எப்படி காலக்கனவாக பரிணமித்தது என்பதை விளக்குகிறார். இவையாவும் இலக்கியத்தையும் நாடகத்தையும் மையமாகக் கொண்டவை. அனுசுயா சேனாதிராஜா பெண்களுக்கு போர்க்காலத்தின் ஊடாக ஏற்படும் அனர்த்தங்களை விளக்கி, எவ்வாறு அனர்த்தங்களை எதிர்கொள்வது என்று ஒரு ஆய்வு செய்துள்ளார். இவை தவிர கருத்தரங்கில் வாசிக்கப்படாத இன்னுமொரு கட்டுரை பிரதான போக்கில் செல்லும் பண்பாட்டிற்கு எதிரான சில மறுபக்கங்களும் உண்டு என்று கூறுகின்றது.

இக்கட்டுரைகளை எழுதியோருக்கும், கருத்தரங்கில் கருத்துரை வழங்கி கட்டுரைகளை செம்மைப்படுத்த உதவியோருக்கும் எமது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். இக்கட்டுரைகளை தொகுப்பதில் எனக்குதவிய தேவகௌரி சுரேந்திரன், மகேஸ் வைரமுத்து, சிவமணி பரராஜசிங்கம் ஆகியோருக்கும் நன்றி. கட்டுரைகளின் அச்சுப்பிழைகளை திருத்தி செம்மைப்படுத்துவதில் இவர்கள் எனக்கு உதவினார்கள்.

*செல்வி திருச்சந்திரன்*

# பெண்களும் இலக்கியமும்

# போரையும் அரசியல் வன்முறையையும் எதிர்க்கும் பெண் கவிதைக்குரல்

*-சித்திரலேகா மௌனகுரு-*

**ம**னித வரலாற்றில் மிக மோசமான பேரழிவுகளையும் மனித நினைவிலும் உணர்விலும் வலுவானதோர் பாதிப்பையும் ஏற்படுத்தியுள்ள பல்வேறு போர்களையும் அதனுடன் இணைந்த அரசியல் வன்முறையையும் பற்றிப் பல இலக்கியங்கள் பேசியுள்ளன. தென்ஆசிய இலக்கியப் பாரம்பரியத்தின் பேரிலக்கியங்கள் எனக் கருதப்படும் இராமாயணம், மகாபாரதம் ஆகியவற்றிலும் போர்கள் முக்கியம் பெறுகின்றன. இராம இராவண யுத்தம், பாரதப்போர் என்பவை சாதாரண மொழிவழக்கில் மரபுத்தொடர்களாக மாறும் அளவுக்கு அந்த யுத்தங்கள் இராமாயணத்திலும் மகாபாரதத்திலும் இலக்கியங்களிலும் இடம் பெற்றுள்ளன. ஒரு பகுதியினர் இன்னோர் பகுதியினர் மீது கட்டுப்பாட்டையும் அதிகாரத்தையும் நிலைநிறுத்துவதற்காகப் போர் செய்கின்றனர். வளங்களைப் பங்கு போடுவதிலும் கைப்பற்றுவதிலும் ஏற்படும் முரண்பாடு காரணமாகப் போர் உருவாகிறது.

தமிழ் இலக்கியத்தில் போர் பற்றிய கவிதைகளுக்கு ஒரு நீண்ட மரபுண்டு. சங்கப்பாடல்கள் தொடக்கம் தற்காலம் வரை இந்த நீட்சி தொடர்ந்துள்ளது. போர் பற்றிய இலக்கியங்கள் முதல் நிலையில் அதனை விவரிக்கின்றன. சங்கப்புறப் பாடல்கள் இராமாயண யுத்த காண்டம், கலிங்கத்துப்பரணி, மகாபாரதத்தின் பதினெட்டு நாட்போர்கள் போன்றவை இந்த விபரித்தலுக்கு உதாரணங்களாகும். அதே சமயம் இந்த இலக்கியங்கள் போரிடுவதன் இறுமாப்பு, வெற்றியின் பெருமிதம், புறமுதுகிடாப் போர்வீரன், வீரத்தின் பெருமை ஆகியவற்றை விதந்தோதுகின்றன. குறிப்பாக தமிழில் வீரநிலைக்கவிதைகள் எனப் பேராசிரியர் கைலாசபாதி, பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை போன்றோர் அடையாளப்படுத்திய இலக்கியத் தொகுதிகளில் புறப்பாடல்கள் என்பவற்றை இந்த "வீரத்துக்கு" எடுத்துக்காட்டாகக் கூறுவர். இப்பாடல்களுக்கு வெவ்வேறு காலகட்டங்களில் எழுந்த வியாக்கினங்களில் பெரும்பாலானவையும் தமிழ்ச் சமூகத்தின் வீரத்தையும் வெற்றியையும் முன்னிலைப்படுத்தியே வந்துள்ளன. தமிழ்ச்சமூகம் வீரம் செறிந்த சமூகம் என்ற வகையிலேயே இப்பாடல்களைப் பயன்படுத்தி அதனைக் கட்டமைப்பும் செய்துள்ளனர். குறிப்பாக 20 ஆம் நூற்றாண்டில் தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் தேசியவாதம் உருவாகியபோது இத்தகைய ஒரு கட்டமைப்பை இலக்கியச் சொல்லாடல்மயப்படுத்திப் பொதுசனப் பிரக்ஞையில் அதனைப் பதியவைத்தார்கள் இக்காலக் கவிஞர்கள், மறத்தமிழன், வீரத்தமிழன், போருக்கு அஞ்சாத தன்மானத்

தமிழன், முறத்தால் புலி விரட்டும் தமிழ்ப்பெண், பால்மணம் மாறாப் பாலகனைப் போருக்கு அனுப்பும் வீர மறக்குலத்துப்பெண்" போன்ற தொடர்களைப் பரவலாக்கியோர் பாரதிதாசனிலிருந்து காசி ஆனந்தன் வரை அனேகர். இவற்றினுடைய சாராம்சமாக அமைவது ஆண்மை என்ற கருத்தாக்கமாகும். தந்தை மையக் கருத்தியலின் சொல்லாடல்களில் ஆண்மை மையப்பொருளாகிறது. இதனால் மனித சமூகங்களிடையே சாராம்சமாக அமைவது ஆண்மை என்ற கருத்தாக்கமாகும். தந்தைமைக் கருத்தியலின் சொல்லாடல்களில் ஆண்மை மையப்பொருளாகிறது. இதனால் மனித சமூகங்களிடையே வளங்கள் தொடர்பான முரண்பாடுகளும் பிணக்குகளும் தோன்றும்போது ஒரு பகுதியினரை மற்றப் பகுதியினர் தமது வன்முறையைப் பிரயோகித்து அதிகாரத்தால் கட்டுப்படுத்துகின்றனர். அதிகாரத்தை வன்முறையால் சாதிக்க முனையும்போது போர் உருவாகிறது எனலாம்.

சாராம்சத்தில் போர் ஆண் மையப்பட்ட ஒரு செயலாகவும் ஆண்மை என்ற கருத்தாக்கத்தின் ஒரு வடிவமாகவும் அமைந்துள்ளது. இக்கருத்தாக்கம் போரில் ஏற்படும் மரணத்தைக் கொண்டாடுவதாக உள்ளது; வீரத்தையும் வெற்றியையும் விதந்தோதுவதாக உள்ளது. போரில் இறந்தோரை நடுகல் வைத்து வழிபடும் வழக்கத்துக்குச் சங்கப்பாடல்கள் சான்று. இதே சமயம் போர் பற்றிய பெண்களின் எதிர்வினைகளும் போருக்குப் புதல்வர்களை அனுப்புகின்ற வீரத்தாய் படிமத்தை மீறி எமது இலக்கியங்களில் ஆங்காங்கு ஒலித்துக்கொண்டே உள்ளன. இந்தக் குரல்கள் சோகத்தின் குரலாக சில சமயத்தில் ஆச்சரியப்படத்தக்க விதத்தில் நம்பிக்கையின் குரலாக, போர் பற்றிய விமர்சனக் குரலாக, மாற்றுக் கருத்து நிலை ஒன்றை முன்வைப்பதாக, வாழ்வைக் கொண்டாடுவதாக உள்ளன.

* * * * *

இலங்கையில் தமிழில் பெண்கள் தமது கவிதை ஆக்கங்களை பெண்கள் கவிதைகள் என்ற உணர்வுடன் வெளியிட ஆரம்பித்தது 1980களிலாகும். 1986 இல் வெளிவந்த சொல்லாத சேதிகள் என்ற பெண்களின் முதலாவது கவிதைத்தொகுதி (இத்தொகுதி 11 கவிஞர்களது 23 கவிதைகளை உள்ளடக்கியது) இந்த உணர்வின் ஒரு குறியீடாகும். அந்த ஆண்டிலிருந்து இன்று வரை ஈழத்துப் பெண்கள் கவிதைத் தொகுதிகள் பல வெளிவந்துள்ளன. இவை இலங்கையிலும் தமிழ்நாட்டிலும் வெளிவந்தவை. சமீபத்தில் வெளிவந்த "இசை பிழியப்பட்ட வீணை" வரை.

1980 களிலிருந்து தற்காலம் வரையான இந்த கால்நூற்றாண்டுக்காலம் இலங்கையின் தமிழ்ப் பேசும் மக்கள் வாழ்கின்ற பகுதிகளில் அரசின் இராணுவ நடவடிக்கைகள், அதற்கு எதிரான தமிழ்த் தேசிய இயக்கங்களில் மாற்று இராணுவ நடிவடிக்கைகள் அதிகரித்த காலகட்டமாகும். 1983 ஜுலையில் நிகழ்ந்த

தமிழருக்கெதிரான மோசமான வன்முறை, வடக்கு கிழக்குப் பகுதிகளில் அரசுக்கு எதிரான ஆயுதத்தாக்குதல்கள், 1987 இல் இந்திய அமைதிப் படைக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான யுத்தம், 90,91 இரண்டாம் ஈழப்போர், 95, 2006 யுத்தம் எனத் தொடர்ந்தன, இன்றும் தொடர்கின்றன. போரின் விளைவுகள் இலங்கை மக்கள் அனைவரையுமே வெவ்வேறுபட்ட விதத்தில் பாதித்தன.

உயிரிழப்பு, சொத்து அழிவு, மக்கள் தம் வாழிடங்களிலிருந்து இடம்பெயர நிர்ப்பந்திக்கப்படுதல் எனப் போரின் விளைவுகள் மக்கள் வாழ்க்கையையே புரட்டிப் போட்டன. இத்தகைய ஒரு காலகட்டத்தில்தான் பெண்களும் அதிக அளவில் கவிதையாக்கத் தொடங்கினர். இவ்வகையில் இப்போர்க்காலம் பற்றிய அவர்களது மன உணர்வுகளும் விசாரணையும் விமர்சனமும் இக்கவிதைகளில் இடம்பெறுவதில் வியப்பில்லை. இவற்றைப் போர் பற்றிய பெண்களின் பார்வைகளும் பதிவுகளும் என்பேன். இந்தப் பதிவுகளையும் பார்வைகளையும் சில குறிப்பிட்ட வகைமைகளாக அடையாளம் காணமுடியும்.

போர்க்கால வாழ்க்கை பல்வேறு வலிகளையும் வேதனைகளையும் கூடவே சவால்களையும் உயிர் பிழைப்பதற்கான அயராத எத்தனங்களையும் சுமந்துள்ளது. போருடன் தொடர்பான ஒன்று அகால மரணம். பல்வேறு வகையில் இந்த மரணங்கள் சம்பவிக்கின்றன. போரிடுவதால் ஏற்படும் மரணம்: அது போரை நடத்துவோரால் மரணமாக அறிவிக்கப்படுவது. அரசும் அரசுக்கு எதிராகப் போரிடும் அமைப்பும் தமது இராணுவத்தினரையும் போராளிகளையும் வீரர்களாக, வீராங்கனைகளாக உருவாக்குகின்றனர். இராணுவத்தில் சேருவோருக்குச் சம்பளத்துடன் பெரும் சன்மானங்கள் வழங்கப்படுகின்றன. யுத்தத்தில் இறக்க நேரிட்டால் குடும்பத்துக்குப் பெருந்தொகையான இழப்பீட்டுப் பணம் தருவதாக வாக்குறுதிகள் அளிக்கப்படுகின்றன. போரிட்டு இறந்தோருக்கு நினைவாலயங்கள் அமைக்கப்படுகின்றன. அதன் மூலம் மேலும் இளைஞர்களை யுத்தத்துக்குள் இழுக்கின்றனர். போர் மூலம் கட்டி எழுப்பபடும் வீரம்/ வீரர் என்ற படிமமும் எப்படியிருந்த போதிலும் மரணம் தரும் வலி யதார்த்தமானது. சொந்த இழப்பு, துயர் என்பவற்றுடன் பொதுவான துயரும் அடங்குகிறது. சாவை விவரித்தலின் மூலம் இந்தத் துயர் வெளிப்படுகிறது.

போரிலும் தாக்குதலிலும் அகப்பட்டு இறந்துபோகும் பொதுமக்களின் எண்ணிக்கை போரிட்டு மடிபவரின் எண்ணிக்கையை விட எப்போதும் அதிகமானதாகும். எதிர்பாராத கணத்தில் ஏற்படும் இத்தகைய மரணங்களும் அவற்றின் அபத்தமான தன்மையையும் நாமகளின் "யதார்த்தம்" என்ற கவிதை எடுத்துக்காட்டுகிறது. ஒரு கணத்தில் யாருமே எதிர்பாராமல் நடக்கும் குண்டு வீச்சு, ஷெல் வீச்சு, கண்ணி வெடிகள் ஆகியவற்றில் அகப்பட்டு இறந்துபோதல் இலங்கையில் இடம்பெறும் யுத்தத்தில் ஒரு பொது யதார்த்தமாக மாறியுள்ளது.

இத்தகைய மரணங்கள் ஏற்படுத்தும் வலியைவிட இந்த மரணங்கள் மிகச் சாதாரணமாகவே மாறிவிட்டதும் மக்கள் அதனால் பாதிக்கப்படாதவர்கள் போல் "வழமைக்கு" நிலைமைகள் திரும்புவதும் மரணத்தை விடக் கொடுமையானதும் வேதனையைத் தருவதுமாகும். தொடர்ந்து நீண்ட காலமாக ஒரு சமுகத்தில் நிகழும் வன்முறைகள் சமுகத்தில் ஒரு உணர்ச்சியின்மையைத் தோற்றுவித்துவிடும் என்பர். எந்த விடயத்திற்கும் எதிர்வினை புரியாது உணர்விழந்து போகும் சமுகத்தின் எதிர்காலம் மந்தமாகிவிடும் அபாயம் உள்ளது. தேநீர்க் கடையில் இருந்தவர்கள், பொருட்கள் வாங்க வரிசையில் காத்து நின்றவர்கள் எல்லோருக்கும் முன்பாக நிகழ்ந்த ஷெல் வெடிப்பில் ஒருவன் இறந்தான்.

*"..........*
*எல்லோரையும் தாண்டி*
*அவனுக்கு முன்பாய்*
*நிகழ்ந்த வெடிப்பு*
*மேலே விமானங்கள் இல்லை*
*ஷெல்தான்*
*..........*
*அவன்*
*ஒருமுறை மேலெழும்பிக்*
*கீழே வீழ்ந்தான்*
*எந்தச் சத்தமுமில்லை*
*கத்த நினைப்பதற்குள்*
*அவன் இறந்திருக்க வேண்டும்*
*..........*
*அவன் மட்டும்*
*தனியாகக் கிடந்தான்*
*கையொன்று*
*வீதியின் மறுகரையில்*
*விரல்களை நீட்டியபடி*
*யாரையோ*
*குற்றஞ்சாட்டுவதாய்*
*சில நிமிஷங்கள்தான்...."* (நாமகள்)

பிறகு அம்புலன்ஸ் வந்து யாவற்றையும் அள்ள, மீந்திருந்த அடையாளங்களையும் வீதியில் போன வாகனங்கள் துடைக்க, எதுவுமே நிகழாத மாதிரி சனங்கள் விரைந்து கொண்டிருந்தார்கள் எனச் செல்கிறது கவிதை. மனித மனம் எந்த மரணத்தைக் கண்டும் திடுக்கிடுவது; பயப்படுவது வேதனைப்படுவது இயல்பு. அந்த மனிதத்தின் இயல்பையும் யுத்தம் தின்று தீர்த்துவிட்டது. இராணுவவாதம் மனித இயல்புகளைச் சீரணிக்கச் செய்துவிட்டது என்பது இதில் பதிவாயுள்ளன.

மரணத்தின் வலியும் பிரிவின் வேதனையும் பற்றிய போராளிகளின் கவிதைக் குரல்களை "எழுதாத உன் கவிதை" தமிழீழப் பெண்கள் கவிதைகளின் அணிந்துரை சரியாகவே அடையாளம் கண்டுள்ளது.

"பெண் போராளிக் கவிஞர்கள் பாடியிருப்பதால் போரின் புகழ், போர்த்தலைவன் புகழ், போர் வெற்றியின் புகழ் மட்டுமே இருக்கும் என ஒரு முற்சாய்வு எடுத்திட வேண்டாம்....
இவை சொல்லும் செய்தி வலியது: வலியைத் தருவது....." (பாலகுமாரன்: 2001)

பெண் போராளி ஒருவரும் பெண்களின் சிறுகதைத் தொகுப்பின் முன்னுரையொன்றில் இதே விடயத்தைச் சற்று மனத்தாங்கலுடன் குறிப்பிடுகிறார்.

"பார்வைக்குப் படைத்துறை வீரர்களாகத் தோற்றுகின்ற, செயற்படுகின்ற இவர்களின் ஈரம் நிறைந்த இன்னொரு பக்கத்தை நானறிவேன். முன்னேறி வருகின்ற எதிரிப் படைகளை முறியடிப்பவர்களாகவும் நிலம் மீட்பவர்களாக மட்டும் இருக்கவில்லை என்பதையும் நானறிவேன்." (மலைமகள்: 2001)

மரணத்தின் பிரிவு ஏற்படுத்தும் வலி ஆச்சரியப்படத்தக்க விதத்தில் வன்னியிருந்து வெளியாகும் பெண்களின் கவிதைத் தொகுதிகளில் இடம்பெற்றுள்ளது. தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் களப்போராளி களாயிருக்கும் பெண்களின் கவிதைகளில் மரணம் தரும் வலி மிக வலுவாகவே வெளிப்படுகிறது. குடும்பங்களையும் உறவுகளையும் நீங்கி அவர்களுடன் அதிக தொடர்புகளற்று முகாம்களில் வசிக்கும் போராளிகளது உறவாக அவர்களது சக போராளிகளே விளங்குகின்றனர். அவர்களுக்குள் மிக நெருக்கமான உறவுகள் உருவாகின்றன. ஆனால் போரில் கணநேரத்தில் இத்தகைய நெருக்கத்திற் குரியவர்களை இழந்துவிடுவது பற்றிய சோகம் கவிதைகளின் விசேட பொருளாகியுள்ளது.

*அன்பான தோழி*
*நீயும் இல்லை*
*உனக்குக் கல்லறையும் இல்லை*
*கண்ணீர் விட்டு அழமுடிந்தும்*
*பெயர் சொல்லி அழமுடியவில்லை*
*தோழி!*
*உன் சாதனை உன்னதம்*
*உயிரிலும் மேலான உன் தோழிக்கும்*
*தெரியாமல் நீ சென்றாய்*
*உயிரைத் துறந்த அக்கணம்*
*உடல் சிதறிய அந்நேரம்*
*அறியேன் தோழி...."*

இங்கு கவிஞர் குறிப்பிடும் மரணம் தற்கொலைப் போராளியினுடையதாகும். தற்கொலைப் போராளிகளின் வாழ்வு இரகசியம் நிறைந்தது. அவர்களது தாக்குதல் நடவடிக்கை எவருக்கும் தெரிவதில்லை. இறந்தபின்பும் அதற்கு உரிமை கோரப்படுவதோ போராளியின் பெயர் உடனடியாக வெளியிடப்படுவதோ இல்லை. போராளிகளுக்குள் சிறு வட்டத்துக்குள் தெரிந்தாலும் வெளியில் சொல்லப்படுவதில்லை. விடைபெறாத இப்பிரிவுகளின் வெளியே சொல்ல முடியாத ஊமைத் துயரங்களுக்கு ஒரு வெளிப்பாட்டு வழியாக மேற்கூறியது போன்ற கவிதைகள் அமைகின்றன.

*பேரதிர்வுகள் கிளம்பிய காலையின்*
*சிதிலமாக்கப்பட்ட எனது*
*வாழ்க்கைக் கனவுளூடு*
*இன்னும் உயிரள்ளிப் போகின்ற*
*கனத்த நினைவுகளின் மீதத்தில்*
*நீள்கிறது வாழ்க்கை....''* (சுதாமதி)

என்று போரின், இக்கவிதை போரிடலின் அவலத்தைப் பதி செய்கிறது. தமது மரணம் பற்றிய விசாரணையும் போராளிப் பெண்களின் கவிதைகளில் காணக்கூடிய இன்னோர் அம்சமாகும். தமது அன்னையருடன் மரணம் பற்றிய உரையாடுவதாகப் இக்கவிதைகள் பெரும்பாலும் அமைந்துள்ளன.

*நாளை திரும்பி வரா*
*உன் மகளை எண்ணிக்*
*கவலைப் படாதே*
*என் மறைவின் பின்னர்*
*புதிய தோழர்கள்*
*அந்த வைகறைக்காய்*
*புறப்படுவார்கள்*
*புதிய விடியலை*
*வரவேற்கும்*
*அதிகாலை புஷ்பங்களாய்*
*மெல்லிய பனித்துளியின்*
*முகத்தின் பின்னால்*
*நாம் முகையவிழ்ந்து*
*தென்றலின் தடவலில்*
*முகமலர்ந்தாடுவோம்*
*அப்போது நீ இருந்தால் உற்றுப்பார்*
*உன் செல்ல மகளின் முகம்*
*சிரித்தபடியே தெரியும்*

கவிதைகளுக்கும் இடையே ஒற்றுமை உள்ளது. மரணத்தின் வேதனை ஒன்றாகவே உள்ளது. போராளிப்பெண் கவிஞர்களை தலித் பெண் எழுத்தாளர்கள் போல் தனிப்பிரிவாகப் பார்க்கவேண்டும் என்று சிலர் கூறினும் பெண்கள் என்ற வகையில் ஒரே வகையிலான பார்வையை ஒரு பொது அம்சமாகக் காணலாம்.

ஆண்மையின் ஒரு அம்சமான வெற்றி, இறுமாப்பு, தற்பெருமை ஆகியவற்றுக்கு மாறான ஒரு குரலாகவே இத்தகைய கவிதைகள் உள்ளன. இனத்தால் இஸ்லாமியராகவும் ஈழத்தமிழரின் பாரம்பரியத் தாய்நிலம் எனக் கூறப்படும் வடக்குக் கிழக்குப் பகுதியில் இல்லாமல் இலங்கையின் தென்பகுதியில் வாழ்பவருமான பஹீமா ஜெகானின் கவிதையிலும் போரில் இறந்துபோகும் போராளிகளின் மரணம் பற்றிய வேதனை மிக உருக்கமான வகையில் அமைந்துள்ளது.

*"...........*
*அலையெழும்பும் கடல் பரப்பினில்*
*உனக்கான பணி முடிக்கவென விடைபெற்றுப் போனாய்*
*வாழ்த்துச் சொல்ல வாயெழவுமில்லை!*
*அசரத் தழுவிட நீ விரும்பவுமில்லை*
*வெளியே பெய்த மழை என் கன்னங்களில் வழிந்தோட*
*மழைப்பு காரினூடே மறைந்து போனாய்!*
*திரைகடல் சென்ற திரவியமானாய்!*
*ஆழிப் பரப்பெங்கும் ஊழித்தீ எழுந்து தணிந்தது – நீ*
*திரும்பி வரவே இல்லை.*
*..........*
*சமுத்திரத்தையே சமாதியாகக் கொண்டவனே*
*இங்கு ஏதுமற்ற உன் கல்லறையில்*
*ஒரு கடல் நீருற்றி நிரப்பிபடவோ?"* (பஹீமா ஜகான் 2007)

கடற்தாக்குதலில் ஈடுபட்டுக் கடலில் கரைந்து போகின்ற போராளி/ காதலனின் மரணமும் பிரிவும் ஏற்படுத்திய ஆழமான சோகமும், மரணத்தின் வெறுமையும் இக்கவிதையில் கவிந்துள்ளன.

போரினாலும் அரசியல் வன்முறையினாலும் ஏற்படுகின்ற மரணங்களும் கொலைகளும் மனித உறவுகளில் மிகுந்த பாதிப்பை ஏற்படுத்துகின்றன. பெண்களுடைய கவிதைகளில் நண்பர்களையும் காதலர்களையும் பிரியும் துன்பம் பொதுவாகத் தெரிகிறது. காதலைத் துறந்து போராளியாவதும் மரணம் அடைவதும் (பெரும்பாலும் ஆண்கள்) பெண் மனதில் ஏற்படுத்துகின்ற ஆழமான ஊமைக் காயங்களை வினோதினியின் கெனடி என்ற கவிதை காட்டுகிறது. அது மாத்திரமல்ல: இராணுவத்தாலோ மாற்று இயக்கங்களாலோ குறிவைக்கப்பட்டு தேடப்பட்டபோது, தேசம் நீங்கி அன்னிய நாடுகளில் தஞ்சமடைவதால் ஏற்படும் பிரிவுகள், அவை தரும் வேதனைகள் என்பனவும் கவிதைகளில் பதிவாகியுள்ளன.

"அடைய முடியாதத் தொலைவும் நீ
தீண்ட முடியாத உறவும் நீ
தொலைவிலிருந்து கேட்கும் இனிய பாடலாக
உனது குரலினை நினைவுபடுத்திக்
கொண்டேயிருக்கிறேன்.
..............
அதீதப் புனைவுகளால் சித்தரிக்கப்பட்டுத்
தோற்றுப்போனது கடந்த காலம்
அனைத்தின் மீதும் கேள்வியெழுப்பி
வாழவிடாமற் செய்துள்ளது நிகழ்காலம்
யார் யாராலோ விதிக்கப்பட்டதை எனக்கு
ஏற்று வாழும் படியாயிற்று
திணிக்கப்பட்டதை மறுத்ததால் உனக்குத்
தொலைதூரம் போகும்படியாயிற்று
எமக்கிடையே தேசதேசாந்திரங்களும்
கடல்களும் காடு மலைகளுமாய்
..............
எனக்கொரு அழைப்பு தருவாயா?
தங்க எங்கும் இடமற்று நீ வாழும் தேசம் வரை
நீண்டு நீண்டு வருகின்றன என் கனவுகள்"

(பஹீமா ஜெகான்: 52)

பெண்கள் தமது உரிமை, தமது சுயம், தமது உணர்வுகள் என்று பேசியதுடன் கூட நாட்டுநிலை பற்றியும் சமூக நிலை பற்றியும் தமது கருத்துக்களைக் கவிதைகளுக்கூடாக முன்வைத்தனர். சொல்லாத சேதிகள் தொகுதியில் சன்மார்க்சா, சிவரமணி, செல்வி ஆகியோரின் கவிதைகள் தமிழ்ச் சமூகத்தின் அரசியல் நிலைமைகள் தொடர்பான எதிர்வினையை முன்வைப்பதுடன் இப்போக்கு ஆரம்பிக்கிறது. இராணுவ அடக்குமுறை ஏற்படுத்திய உணர்வுகள், மனப் பதிவுகளிலிருந்து இனத்துவ அரசியல் பற்றிய விமர்சனம் வரை இக்கவிதைகள் உரையாடின.

சன்மார்க்காவின் ஒரு தாயின் புலம்பல் என்ற கவிதை தமிழர் தரப்பு அரசியல் பற்றி விமர்சித்த ஆரம்பகாலப் பெண் கவிதை எனலாம்.

மொழிவழித் தேசியத்தை வளர்த்த தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியலையும் அரச இராணுவ ஒடுக்கு முறையையும் ஒருசேர ஒரேதளத்தில் வைத்து விமர்சிக்கிறது அக்கவிதை.

ஏழைத்தாயின் குரலில் இவ்விமர்சகத்தை அவர் முன்வைக்கிறார்.

தனிநாடு கேட்ட 1972 வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை முன் வைத்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் வர்க்கச் சார்பையும் வர்க்க நலனையும் அக்கவிதை மெலிதாகத் தொட்டது. அன்றைய காலகட்டத்தில் அரசியல் தலைவர்கள் பாதுகாப்பாக இருக்க இயக்கங்களில் சேர்ந்த ஏழை இளைஞர்களே பயங்கரவாதிகள் எனச் சுட்டப்படுவதும் சிறைப்பிடிக்கப்படுவதும் யதார்த்தமாய் இருந்தது. ஒரு குடும்பத்தில் ஒருவர் இயக்கத்தில் சேர்ந்தால் அந்தக் குடும்பமே இராணுவத்தினரின் மிரட்டலுக்கும் சித்திரவதைக்கும் ஆளவது சாதாரணமான சம்பவமாகும். இதனால் குடும்பத்தினரின் அங்கத்தினர் ஒருவர் இயக்கத்தில் சேர்ந்திருந்தால் அதனை இரகசியமாக வைத்திருப்பதும் அப்படி ஒரு அங்கத்தவர் குடும்பத்தில் இல்லை என மறுப்பதும் பொதுவான ஒரு நடவடிக்கையாகும். குடும்ப அங்கத்தவர்களின் பாதுகாப்புக்காக இவ்வாறு நடக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. தாக்குதலில் ஈடுபட்டோ அகப்பட்டோ மரணித்தால் மரணித்தவரை தமது புதல்வன் ஏன்றோ புதல்வி என்றோ கூறாதிருப்பதும் நிகழ்ந்தது. மரணச்சடங்கு நடத்தமுடியாமல், பொதுவைத்தியசாலைகளில் கொடுக்கப்பட்ட சடலங்களை உரிமைகோரவோ, அடையாளம் காட்டவோ முடியாமல் ஊமைத்துயரத்தை அனுபவித்த குடும்பங்கள் ஏராளம்.

*"தெருப்புழுதியில் உன் உடம்பு*
*முதுகெல்லாம் இரத்த வெள்ளம்*
*நீதானா எனக் குனிந்து பார்த்தேன்*
*"ஓம் ராசா நீயேதான்"*
*"ஏன் ஆச்சி அழுகிறாய்"*
*கூடி நிற்கும் சனம் கேட்க*
*"பெடியனைத் தெரியுமா உனக்கு?*
*மிரட்டுகிறான் காக்கிச்சட்டை*
*அவன் கையில் துவக்கு வெயிலில் மின்னுகிறது*
*தெரியாது என்று தலையசைத்தேன்*
*நான் பெற்ற முதல் முத்தை.*
*............*
*குருஷேத்திரத்தில் கர்ணன் விழ*
*ஐயோ மகனே என்று குந்தி*
*ஓடிச்சென்று அணைத்தாளே*
*ஐயோ ராசா நான் பாவி*
*என்பிள்ளை என்று சொல்ல*
*முடியாத பாவியானேன்*
*.........*
*உன்னை மகன் என்று நான் வீட்டே*
*கொண்டு போனால் உன் தம்பிமாரை*

விட்டு வைப்பாரோ கொடியவர்கள்?
வெட்டையாடித் தீர்த்துவிட்டு
கொட்டிலையும் எரிப்பார்கள்
மாட்டையும் லொறியில் ஏத்தி
பலாலி போய்ச் சேர்வார்கள்
யாரென்று கேட்க யாரிருக்கிறார்
மகனே நான் ஏழையெல்லோ?
தனிநாடு கேட்டு மேடையேறி
கனக்கக் கதைத்தவர்கள்
அயல்நாட்டில் விழுந்ததுண்டு
பாதுகாப்பாய் இருக்கையிலே
ஊருக்காய் மடிந்த பிள்ளை
தெருப்புழுதியில் கிடக்கிறான்"

................ (சன்மார்க்கா: 1986)

சன்மார்க்காவின் ஒரு தாயின் புலம்பல் என்ற இக் கவிதை ஒரு தாயின் வேதனை, விரக்தி, அரசியல் விமர்சனம் ஆகியவற்றை முன்வைவிக்கிறது. நேரடியாக யுத்தம் வேண்டாம் என்ற பிரகடனம் செய்வதிலிருந்து வேறுபட்டு மிக நுணுக்கமாக அதனைக் கட்டுடைத்து யுத்தத்துள் இருக்கும் அடக்கு முறை அதிகாரம் என்பவற்றையும் காட்டுகிறது. இலங்கை என்ற தேச எல்லைக்கு அப்பாலும் நிகழும் வேறு போர்கள் பற்றியும் பொதுவான இராணுவ வன்செயலுக்கு எதிராவும் கூட பெண்கள் கவிதை பேசியது.

1993 இல் பிரான்ஸிலிருந்து வெளியிடப்பட்ட மறையாத மறுபாதி கவிதைத்தொகுதியில் மல்லிகாவின் கவிதை

"அங்கும் இங்கும்
எங்கும் நோக்கினும்
மோதல், மோதல்.
முடிவில்லாத மோதல்
மண்ணிற்காகவும்
மண்ணெணணைக்காகவும்
மோதல் மோதல்
இனத்தின் மதத்தின் நிறத்தின் பேரால்
..........
ஒவ்வொரு பிள்ளையின்
நரம்பிலும் ஓடுவது
பெண்களின் இரத்தம்
எனவே நான் சொல்கிறேன்

யுத்தங்களை நிறுத்துங்கள்
ஒரு தாயாகவும் பெண்ணாகவும்
இனியும் பொறுக்க முடியவில்லை என்னால்

கொலைகாரக் குண்டுகளின்
சோதனைக் களமாய்
எங்களின் நிலங்கள்
கல்லறையாக மாறுகிறது
மூன்றாம் உலகம்
........
அமைதியை அடைவதற்கு
வேறொரு விதியுண்டு
அது சிந்திப்பதால்
பெறுகின்ற நல்ல வழியொன்று" (மல்லிகா : 1993: 23)

எனப் போருக்கான காரணங்களையும், போரை நிறுத்துவதற்கான உபாயத்தையும் முன்வைத்தது. இத்தகைய நேரடியான சொற்களையும் கருத்துகளையும் விட உள்ளுறையாக யுத்தம் பற்றிய அதிருப்தியும் விமர்சமும் வெளிப்படுகிறது.

ஔவையின் தாயின் குரல் கவிதை போர் பற்றி மாத்திரம் அல்லாமல் மண்ணுக்காகப் போர் என்ற கருத்தாக்கத்தை நிராகரித்துவிடுகிறது.

போரின் போது தேசமும், நிலமும் பெண்ணாகவும் தாயாகவும் புனைவு செய்யப்படுகின்றது. தாய்நாட்டுக்காக உடல் பொருள், ஆவியின் அர்ப்பணிப்புப் பற்றிப் பேசப்படுகின்றது. தாய்நாட்டுக்காகப் போரிட தனயர்களைத் தரும் தாய், வீரத்தாய் எனப் போற்றப்படுகிறாள். தமிழ் இலக்கியத்தில் வீரத்தாய் படிமம் சங்ககாலம் தொட்டுப் பிரபல்யம் பெற்றது. போரில் கணவனும் உறவினரும் இறந்துபோக எஞ்சியிருந்த இளம்மகனை போருக்கு அனுப்பிய புறநானூற்றுத் தாய்மார்கள் பற்றி இக்காலத்தில் அதிகம் பேசவும் எழுதவும் பட்டது. இலங்கையில் தமிழர் தமது மொழியுரிமைப் போராட்டங்களின் போதும், தனிநாட்டுக்கோரிக்கை அடிப்படையிலான போராட்டங்களிலும் இந்த வீரத்தாய் படிமத்தைத் தாராளமாகப் பயன்படுத்தியுள்ளனர். தமது ஐதீகங்களில் இருந்து சிங்கள இனவாதமும் பயன்படுத்தியுள்ளது. துட்டகாமினியின் அன்னை விகாரமாதேவி பற்றிய கதை மேடைப் பிரசங்கங்களிலும், பாடல்களிலும், பாடப்புத்தகங்களிலும் இடம்பெற்றது. தாய் நிலத்துக்காகப் புதல்வர்களை/ புதல்விகளைத் தரும்படி பெற்றோர்கள் கேடகப்பட்டனர்/ வற்புறுத்தப்பட்டனர். இந்தப் பின்னணியிலேயே "பிள்ளை இராணுவம்" என்ற குற்றச்சாட்டும் எழுந்தது.

இனத்துவப் போராட்டம், தேசியம், மணமீட்புப்போர், தாய் நிலத்துக்கான போர் என்ற கருத்தாக்கங்களையெல்லாம் நிராகரிப்பதாக ஔவையின் கவிதை அமைகிறது.

கொலைகளும் மரணமும் யாவற்றுக்கும் முடிவாயிருக்கையில்/ ஒரு தாயாக நின்று புதல்வர்களைக் கேட்காதே என்கிறது இக்கவிதை. இரு தாய்களை எதிர்நிலையில் நிறுத்துகிறார் ஔவை. ஒரு தாய் நிலம்; இது உருவாக்கப்பட்ட தாய் படிமம்.

மற்றது உண்மையான, உயிருடனும் உணர்வுடனும் உள்ள தாய் யுத்தத்தில் பிள்ளைகளைப் பறிகொடுக்கும் தாய்; வீரத்தாய் அல்ல.

*"போராட என்னை அழைக்காதே*
*நானொரு தாய்*
*எனது புதல்வர்களையும் கேட்காதே*
*இரக்கமற்ற தாய்நிலமே*
*கொல்லப்பட்ட என் புதல்வர்களின் இரத்தம்*
*இன்னும் காயவில்லை*
*............*
*இன்னுமா தாய்நிலம் புதல்வர்களைக் கேட்கிறது?*
*கடித்துக் குதறி*
*நெரித்தும் எரித்தும்*
*வடக்கிலும் தெற்கிலும் உலகெங்கிலும்*
*எத்தனை குஞ்சுகளை விழுங்கிவிட்டாய்*
*இன்னும் அடங்காதோ உன் பசி"* (ஔவை: 2000: 68,69)

இவ்வாறு தாயின் அனுபவத்தில் யுத்தத்தின் கொடூரத்தை மாத்திரமல்ல, அதன் பின்னாலுள்ள கருத்தியலையும் வெளிக்காட்டும் வகையில் கவிதையின் அமைப்பும் பொருளும் வடிவமைக்கப்பட்டுள்ளன. ஔவையினுடைய தாயின் குரல் என்ற இக்கவிதை யுத்தத்தைச் சபிக்கிறது; பிள்ளைகளை வாழ்த்துகிறது.

*விண்ணேறி மண் தொட்டு*
*மீண்ட பின்னும்*
*சமாதானம் வேண்ட யுத்தம் தேவையோ?*
*பற்றி எரிக ஆயுத கலாசாரம்!*
*என் மழலைகளை விடு, நாளை உலகம்*
*அவர்களுக்காய் மலரட்டும்"* (மேலது:)

யுத்தம் பற்றிய விமர்சனம் மிகப் பூடகமாக, சிவரமணியின் கவிதைகளில் வெளிவந்துள்ளது. யுத்தகால இரவொன்றின் நெருக்குதல் என்று தொடங்கும் அவரது கவிதை 1989இல் எழுதப்பட்டது. எண்பதுகளின் மத்திய பகுதியிலிருந்து தமிழ்த் தேசிய இயக்கங்களுக்கிடையே உருவான மோதல்கள், அவற்றினால் நிகழ்ந்த மோசமான கொலைகள் 1987இல் இந்திய அமைதிப் படையினருக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையேயான யுத்தம் ஆகியவை பெருமளவில் யுத்தம் பற்றிய அச்சத்தையும் அதே சமயம் இவற்றைப் பற்றிப் பேசத் தயங்கும் ஒரு பய

உளவியலைலயும் உருவாக்கின. இக்காலக் கட்டத்தில்தான் யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட விரிவுரையாளரான ராஜினி திரணாகம, சகல அரசியற் தரப்பினரதும் இராணுவவாதத்தை விமர்சித்ததற்காக யாழ்ப்பாணத்தில் சுட்டுக்கொல்லப்பட்டார். இவ்வாறு ஆயுதக் கலாசாரமே மேலோங்கியிருந்த காலத்தில் வாழ்ந்த சிவரமணி சிறுவர்கள் தமது பிள்ளைமையை இழந்து போவது பற்றி எழுதிய கவிதையே இது. துப்பாக்கி வெடிகள் குழந்தைக் கதைகளின் அர்த்தத்தை இல்லாதொழிப்பது பற்றி வேதனை தோய்ந்த எள்ளலுடன் கவிதை கூறுகிறது.

*யுத்தகால இரவொன்றன் நெருக்குதல்*
*எங்கள் குழந்தைகளை வளர்ந்தவர்களாக்கிவிடும்*
*ஒரு சிறிய குருவியினுடையவதைப் போன்ற*
*அவர்களின் அழகிய காலையின்*
*பாதைகளின் குறுக்காய்*
*வீச்சப்படும் ஒவ்வொரு குருதி தோய்ந்த*
*முகமற்ற மனித உடலும்*
*உயிர் நிறைந்த அவர்களின் சிரிப்பின் மீதாய்*
*உடைந்து விழும் மதிற்சுவர்களும்*
*காரணமாய்*
*எங்களுடைய சிறுவர்கள்*
*சிறுவர்களாயில்லாது போயினர்...*
*தும்பியின் இறக்கையைப் பிய்த்து எறிவதும்*
*தடியையும் பொல்லையும் துப்பாக்கியாக்கி*
*எதிரியாய் நினைத்து நண்பனைக் கொல்வதும்*
*எம் சிறுவரின் விளையாட்டானது* (சிவரமணி 1993 :)

1980களின் நடுப்பகுதியிலிருந்து தேசிய விடுதலைப் போராட்டத்தில் பல பின்னடைவுகள் ஏற்பட்டன. தார்மீகப் பண்பில் தடுமாற்றங்கள் ஏற்பட்டன. சகபோராளிக் குழுக்களுக்குள் சண்டைகள் வலுத்தன. விடுதலைப் போரில் இராணுவவாதம் மேலோங்கியது. மாற்றுக் கருத்துடையோர் கொலையும் செய்யப்பட்டனர்.

இவை பற்றியெல்லாம் மிகுந்த வலியுடன் பெண்கள் பேசினர். 89,90,91களில் எழுதப்பட்ட நம்பிக்கையீனமும் நிராசையும் சேர்ந்த சிவரமணியின் கவிதைகள் இக்காலகட்டத்தின் இத்தகைய அரசியற் சூழலிலேயே புரிந்து கொள்ளப்பட வேண்டியவையாகும்.

*"துண்டுப் பிரசுரத்தைப் போல் ஆறுதலும்*
*நம்பிக்கையும் தரக்கூடிய வார்த்தைகள் இல்லை"*

என்றும்

*புத்திசாலித்தனமான கடைசி மனிதனும்*
*இறந்து கொண்டிருக்கிறான்*

எனவும்

*ஒவ்வொருத்தனும் தனக்குரிய*
*சவப்பெட்டியைச் சுமந்தபடியே*
*தனது ஒவ்வொருவேளை*
*உணவையும் உண்கிறான்*

என்றும் சிவரமணி மிகுந்த விமரிசனப் பார்வையுடன் எழுதினார். செல்வியின் இராமனே இராவணனாய் என்ற கவிதையும் இத்தகைய ஒரு அவநம்பிக்கையையும் நிராசையையுமே பிரதிபலிக்கிறது.

ஈழத்தமிழர் போராட்டத்தின் இன்னோர் அம்சம் தமிழருக்கும் முஸ்லீம்களுக்கும் இடையே இனத்துவ அடிப்படையில் ஏற்பட்ட பிளவுகள் ஆகும். ஆரம்பத்தில் தமிழ்த்தேசிய இயக்கக் குழுக்கள் சிலவற்றில் முஸ்லீம்களும் அங்கத்தவராய் இருந்தனர் என்பதையும் கவனிக்கவேண்டும். தமிழரின் மொழி உரிமைப் போராட்டத்தைத் தொடங்கி வைத்த தமிழரசுக் கட்சியில் 1960களில் முஸ்லீம்கள் அங்கத்தவராய் இருந்தனர். அக்கட்சியின் சார்பில் தேர்தலில் போட்டியிட்டனர். "இஸ்லாம் எங்கள் வழி இன்பத்தமிழ் எங்கள் மொழி" எனக் கோஷமிட்டனர்.

ஆனால் 1980களின் மத்திய பகுதியிலிருந்து முஸ்லீம்களுக்கும் தமிழருக்கும் இடையேயான இடைவெளி அதிகரித்தது. முரண்பாடுகள் ஏற்பட்டன. இந்திய அமைதிப்படையினர் இலங்கையில் நிலைகொண்டிருந்த காலத்தில் 1987, 88களில் இது மேலும் அதிகரித்தது.

1990 அக்டோபரில் யாழ்குடா நாட்டிலிருந்து முஸ்லீம்கள் ஒரு இரவில் வெளியேற்றப்பட்டமைக்குப் பின்னர் இந்த இடைவெளி பெருத்தது.

ஒரு ஒலிபெருக்கி அறிவிப்பில் ஒரு இனமே தமது வாழ்வைப் பின்விட்டு துரத்தப்பட்டு தூரப்போனதையும் பெண்களின் கவிதைகள் பாடின. வடக்கிலும் கிழக்கிலும் நடந்த இச்சம்பவங்களையும் இரு இனங்களுக்கிடையே பெரிதாகிய இடைவெளியையும் மிகுந்த மனப்பாரத்துடன் பாடினார்.

*"அது ஓர் சுகமான ஞாபகம்*
*என் உறவுகளும்*
*என் ஸ்நேகங்களும்*
*நானும் அமைதியும் மகிழ்வுமாய்*
*அம்மண்ணில் வாழ்ந்திருந்ததும்*
*...................*

*மறைந்துபோன என்*
*மணல் ஓவியங்களைக்*
*கீற முனைகிறேன் நான்*
*என்னுடைய அந்த நிமிடங்களை*
*நினைக்கும் என் இதயத்தை*
*அறுத்தெறிந்து வாழ நினைக்கும் நான்*
*இன்று எதைச் சிந்திப்பேன்...*
*தொலைந்து போன*
*என் சமாதானம் பற்றியதாகவோ?*
*....................*
*நான் தொலைந்தவற்றைத் தேடுகிறேன்"* (பெண்ணிய : 2006)

காணாமல் போதல், கொலைகள் இவை பற்றிய முறையீடுகள் எல்லாம் எந்தப்பதிலும் எந்த முடிவும் இன்றி நின்று விடுகின்றன. அவற்றுக்கு எந்தப் பிரயோசனமும் இல்லை. இது ஒரு சலிப்பையும் அலுப்பையும் விரக்தியையும் இறுதியில் இவை பற்றிய ஒரு பரிகாசத்தையும் உருவாக்குகிறது. காணமற் போவோரும் கடத்தப்படுவோரும் திரும்புதல் இல்லை என்பதே நியதியாகிறது. எனினும் மனித உரிமை நிறுவனங்களும் ஊடகங்களும் இவை பற்றி மீண்டும் மீண்டும் எழுதுகின்றன. ஆனால் நம்பிக்கை தரும்படியான எந்த அறிகுறியும் இல்லை. இதனால் வரும் விரக்தியும் அங்கதமும் வினோதினியின் கவிதைகளில் இடம்பெறுகின்றன.

*"திடீர் திடீரென்று யாரோ ஒருவராவது*
*காணாமல் போகிறார்: திரும்புதல் இன்றி*
*எல்லாருடைய படங்களும் பிறப்பத்தாட்சிகளும்*
*அலுவலகங்களில் கோப்புகளாக*
*முன்னெப்போதும் அறியாச் சொற்களைப் படிப்பதும்*
*எழுதுவதும் சாதாரணமாகி அகராதிகள் எல்லாம்*
*அர்த்தமற்றவையாகி விட்டன*
*.......*
*வெளவால் கூடுகளாயிருக்கும் வீடுகளும்*
*முள்ளுக் கம்பிகளும், மிதிவெடிகளும் உண்டு*
*புகைப்படமெடுக்கவும் வலைப்பதிவிலிடவும்*
*முன்னொரு போது நமது என*
*அறிந்து மகிழ்ந்த நிலம் இது"* (வினோதினி 2007 : 61)

மக்களில்லை: அவர்கள் காணாமல் போய்விட்டனர். ஆனால் முறைப்பாடு செய்யும் போது கொடுத்தபடம் உள்ளது. அல்லது அந்தப்படம் அவர் தொழில் புரிந்த இடங்களில் அலுவலங்களில் உள்ள கோப்புகளில் இருக்கலாம். அவ்வளவுதான்.

அதேபோல் தான் சிதைந்த நகரமும் அழிவுகளையும் சிதைவுகளையும் படமெடுக்கின்றனர். இவை இணையத்தளங்களில் இடம்பெறுகின்றன. பத்திரிகைகளில் இடம்பெறுகின்றன. அவ்வளவுதான்; அதற்குமேல் யுத்தம் அப்படியேதான் உள்ளது. எந்தவித நியாயமும் தீர்வும் இன்றி யுத்தம் தொடர்கிறது. இந்தப் பின்னணியில் அழிவுகளை ஆவணப்படுத்தல்களும் பிரபல்யப் படுத்தல்களும் அர்த்தம் இழந்து யந்திரிகமான செயலாய் விடுகிறது. இதனை ஒரு அலுப்புடனும் எள்ளலுடனும் சொல்கிறார் நந்தினி.

## போரின் வலி/ வேதனை

போர்க்காலத்தில் மனித இருப்பு நிச்சயமின்மையையும் அச்சத்தையும் போர்த்துகிறது. இதனை இயற்கைப் பொருட்களின் வர்ணனையூடாக, துர்க்குறிகள் காட்டும் இயற்கை நிகழ்ச்சிகளூடாக பெண்கள் கவிதைகள் உணர்த்துகின்றன. முற்றத்து மரங்களில் பூப்பதைக் களவாய் வந்து தின்னும் வௌவால்களால் பூக்கள் கனிகளாவதில்லை. அவை பூக்களாகக் காவு கொள்ளப்படுகின்றன. காற்று எந்தவித ஓசைகளுமற்று கனத்த அமைதியைத் தாங்கிக் கொண்டு நிற்கிறது. விநோதினியின் இருப்பு என்ற கவிதை அச்சத்தை இயற்கைப் படிமங்களூடாக எடுத்துக் காட்டுகிறது.

*வீசும் காற்றில் கனத்திருக்கும் அமைதி*
*இருந்திருந்து ஒற்றைக் குரலில் கத்தும்*
*ஒரு பேர் தெரியாப் பறவை*
*மடி மீது திறந்து கிடக்கும் புத்தகம்*
*காற்றில் அலைபாயும்*
*இருளில் படிந்திருக்கும் அச்சம்*
*வாழ்தல் பற்றிய பயமாய்த்*
*திரண்டெழும் என்னுள்*
*தூரக் கேட்கும் வெடியொலி"* (வினோதினி : 2007: 46)

விநோதினியின் நெடும்பகல் முதலிய கவிதைகளும் மரணம், அச்சம் அதன் வேதனையைத் தான் தருகின்றன.

போர் தனிநபர்களை ஒருவருக்கொருவர் எதிரணியில் நிற்க வைக்கிறது. இராணுவத்தில் சேர்பவர்கள் மனிதத் தன்மையை இழக்க நிர்ப்பந்திக்கப் படுகிறார்கள். அதிலும் ஆக்கிரமிப்பு ராணுவம் தம்மால் ஆக்கிரமிக்கப்படும் மக்களை மிகக் கொடூரமாக நடத்துகிறது. அம்மக்களும் இராணுவத்தினரை மிகக் குரோதத்துடனேயே நோக்குகின்றனர். சில சமயங்களில் போர் தற்காலிகமாக நிற்கும்போதோ சாமாதான ஒப்பந்தங்கள் ஏற்படும் போதோ மீண்டும் மனித உறவுகள் உருவாகின்றன. ஆனால் பிரச்சனை முற்றிலும் தீராததால் அடிப்படையில் பயமும் சந்தேகமும் நீடிக்கிறது. யுத்தத்தை நடத்துவோர் தமது பெண்கள் அன்னிய

இனத்தவர் மதத்தவருடன் நட்புக் கொள்வதையோ பழகுவதையோ அனுமதிப்பதில்லை; அதை மீறுவோர் துரோகிகள், ஒழுக்கம் கெட்டவர்கள் என முத்திரை குத்தப்படுகின்றனர். வினோதினியின் "அவன்" என்ற கவிதை போர் நிறுவனத்திலிருந்து போராளியை, இராணுவத்தில் சேர்ந்திருப்பவரைப் பிரித்துப் பார்க்கிறது. அரச ஒடுக்குமுறையின் பிரதிநிதியாகக் கருதப்படும் இராணுவத்திலிருந்து அதன் அங்கத்தவர் ஒருவரை இவ்வாறு வேறுபடுத்துகிறது. முதற் பார்வையில் அரசியல் விளக்கமற்ற ஒரு செயலாகத் தென்படினும் ஆழ்ந்து படிக்கும்போது நிறுவன அடையாளங்களை நிராகரிக்கும் ஒரு நுண் அரசியல் அக்கவிதைக்குள் இழையோடுகின்றது.

"எல்லாரையும் போல்தான் அவனும்
கையில் சுட ஆய்த்தமாயிருக்கும் துவக்கு
முதுகில் பென்னம் பெரிய பை"

ஆனால் இப்போது சமாதான காலம் என்பதைப் பின்வருமாறு கூறுகிறார்.

*எண்பதுகளில் கண்டது போன்ற முகமில்லை*
*இது மனித முகம் அழகு முகம்*
*.........*
*அவனது பெயர் சிறிலாகவோ பெரேராவாகவோ*
*அன்றி தர்ம சிறியாகவோ இருக்கலாம்*
*..........*
*யாரிடமும் பேசிக் கண்டதில்லை*
*நம்மில் யாரும் பேச விழைந்ததும் காணேன்*
*கடமை நேரம் காலை ஆறு முதல் மாலை ஆறுவரை*
*இட்டலியும் இடியாப்பமும் விருப்பம் என்று தெரிந்தது*
*அவ்வப்போது வீட்டில் சமைப்பதைப் பகிர*
*நினைக்கும் நினைப்பழிய*
*மழைக்கிதமாய் தேநீர் தர எண்ணுதலும் நடவாது*
*ஏதும் இயலா ஏதிலி போல்*
*பேசவாகிலும் முடியுமா என்றால்*
*இல்லை முடியவே முடியாதொரு போதும்*
*மனிதம் மறந்து வன்மம் வளர்க்கும்*
*எம் மனங்களும் பிற மனங்களும் புரியாது*
*அவன் வருவான்; போவான்; வருவான்*
*புதைந்த மனிதரைத் தேடும் விதமாய்*
*......*
*நாளை அவன் கைக்குண்டுக்குப் பலியாகில்*

*என் சிரிப்பை ஒரு கணம் எண்ணி*
*அமைதியுறும் மனதுடன் இறந்துபோகக் கூடும்*
*அல்லது ஊர் திரும்பல் நிகழலாம்*
*அவனது காதலிக்கும் தாய்க்கும்*
*என்னைப் பற்றி ஏதாவது சொல்லவும் கூடும்*
*அழகு முகங்கொண்ட அவன்*
*சிறிலா, பெரேராவா அன்றி......* (வினோதினி : 2007)

அவன் என்னும் தலைப்பிலான இக்கவிதையில் மனித உறவுகளும் மனிதத் தொடர்புகளும் அடையாள அரசியலால் துண்டாடப்படுவது பற்றி வினோதினி பேசுகிறார். பழக்கம் காரணமாக ஏற்படக்கூடிய தொடர்பும் உறவும் நிர்ப்பந்தத்தினால் இல்லாமல் போகிறது; மனித இயல்பு செயலற்றுப் போவதால் "மனிதம் மறந்து வன்மம் வளர்ப்பதால்" ஏற்படும் வலியைப் பேசுகிறார். மேலே கூறியது போல நிறுவன அடையாளங்களை நிராகரிப்பதாகத்தான் எளதையுமே குறிக்காமல் பால் அடையாளத்தை மாத்திரம் வைத்து 'அவன்' என்று கவிதைத் தலைப்பையும் உருவாக்கியுள்ளார்.

இலங்கையில் இனத்துவப் பிணக்குகளும் அரசியல் வன்முறையும் போரும் மக்களின் வாழ்வை வெகுவாகப் பாதித்த காலத்திலேயே பெண்களின் கவிதையாக்கமும் வலுப்பெற்று வளர்ந்தது. அவர்கள் தங்கள் கவிதைகளில் இக்காலத்தில் நிலைமைகள் பற்றிய கருத்துக்களைப் பதிவு செய்துள்ளனர். போரையும் மரணத்தையும் நிராகரித்து வாழ்க்கைக்காக வேண்டுகோள் விடுப்பதாகவே அவர்களது குரல் கவிதைகளோடு ஒலிக்கிறது.

**சான்றாதாரம்**


1. அனார் (2007) *எனக்குக் கவிதைமுகம்,* காலச்சுவடு பதிப்பகம், நாகர் கோவில்.
2. ஔவை (2000) எல்லை கடத்தல், சென்னை
3. சன்மார்க்கா (1986) "ஒரு தாயின் புலம்பல்", *சொல்லாத சேதிகள்,* பெண்கள் ஆய்வு வட்டம், யாழ்ப்பாணம்.
4. சிவரமணி (1993) *சிவரமணி கவிதைகள்* பெண்கள் ஆய்வுவட்டம், மட்டக்களப்பு.
5. சொல்லாத சேதிகள் (1986) பெண்கள் அய்வு வட்டம், யாழ்ப்பாணம்.
6. பஹிமாஜெகான் (2007) ஒரு கடல் நீரூற்றி, பனிக்குடம் சென்னை.
7. மங்கை அ. (2007) *பெயல் மணக்கும் பொழுது,* மாற்று, சென்னை
8. பெண்ணியா (2006) *எனது கவிதைக்கு எதிர்த்தல்* என்று பெயர் வை, ஊடறு
9. வினோதினி (2007) *முகமூடி செய்பவன்* காலச்சுவடு பதிப்பகம், நாகர் கோவில்.

# பெண்நிலைவாதமும் தேசியவாதமும் : ஈழத்துப் பெண் போராளிகளது எழுத்துக்களின் அடிப்படையில் சில புரிதல்கள்

*செ. யோகராசா-*

**பெ**ண்நிலை வாதத்திற்கும் தேசியவாதத்திற்கும்/தேசிய விடுதலைப் போராட்டத்திற்குமிடையிலான தொடர்பு சிக்கலானது, பிரச்சினைகளையோ குழப்பங்களையோ தோற்றுவிக்கக்கூடியது. இவ்வாறான தொடர்பில் ஈழத்துப் போராட்டச்சூழலில் மூன்று நிலைப்பாடுகளை இனங்காணலாம்.

i. பெண்விடுதலை தேசியப் போராட்டத்திற்கூடாகச் சாத்தியப்படாதது (எ–டு: ராதிகா குமாரசாமி)
ii. தமிழ்ப்பெண்கள் போராளிகளாக, மாறியதனூடாகச் சாத்தியமாகக் கூடியது (எ–டு : அடேல்ஆன் பாலசிங்கம்)
iii. தமிழ்ப்பெண்கள் போராளிகளாக மாறியிருப்பினுங்கூட, பெண்விடுதலை கிடைப்பது ஐயத்திற்குரியது (தரணி ராஜசிங்கம்)

மேற்கூறிய எத்தகைய நிலைப்பாடுகளுடனும் தொடர்புபடாது, அவற்றிலிருந்து வித்தியாசப்பட்டு, ஈழத்துப்பெண் போராளிகளது எழுத்துக்களூடாக, (அனைத்து விடுதலைப் போராட்டக் குழுக்களினதும் எழுத்துக்களை குறுகிய காலத்தில் பெற முடியாத நிலையில்) குறிப்பாக தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் சார்ந்த பெண் போராளிகளது எழுத்துக்களின் அடிப்படையில், நடைமுறையில் பெண் நிலைவாத – தேசியவாதக்கருத்து நிலைகளை எவ்வாறு புரிந்து கொள்ள முடிகின்றது என்பதனை வெளிப்படுத்துவதாக இவ்வுரை இடம் பெறுகின்றது.

போராளியாக, தமிழ்ப்பெண் ஏன் மாறினாள் என்பது பற்றி முதலில் கவனிப்பது பொருத்தமானது. இவ்வழி, ஒன்றுக்கு மேற்பட்ட காரணங்கள் மேற்கிளம்புவது கவனத்திற்குரியது :

i. தமிழ்ச் சமூகத்தின் மீதான நீண்டகால ஒடுக்கு முறைகள் :

ஏறத்தாழ எண்பதுகள் தொடக்கமான அரசியற் சூழல் தமிழ்ப் பெண்ணிற்கு மேற்கூறியவற்றை கண் கூடாக உணர்த்தியிருக்குமென்பதில் தவறில்லை "பூக்களையும் புட்களையும் புன்னகையையும் காதலையும் இரசிக்க வேண்டிய காலத்தில் எழுத வேண்டிய காலத்தில் எம் வாழ்வின் மீது நெருப்புக் கொட்டியதால்

விடுதலையை அவாவி வெடியாகவும் இடியாகவும் தீவிரவாதமுமாகவே எனது குரல் வெளிவந்தது.... எமது தலை விதியை இன்னொருவர் தீர்மானிக்க வேண்டாம் நான் நானாகவும் நாம் நாமாகவும் வாழவேண்டும் எம் மாந்தர் துயரமழிந்து வாழ்வு சிறப்புற வேண்டும்..

எனப் பொதுவாகவும். 1 :

*"இன்று*
*இவர்கள்*
*பிரச்சினையென்று பிரகடனப் படுத்துவதெல்லாம்*
*இராணுவத்தின் வருகையும் அவசரக்காலச் சட்டமும்*
*பொருளாதாரத் தடையுமே*
*இன்று இவைகள்*
*எடுபடலாம்*
*நாளை மொழியில் சமவுரிமை*
*பல்கலைக்கழகப் புகுவுரிமை*
*கிழக்கில் குடியுரிமை*
*மலையக மக்களின் பிரஜா உரிமை*
*இல்லை என்பதை*
*இவர்கள் உணர்வார்கள்*
*அப்போது அறிவார்கள்*
*அடிமைச்சாசன*
*இன்னும்*
*அழித்தெழுதப்படவில்லை"*

என்று வெளிப்படையாகவும் 2 : பல இடங்களில் வெவ்வேறுவிதமாய் போராளிகள் குறிப்பிட்டுள்ளமை மனங்கொள்ளத்தக்கது.

ii. இவை மட்டுமன்று பெண்கள் மீது இழைக்கப்படுகின்ற கொடுமைகளும் மனப்பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. 3 :

*என் உள்ளத்திலிருந்து*
*உரைக்கின்றேன்*
*கற்பதைத் தவிர இம் மண்ணில்*
*எவையும் நான் செய்யவில்லை*
*துப்பாக்கி முழக்கத்தின் தூரத்திலேயே*
*எப் போதும் இருக்கவிரும்பினேன்*
*துயரச் சுமைகளை*
*எம் சந்ததி சுமந்த போது*
*என்தோள் மாற்றி இளைப்பாறிட வேண்டும்*

என்ற எண்ணம்
ஒருபோதும் உதிக்கவில்லை
என் விருப்புகள்
படிப்பு,
பட்டம், தொழில், திருமணம்
என்ற
திசைகளை நோக்கியே சிறகடித்தன
வேலிக்கு வெளியே தலை நீட்டிப் பார்ப்பதை
ஏற்க முடியாத என் ஊரின் காவலிடப்படாத நாட்களில்
நான் கள வாடப்பட்டேன்
உயரப்பறக்க முனைந்த எனது சிறகுகள் வெட்டுண்டு
பூமியின் அடியில் புதைந்து போயின
எப்படிச்செத்தேன் மானம் பெரிதென
வாழ்ந்த குலமரபில் நான் கசக்கப்பட்டிறந்தேன்
என்று எவர்க்குச்சொல்ல?
நரக வெயியில் பல மிருகங்களால்
குதறப்பட்ட பின்பு சாவலியுடன்
துடித்திறந்த என்னிதயம் ஓலமிட்ட உண்மைகள்
இங்கெவர்க்குமே கேட்கவில்லை
ஒலியடங்கி ஒலியடங்கி
மெல்ல மெல்லச் செத்துப்போவது
எப்படியென்று பார்த்து ரசித்த
புண்ணியவான்களுக்காக ஒரு பாவமும்
செய்யாது என்னைப் பலி கொடுத்தேன்
யுத்தத்தின் கோரமுகங் கண்டொழித்த
என் விழிகள் அமைதிக்காகவோ பிடுங்கியெறியப்பட்டன?

தேச விடுதலையுடன் பெண்விடுதலையும் கிடைக்குமென்ற நம்பிக்கையுடன் விடுதலை போராட்டத்தில் ஈடுப்படுவோருமுள்ளனர். இவ்விதத்தில் போராளிக் கவிஞை ஒருத்தியின் அழைப்பு இது. 4 :

வீட்டுக்குள்ளிலிருந்து
விசும்பிக் கொண்டிருப்பது யார்
நீதானா
பெண்ணே
அடர்ந்த இருளுக்குள்
அப்படி என்ன தேடுகிறாய்
சூரியனையா

*சூரியன் உதித்தே*
*சுதந்திரம் கிடைக்குமென்ற*
*சூத்திரத்தை இனிமேல் மறந்துவிடம்மா*
*ஏனென்றால்*
*சூரியனின் சுதந்திரம் கூட நீள் வட்ட பாதைக்குள்*
*மட்டுப்படுத்தப் பட்டதுதான்*
*இருள் எங்களைத் தாங்க மட்டுமல்ல*
*தொலைக்கவும் வைத்து விடுகிறது*
*உன்னைச்சுற்றி*
*உட்கார்ந்துகொண்டு*
*ஊளையிடுபவர்களை*
*உயர்வென்று ஒதுங்கிவிடாதேயம்மா....*
*பூட்டிய வீட்டுக்குள்ளே புழுங்கிக் கிடந்தது போதும்*
*புறப்பட்டுவா*
*மந்தைக்கூட்டமாய்*
*மனிதரெல்லாம்*
*முடங்கிக் கிடந்த*
*கதை எங்கள் முந்தையருடனே முற்றுப்பெறட்டும்*
*பள்ளியறைகளிலே புள்ளிமான்களென*
*போதையுடன் கூறிப் பெண்ணின் பெருமைகளை மட்டுமல்ல*
*கொம்புகளையும் கூட குட்டையாக்கிவிட்டார்கள்*
*பெண்ணே துடைத்துவிடு கண்ணீரை*
*உடைத்துவிடு*
*உன் விலங்குகளை*
*வெளியே வா*
*வெளிச்சம் மட்டுமல்ல*
*விடியலும் காத்திருக்கிறது"*

மேற் கூறிய காரணங்களால் முற்குறிப்பிட்ட விடுதலை இயக்கத்துடன்சேர்ந்து விட்ட பெண்கள் – போராளிகள் என்ற நிலையில் அதாவது போராளிப்பெண்கள் என்ற விதத்தில் தங்கள் மன உணர்வுகளைப் பல விதங்களில் வெளிப் படுத்த முற் பட்டுள்ளனர். தங்களது வீரமும் மன உறுதியும் விவேகமும் அர்ப்பணிப்பும் பெருமைப்படுவதற்குரியதாகக்கருதி பெருமிதத்துடனும் தன்னம்பிக்கையுடனும் அவற்றை எடுத்துரைக்கின்றனர். 5 :

*சாக்கரம் நெரித்த காலம்*
*அவளைக் காலனுவாகவும் இடத்தில் திரியவிட்டது*
*சதாசிந்திக்கும் விழிகளுக்கும்*

நிதானித்து வெளிவரும் சொற்களுக்கும்
சற்றே வளைந்து தழும்புகள்பட்டு
கறுத்த கால்களுக்கும்
எண்ணெயின்றி வெயில் படிந்து சிவந்து வெட்டப்பட்ட
கூந்தலுக்கும்
அவளைச் சொந்தக் காரியாக்கியது வெறி
கொண்டலையும் யுத்தப் பேய்களிடை
அமைதி வாழ்வுக்காய்
துப்பாக்கி தூக்கித் திரியும்
அந்தப் பெண்ணுக்கு
வீரமிக்க வாழ்வைக் கொடுத்தது எம் வரலாறு
வீண் பிதற்றல்களின்றி
வேண்டிய வற்றை மட்டுமே பேசக்
கற்றுக்கொண்டிணரந்தாள் அவள்
எல்லையில் எதிரிக் கெதிராய்
ஒரு அணியை வழி நடத்தும்
புலித் தலைவியாய் மாறியிருந்தாள்
முன்பு எங்களிடை உலா வந்த குறும்புச்சிறுமி
இப்போது அவள் அழகாயிருக்க வில்லை
ஆரோக்கியமாகக் கூட உலாவவில்லை
வெட்கமுற்று ஒதுங்கிச் சிரிக்காமல்
ஆளுமை நிறைந்து நடக்கும்
அவளே எழுதுவாள்
எம் அழகிய காலம்"

காலங்களில் பெண்கள் செய்யும் சாதனைகள் நினைவு கூரப்படுகின்றன. 6 :

"பேய்கள் இருந்து
உலாவுதாய் நம்பிய
இடுகாட்டில் நடு நிசியில்
பயம்கொன்றே
சோதரிகள் எல்லைக்காவலில் தூங்காதிருப்பர்
அலைகள் கோபமுறுவதாய்
கடல் சேரத் தயங்கிய அவர்கள்
வெடி மருந்தும் படகோடு அலையேறிப்
பகை தேடினர்
கணவன் துணையென்று
கூறிய சமுகத்திலிருந்த பெண்ணொருத்தி தனியக் கிளம்பி

*தடையுடைத்துத் தற்கொலை செய்தாள் பகையுலவும் குகையுள்*
*வெற்றிச் சமருக்காய்*
*உருமாறி ஒருத்தி*
*உளவு பார்க்கச் சென்றாள்.”*

மேற்கூறியவான மன உணர்வு வெளிப்பாடுகளுக்கெல்லாம் அடிப்படைக் காரணமொன்றுள்ளது. ‘போராளி’ என்பதோடு தாம் பெண் என்ற நிலையி லிருப்பதும் பெண் போராளிகளின் அடி மனதிலே உறைந்துள்ளதென்று கூறத் தோன்றுகிறது இவ்விதத்தில் பின்வரும் மேற்கோளை ஊன்றி அவதானிப்பது அவசியமானது. 7 :

‘சொல்லாத சேதிகள்’

சொல்லாமல் இதுவரை மறைவில் இருந்த செய்திகளை சொல்வதற்கு எனக்கு கிடைத்த வாய்ப்பை எண்ணி மகிழ்கின்றேன் நடக்க முடியாதது என்று சமூகத்தால் கருதப்பட்டவை எல்லாம் நடத்தி முடிக்கும் வாய்ப்பு எங்கள் பெண்களுக்கு கிடைத்தது அதனாலேயே அவர்களை எழுதும் வாய்ப்பு எனக்குக்கிட்டியது.

எங்களது விடுதலைப் போராட்டத்தேரை இழுத்துச்செல்கின்ற ஆயிரம் பல்லாயிரம் லட்சம் பேரில் ஒருவரான மலைமகள் யார் என்பது இங்கு முக்கியமல்ல. இந்த மண்ணின் பெண்கள் யார் எத்தகையவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை உலகிற்குச் சொல்ல வேண்டும். இதுவே நோக்கம் நிகழ்ந்து முடிந்துள்ள அற்புதங்கள் பலவற்றிற்கும் அடிவேர்களாக இவர்களே இருக்கிறார்கள் செயல்களை செய்த பின்பும் எந்த ஆரவாரமுமின்றி, அமைதியாக, தம் அடுத்தடுத்த பணிகளே மூழ்கிப் போய் விடுவதால் இவர்களின் இருப்பு எவருக்கும் தெரிவதில்லை. இவர்களை உலகிற்கு அறிமுகப்படுத்த நான் விரும்புகிறேன்... நடைமுறை வாழ்வியல் அசைவியக்கத்தின் அச்சாணியாகப் பெண்கள் இருக்கின்ற போதும் அவர்கள் கௌரவிக்கப்படுவதில்லை என்ற கோபம் எனக்கு நிறையவே உண்டு பெண்கள் என்ற ஒரேயொரு காரணத்துக்காக, விளைவை ஏற்படுத்த வல்ல செயல்களைச் செய்து விட்டும் பேசாதிருப்பவர்கள் என்பதற்காக, நாலாதிசையும் விரிந்து பரந்திருக்கும் தமிழீழப் பேரரங்கில் ஓய்வு எடுக்கவும் நேரமின்றி எப்போதும் என் தோழிகள் பேசப்படாதவர்களாகப் போய் விடுவார்களோ என்ற பயத்தினாலேயே நான் எழுத முனைந்தேன். (அடிக்கோடு கட்டுரையாளரால் இடப்பட்டுள்ளது)

பெண்ணொருத்தி ‘குடும்பப்பெண்’ ‘அலுவலகப்பெண்’ என்ற நிலையில் நோக்கப்படுவது போன்று போராளிப்பெண் என்ற நிலையில் நோக்கப்படுகின்ற தொரு நிலைமை போராட்டச் சூழலில் ஏற்படுகின்றது என்பதனை இவ்வேளை மனங் கொள்வது அவசியமாகின்றது அத்தகைய நிலையில் அப்பெண் ‘வீட்டிலும்’

வெளியிலும் எதிர் கொள்கின்ற பிரச்சினைகள், மனப்போராட்டங்கள் கவனத்திற் குரியனவாகின்றன.

மேலே 'வீடு' என்று குறிப்பிடப்பட்டது போராளிப் பெண்ணைப் பொறுத்தளவில் அவளது முகாம் வாழ்க்கையையே யாகும். முகாம் வாழ்க்கையின் அன்றாடப் பொழுதுகள் – உணவு வேளைகள், உறக்க வேளைகள், பொழுது போக்குகள் குடும்பப் பெண்கள் போன்று பலவாகும். வெளியுலகிலும் ஏனையோருக்கு தெரியாத வையாகும், புதியனவாகும் இவை பலவற்றையும் உள்ளடக்கி வெளிவந்த புதிய கதைகள். 8 :

என்ற சிறுகதைத் தொகுப்பிலுள்ள சிறுகதைகள் அன்றாட உணவுப் பொழுதுகள், சக போராளிகளுடான நட்பு, பாசம்,பொழுது போக்குகள், அபிலாஷைகள், வீட்டு நினைவுகள் எனப் பலவற்றையும் வெளிப் படுத்துகின்றன இவற்றை வாசிக்கின்றபோது தான் போராளிப்பெண் என்ற நிலையும் குடும்ப/ அலுவலகப் பெண்களது நிலை போன்று தனிப்பட்டதொன்று என்பதனை உணர முடிகிறது.

முன்னர் குறிப்பிட்டது போன்று போராளிப்பெண்கள் வெளியே எதிர்கொள்ளும் பிரச்சினைகளும் பலவாகும். இவ்விதத்தில் அவர்களைச் சமூகம் எவ்வாறு நோக்குகின்றது என்பது முதன்மை பிரச்சினைகளுளொன்றாகிறது இவ்விதத்தில் நாவலொன்றின். பின்வரும் சிறுபகுதி குறிப்பிடதக்கது : 9

| | | |
|---|---|---|
| அரங்கம் | : | பருத்தித்துறை துறைமுகம் |
| காலம் | : | 1993 நடு |
| பார்வையாளர் | : | துறைமுக அடியில் நின்ற திண்ணை மாநாட்டாளர்கள் |
| நடிகர்கள் | : | கடலில் கைகளை வீசி கால்களை அடித்தவாறிருந்த சில தலைகள் |

காட்சி புள்ளிகளோ கோடுகளோ விழாமல் மிகத் தெளிவாகத் தெரிகிறது. கடலில் கொஞ்சம் மனிதர்கள் நீந்துகிறார்கள் அது தெரிகிறது யார் அவர்கள் ? அரைக் காற்சட்டைகளை அவர்கள் அணிந்திருக்கிறார்கள்.

ஆம்பிளையளே

தலையில் முடி கொண்டையிட்டிருப்பது போலவும் தெரிகிறது

'பொம்பிளையளோ?

என்ன, பொம்பிளைகளோ?

அதுவும் காற்சட்டையளோடையோ ?

கடல் பொங்கி ஊரை அழிக்கிறதுக்குத்தான் உந்தன் கூத்து எல்லாம் நடக்குது,,

அப்படியெண்டா வெள்ளைக் காரனின்ற கடலு மெல்லோ பொங்க வேணும் அங்கே எல்லாரும் தானே குளிக்கினம் இது ஒருவர் அது ரோச மில்லாத கடல் பேசாமல் கிடக்கும் எங்கட கடல் அப்படியே இது மற்றவர்"

உறவினர் வீடு உள்ளே சென்ற போது இவ்வாறு பார்க்கின்றது. 10 :
"நளினி பெரிய பிள்ளை ஆகிற்றா...
வாழ்த்துக்கள்
இது இப்ப

ஓம் பிள்ளை இது குமருகளை வச்சிருக்கக்கூடிய பாதுகாப்பான இடமில்லை.... நிசாந்தியால் இப்ப போசாமல் இருக்க முடியவில்லை நாங்களும் குமர்தானே என்றாள்.

அது சரி பிள்ளை, நீங்கள் வளர்ந்த முறை அப்படி எல்லாரும் நீங்களா இருந்தா உங்கள்ள என்ன சிறப்பு இருக்கும்.."

அதே வீடு போராளிகள் திரும்பும் போது இவ்வாறு சொல்கிறது. 11 :
"பூமணியும் சின்னச்சாந்தியும் தங்களால் நம்ப முடியாத ஒரு கதையைக் கேட்டதால் திகைத்துப் போய் நின்றனர் ஐயா நீங்கள் தான் சொல்லுறியளோ? அவர் தலையைக் குனிந்தவாறு, ஓம்பிள்ளை வாற கிழமை பள்ளிக்கூடம் லீவு பிள்ளையள் வந்திரும் நீங்கள் இஞ்ச வந்து போனா நான் என் பிள்ளையள இழக்க வேண்டியே வரலாம் ப்ளீஸ், தயவு செய்து இனிமே வாராதையுங்கோ"

சில சந்தர்ப்பங்களிலே சக போராளிகள் சிலரது பார்வை இவ்வாறு வெளிப்படுகிறது. 12 :

"அதிகாலையில் வீட்டின் பிற வேலிக்குள்
பேச்சுக் குரல்கள் கேட்டன
ஆர் மச்சான், அக்காக்களே?
ஏனாம் வந்திருக்கினம்
யாழ்ப்பாணம் போகப் போகினம்
இவைக்கேன் தேவையில்லாத வேலை
மச்சான், சுற்றிவளைப் பெண்டா எப்படியும் ஓடலாம்
இதுகள் என்ன செய்யும் இவைக்குத் தேவையில்லாத வேலை
பாவமாகக் கிடக்கு ஆ..... பயிற்சியோட
அதுகள் கழருவினம் பாரன்"

அதுக்கில்லையக்கா இந்த பயிற்சி கஷ்டம் நாங்கள் ஆம்பிளையன் சமாளிப்பம் நாங்கள் ஆம்பளையன் இல்லத்தான் ஆனா சமாளிப்பம் ... அதென்ன ஆம்பிளை, பொம்பிளை? அண்ணை எங்களை அப்படிப் பாக்கேல்ல வீடு சார்ந்த

சிந்தனைகள்,நினைவுகள், மனப் போராட்டங்கள் முதலானவற்றிற்கு முகம் கொடுப்பவர்களாகவும் போராளிப் பெண்கள் விளங்குகின்றனர். 13 :

மகள் – தாய்ப்பாசம் அவர்களை ஆட்டிப்படைக்கிறது. 14 :

தாய் – மகள் பாசம் அடிக்கடி வாட்டுகிறது. 15 :

*"மாரிக்குளிரில் நனைந்திடினும்*
*தணல் பூத்துக் கிடக்கிறதெனதுள்ளம்*
*துன்பத்துக்கும் துயரத்துக்கும்*
*உன்னை வாரியணைக்க முடியாத*
*தாயானேன் நான்*
*ஒரு அழகிய காலையை*
*உனக்குக் காட்ட முடியாத*
*வசந்த காலத்தில்*
*விளையாட முடியாத*
*பாலைவன நாட்களையே*
*உனக்குப் பரிசளிக்கின்றேன்*
*.......................................*

சகோதர பாசம் அவ்வப்போது தலை நீட்டுகின்றது. 16 :
வீட்டார் அனைவரும் – அனைத்தும் மறக்கமுடியாதவர்கள், மறக்கமுடியாதவைகள். 17:

"என் இதயத்தினுள்ளே ஓர் இரகசிய அறை அங்கே காலைச் சமையலுக்காய் அக்கா காய் கறி நறுக்கிக் கொண்டிருப்பாள் பரீட்சைக்காய் பாடங்கள் படித்தபடி என் தங்கை தம்பி எங்கே நிற்கிறானோ ஏக்கத்தோடு சுவரில் முதுகு சாய்த்தபடி அம்மா வாலை ஆட்டி விரல்களை நக்கும் ஜிம்மி வாசலில் சுருண்டபடி.."

மறுபுறத்தில், சக போராளிகள் மீதான மதிப்பும் பாசமும் அடிக்கடிவெளிப் படுகின்றன. 18 : இத்தகைய உணர்வுநிலை இயல்பானதுதான் ஆயின், எதிரிகள் மீதும்மதிப்பும் மனிதாபிமான நோக்கும் வெளிப்படுவது வியப்பிற்குரியது. 19 :

இன்னொரு புறத்தில் சமுகத்திலுள்ள ஏனைய பெண்களது துயரங்கள் – பிரச்சினைகள் – நினைவுகள் என்பனவும் போராளிப்பெண்களது உணர்வுகளை ஆட்கொண்டிருப்பது கவனிக்கத்தக்கது. மேற் கூறிய நிலையில் விதவைப் பெண்களது துயரங்கள் தனி நூலொன்றெழுவதற்குக்கூட வழிவகுத்துள்ளது எல்லைகாக்கும் இல்லங்கள் என்ற அந்நூல் இரு விதங்களில் முக்கியத்துவம் வாய்ந்த தொன்று ஒன்று : போராளிகளல்லாத தமிழ்பெண் தனது போராட்டத் திற்கான மறைமுகப்பங்களிப்பினை அது வெளிப்படுத்துவதாகக் கருதப்படுவதை பின்வரும் மேற்கோள் வெளிப்படுத்துகின்றது. 20 :

“சிங்களப்படைகளுடனான மோதலில் மக்கள்படை பங்கேற்பிற்கான ஆவண மாகவும் போரில் நேரடியாகப் பங்கு கொண்டதோடு மட்டும் நின்றுவிடாமல் மறைமுகமாகவும் போராட்டப்பளுவை தோளேற்றிக் கொண்டு எழுந்து நிற்கும் தமிழீழப் பெண்களை அவர்களது குடும்பத்தை குழந்தைகளை உலகறியச் செய்யவும் இந்த முயற்சி ஒவ்வொரு குடும்பத்தலைவியைச் சந்தித்து மீள் கையிலும் போராட்டத்தின் பாதிச்சுமை மட்டுமல்ல, பாதிக்கும் மேலான சுமை தமிழீழப் பெண்களின் கரங்களிலும் என்பதை நிதர்சனமாகக் காணக் கிடைத்ததில் கவலையா பெருமையா என்பதை என்னால் இனம் பிரிக்க முடிய வில்லை ... இந்த வீரர்களின் ஈகங்களால் மட்டுமல்ல எதையும் தாங்கும் திட மேற்று நிற்கும் இந்த இல்லங்களின் அரசிகளாலுமே என்பததை இந்த இல்லங்களின் உள்ளே நுழைகையில் உங்கள் அனைவராலுமே புரிந்து கொள்ளமுடியும்..”

மற்றொன்று, இந்நூல் தொடர்பான ஆண் போராளியொருவரின் மதிப்பீடு அது பின்வருமாறு. 21 :

“நிகழ்கால வாசகர்களும் எதிர்காலச் சந்ததியினரும் நம் நினைவில் கொள்ள வேண்டிய வரலாற்றை பதிவாக்கியதில் தமிழவளுக்கு உரிமை உள்ளது. ஆனாலுங் கூட, எல்லைப்படையினராய் இந்த மாவீரர்கள் களமாடி வென்றதும் வீழ்ந்ததுமான அன்றைய நெருக்கடி மிகுந்த நாட்கள், எதிரியின் ஆக்கிரமிப்புக் கொடுமைகள் என்பனவும் மேலும் அன்றைய போர்கள நிலவரத்தில் எல்லைப் படையினரது பங்குபற்றல் எமக்கு ஏற்படுத்திய சாத்தியங்களும் இன்றும் சற்று விரிவாகச் சொல்லப் பட்டிருக்கக் கூடுமோ என எண்ணத் தோன்றுகிறது போரின் பின்னே அணிதிரண்டோரின் குடும்பச்சுமை மூலமாக இன்னொரு மறுபக்கத்தையே தனது பேசுபொருளாக தமிழவள் எடுத்தாண்டிருப்பது புரிந்து கொள்ளப்படடத இவ்வரலாற்று நிகழ்வுகளின் காலத்தில் எங்க மக்களும் போராளிகளும் சுமந்த பாரச்சிலுவையின் சுமை தெரியாமல் வாசிப் பவர்களுக்கு இந்நூலின் நாயகர்கள் இந்த உயர் தியாகத்திற்கு உந்தப் பட்டது எவ்வாறு என்பது புரியாமல் போய்விடுமோ என்ற ஆதங்கத்தில் எழும் வினாவிது..”

எனினும் மேற்கூறிய மதிப்பீட்டினை ஆழ்ந்து நோக்கும் போது ஆண் மனமொன்றின் மன உணர்வுகள் மேலேங்கியிருப்பதாக எழுதியவரான தமிழவள் பேராளி என்பது மட்டுமன்றி ஒரு பெண் என்பதனை புரிந்து கொள்வதில் சறுக்கல் ஏற்பட்டிருப்பதாக – கருத்தோன்றுகிறது ! எவ்வாறாயினும் விதவைப் பெண்ணின் துயரம் இன்னொரு (போராளிப்) பெண்ணின் மனதில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள தென்பதே கவனத்திற்குரியது.

தமிழச்சமூகத்தின் சீதனக் கொடுமையும் (போராளி) பெண் எழுத்தாளர்கள் கவிஞர்களைச் சிந்திக்கத்தூண்டியுள்ளது. சீதனப் பிரச்சினை காரணமாக திருமணம் செய்யாதிருக்கின்ற – அல்லது, வயது கடந்த பின் திருமணம் செய்கின்ற பெண்கள் பற்றி – பல படைப்புகள் உருவாகியுள்ளன. எ–டு: பந்தயக் குதிரைகள் (கவிதை). 22 :

*"வாழ்க்கை எனும் மைதானத்தில்*
*வயசுக்கும் எங்களுக்கும்*
*ஓட்டப்பந்தயம்*
*ஒலிம்பிக்கை உலுப்பிவிட்ட*
*பி. டி உஷாவும் பென்ஜான்களும் கூட*
*எங்களுக்குப் பின்னாடிதான்*
*வந்து கொண்டிருக்கிறார்கள்*
*வழி நெடுக*
*வரதட்சணைத் தடைகள்*
*தாண்டிக்கொண்டுநாங்கள்*
*தாவிப்பறந்தாலும்*
*நடுவர்களாயிருக்கும்*
*நச்சு மனம் கொண்டவர்கள்*
*சாதிமதம் சாதகப் பொருத்தமென்று*
*சதித்திட்டம் தீட்டுவர்*
*சாணேற முழஞ்சறுக்கும்*
*கதைதான்*
*என்றாலும்*
*களைப்பதேயில்லை நாம்*
*தரகர் வீட்டுத் தகரப் படலைக்கு*
*னம் நடந்து போகின்ற எம்*
*பெற்றவர்களின் பாதங்களுக்கு விடுமுறை கிடைத்திடவும்*
*நரை விழுந்து*
*நாற்பது வயதான பின்பும்*
*எங்களுக்காய்த் தங்கள் வாழ்வைத் தியாகம் செய்யும்*
*உடன் பிறந்தவர்க்கு ஓர்*
*உதயத்தைக்காட்டிடவும்*
*ஓடுகிறோம் நாங்கள்*
*கால ஓட்டத்தால் எமது*
*தலைமுடியில் ஒன்றிரண்டு*
*தங்கக் கம்பிகளாய் மின்னும்*
*இதனால் எங்கள்*

*எழிலும்*
*சற்றுக்குறையும்*
*எழில் குறைந்தாலும்*
*தாரம் என்னும் விருதினைப் பெற்றிட தாவிக்கொண்டு ஓடுகிறோம்"*

*மற்றொரு கவிதை. 23 :*
*நான் உன்னைக்கடந்து செல்லும் அந்தக் கணங்களில்*
*பெண்ணாய் பிறந்ததுக்காய் நீ பிரசவிக்கும் பெரு*
*மூச்சு என்னை சலுப்பும் பெற்றெடுத்த தாய்க்குப்*
*பெருஞ் சுமையாய் இருப்பதாக எண்ணி நீ விடுகின்ற*
*கண்ணீரே என்னைக் கரைக்கும் பருவமடைந்த*
*நாள் முதலாய் உன்னைப் பெண்பார்க்க வந்தவரின்*
*பாதங்களைத் தொட்டுத் தொட்டு உன் பார்வை*
*பரிசுத்தம் கெட்டிருக்கும்*
என்று, பிறிதொரு கோணத்தில், திருமணஞ்செய்யாத பெண்ணின் நிலையைப் படம் பிடிக்கின்றது.

மேற்கூறியவாறு பிற பெண்களது துயர்கண்டு வேகும் –குமுறும் மனநிலையின் தர்க்கரீதியான வெளிப்பாடாக, பெண்நிலைவாதப் பிரக்கஞையுடன் தமது உணர்வுகளை வெளிப்படுத்துகின்ற நிலையும் போராளிப்பெண்களிடம் உருவாகின்றது இவ்விதத்தில் சிறந்த எடுத்துகாட்டாக, கதவுகள் திறந்துதான் உள்ளன என்ற சிறுகதை காணப்படுகின்றது. 24 :

"தலைமுறை தலைமுறையாகவே புத்திக்கூர்மையும் ஆளுமையும் என்னுள் கடத்தப்படுவதாக உணர்கின்றேன். எப்போதுமே எதையுமே சாதிக்கக்கூடிய ஆற்றலுடன்தான் நான் இருந்துவருகிறேன். எந்தப் பெரிய நிர்வாகத்தையும் சிக்கலின்றி இயக்கக்கூடிய ஆளுமை பண்டு தொட்டு என்னிடம் இருந்து வருகிறது ஆனால், என் புத்திசாலித்தனத்தை தம் புத்திசாலித்தனத்தால் சந்திக்காமல் தம் அதிகாரத்தால் என்னை அடக்க முனையும் மனிதர்களே இந்த உலகில் பெரும் எண்ணிக்கையில் என் முன் உலாவுகிறார்கள் ..... அல்லது அன்பு என்னும் போர்வையில் கட்டுப்போட்டு முடக்க முயலுகின்றார்கள். இரண்டு வழிகளுமே சரிவராத நிலையில் எனக்கு 'அடங்காப்பிடாரி" 'ஒரு மாதிரி' என்ற பட்டங்களைச் சூட்டிவிட்டு விலகி நின்று வீண் விமர்சனம் செய்து என்னை மழுங்கடிக்க முயலுகின்றார்கள் நாலு பேருக்கு முன்னால் என்னை அறிவுபூர்வமானவள் உணர்வுபூர்வமானவள் என்பதை அவர்களால் ஏற்றுக்கொள்ள முடிவதில்லை..."

என்று தொடங்கும் அப்படைப்பு, நீண்ட கால இந்திய, தமிழ்ச்சமூகத்தில் பெண்கள் அடக்கப்பட்டு வந்த சம்பவங்களை இதிகாசக் கதைகளூடாக வெளிப்

படுத்துகின்றது. சங்கரியின் 'அவர்கள் பார்வையில்' என்ற கவிதை பொது நிலையில் பெண்கள் பற்றி கடைக்காரன் தொடக்கம் கணவன் வரையிலான நீண்ட காலப் பார்வையை வெளிப்படுத்துவது போன்று இச்சிறுகதை இலக்கிய நிலையில் நீண்ட காலமாக பெண்கள் பற்றிய இதிகாசப் பாத்திரங்களின் பார்வை எத்தகைய தென்பதனை வெளிப்படுத்துவது குறிப்பிடத்தக்கது. 25 :

இச்சிறுகதையின் முடிவுப் பகுதி கவனத்திற்குரியது:

"என்னை அறிவால் மடக்குவதில் தோற்று, பின் என் உணர்வுகளைக் கொச்சைப்படுத்தி இழிவு படுத்தி என்னை ஏறி மிதித்த இவர்கள் இப்போது என்னவென்றால் என் உரிமைக்காகத் தாம் குரல்(?) எழுப்பப் போகிறார்களாம் என் விடுதலைக்காகத் தாம் வழியமைக்கப் போகிறார்களாம். என்னைத் தம் பின்னால் வரட்டாம் எப்படியிருக்கிறது?

அடப்போடா பைத்தியக்காரா ! அன்றொரு நாள் ஜனகனின் மகா சபையில் உன் தலை அறுந்து விழுந்து விடும் என்று நீ கத்தினாயே அன்றே நான் உன்னை நன்றாக அறிந்துக்கொண்டேன் நான் நடந்து போகும் பாதையை நீ தீர்மானிக்கத் தேவையில்லை என் வழியில் நீ குறுக்கே பாய்ந்து விழாமல், விலகி நடப்பாயானால் அதுவே போதும். 26 :

என் வழி எனக்குத் தெரியும் அதற்காக இந்த உலகம் உள்ளவரையும் நீயும், நானும் தனித்தனி வழிகளில்தான் பயணம் என்று உன்னை நான் தள்ளி வைக்கவும் இல்லை என்பதை உனக்குத் தடைசெய்யப்படவும் இல்லை.

என் உணர்வுகளைப் புரிந்துகொண்டு, என் திறமைக்கு மதிப்பளித்து என் ஆளுமையை கௌரவிக்கக்கூடிய மனிதர்கள் என்னோடு என் வழியில் எப்போதும் நடக்கலாம். என்னுடன் கைகோர்த்து நடக்க நீ தயாரானால், என் பாதையில் வரலாம் என் கைகளைப் பிணைத்துக்கட்டி, உன் பின்னால் என்னை இழுத்துத்தான் திரி வாயானால், நீ உன் பாதையில் போ நான் என் சிறகுகளை அகல விரித்துப் பறக்கத் தொடங்கி நீண்ட நாட்களாயிற்று மண்ணிலே உன்னை கண்டு பொன்னால் ஆனதாக இருந்தாலும் இனி அதற்குள் நான் வந்தமரப் போவதில்லை இந்த மண்ணிலே எத்துணைப் பசிய புல்வெளிகளும் பச்சை மரங்களும் ஆற்றோரங்களும் கடற்கரைகளும் உள்ளன நான் இறங்கி இளைப்பாற ஆனால், என் மனதின் கதவுகள் நல்ல மனிதர்களின் வருகைக்காக எப்போதும் அகலத் திறந்த படியேதான் உள்ளன"

போராளிப் பெண்கள் ஒரு சாராரது பெண்நிலை வாதம் பற்றிய பிரக்ஞையும் தெளிவும் அது எவ்வகையான பெண்நிலைவாதம் சார்ந்ததென்பதும் மேலுள்ள பகுதியூடாகப் புலப்படுகின்றது என்பதில் தவறில்லை!

இது வரை கூறியவற்றைத் தொகுத்து நினைவு கூர்வோம் :

i. 'குடும்பப்பெண்' அலுவலகப் பெண் போன்று போராளிப் பெண்களும் தனியொரு பிரிவினர் இவர்களுக்கும் சுமைகள் பலவுள்ளன.

ii. தமிழ்ப் பெண்களுள் ஒரு சாரார் தமிழின உணர்வுந்தலால் போராளியாகின்றனர்.

iii. இன்னொருசாரார், சமூகம்பற்றிய/பெண்கள் பற்றிய பிரக்ஞை காரணமாக போராளியாகின்றனர்.

iv. இப்போராளிப் பெண்கள் தம்மை போராளியாகக் கருதும் அதே வேளை பெண்ணாகவும் உணர்கின்றனர் அத்தகைய உணர்வுகளை வெளிப்படுத்த முயல்கின்றனர்.

v. முற்குறிப்பிட்ட இருசாராரும் (ii,iii) ஏனைய பெண்களது நிலைபற்றிச் சிந்திக்கின்றனர்

vi. அவ்வாறு சிந்திப்போருள் ஒருசாரார் பெண்நிலைவாதச் சிந்தனை யுடையவர்களாகத் தென்படுகின்றனர்.

மேற்குறிப்பிட்ட நிலையில் போராளிப்பெண்கள், பெண்களது விடுதலை பற்றிய யாது சிந்திக்கின்றனர்? இதற்கு விடை காண்பதற்கு முன்னர் போராட்டத்துடன் ஈடுபட்ட ஆண்கள் பெண் விடுதலை பற்றி யாது கருதுகின்றனர் என்று கவனிப்பது பயனுடையது இதுபற்றி படைப்புகளூடாக எதுவும் கூறப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. எனினும் கவிதை தொகுப்பொன்றின் முன்னுரையில் போராளி யொருவர் பின்வருமாறு குறிப்பிடுவது கவனத்திற்குரியது. 26 :

"அவ்வாறாயின் இவர்கள் (கவிதைகள் எழுதிய பெண்போராளிகள் ஆ–ர்) சொல்வதுதான் என்ன? இப்பொழுது வெளியுலகில் ஒரு போக்கினைப் பார்க்கின்றோம் மெத்தப்படித்த, நகர்களில் வாழும் பெண்கள், தனியமைப் புக்களைக் கட்டி, தனியாக அணியாகி, சர்வதேச மாநாடுகள் நடத்தி, தீர்மானங்கள் நிறைவேற்றி, பெண்கள் உரிமைகளும் மனித உரிமைகளே என வலியுறுத்தி இதன் மூலம் பெணகளுக்கும் ஆணாதிக்க சமூகத்திற்குமான முரண்பாட்டினை அமைப்பு ரீதியாக தீர்க்க முனைகிறார்கள் பாராட்டப்பட வேண்டிய பணியென்பதில் ஐயமில்லை. ஆனால், போகிற போக்கில் பெண்களிடையே இன்னொரு வகைப்படுத்தலையும் இன்னொரு முரண் பாட்டினையும் இவை உருவாக்கி விடுவதையும் எவரும் மறுக்கமாட்டார்.... மாவோ அவர்கள் எழுதியிருக்கிறார் சற்றே சிந்தித்து பாருங்கள் ஒரு பொருளினது அல்லது மனிதனது சிந்தனையுள்ள கருத்தின் எந்தவொரு முரண்பட்ட கூறும் சுயேட்சையாக இயங்கமுடியாது அதன் எதிரான கூறு என ஒன்றில்லாவிட்டால் ஒவ்வொன்றும் தன் வாழ்விற்கான நிலைமைகளை இழந்து விடுகிறது" இன்று தமிழீழ பெண்களின் நிலையை எண்ணிப்

பாருங்கள் சிங்களப் பேரினவாதத்தின் அடக்குமுறை முற்றாகவே தமிழினத்தின் மீது அவிந்துள்ள அதே வேளை,சிங்கள 'ஆண்கள்' தமிழ்ப் பெண்கள் மீதான தனித்தான வன்முறையை பாலியல் ரீதியாக பிரயோகிக்கிறார்கள் அதே வேளை தான் பிறப்பெடுத்திருக்கும் இனத்தின் மூடத்தனமான கருத்தியல் காரணத்தால் இங்கு பெரும் பாலும் ஆண்களால் அவள் தடைகளை எதிர் நோக்குகின்றாள் வதைபடவும் நேர்கிறாள் எனவே,இம் முரண்களைச்சரியாக இனங்கண்டு பகை முரண், உறவு முரண் ஆகிய இரண்டையுமே சமகாலத்தில் ஆனால் வெவ்வேறு தளங்களில் தீர்க்க அவள் முயல்கிறாள்.... ஆண்களை முற்றதாகத் தங்கியிருத்தல் என்ற நிலையை மாற்ற ஆண்களில் தங்கியிருந்தும் அவர்களைத் தங்களில் தங்கியிருக்க வைத்தும் அவர்கள் மனவுலகை இணக்கமாக, படிப்படியாக மாற்றியமைக்க அவள் முயல்கிறாள் இந்தச் செயற்பாட்டினை, பங்களிப்பினை ஆதாரமாக வைத்தே தமது மீட்சிக்கான, சமூக நீதிக்கான போராட்டத்தினையும் அவள் தொடர்கின்நாள். புது இயக்கம் காண்கிறாள். ஆண்கள் மட்டுமே என்கின்ற நிலைப்பாட்டிற்கு மாறாக பெண்கள் மட்டும் என மாற்று வேலியிடாது விடுதலை நோக்கிய பயணத்தில் தன்னையும் இணைக்கிறாள் இதுவொரு புதிய சமன்பாடு"

பெண் விடுதலை பற்றிப் போராளிப் பெண்கள் யாது கருதுகின்றனர்? இவ்விதத்தில் பின்வரும் விடயங்கள் கவனத்திற்குரியனவாகின்றன :

01. தமிழ்ப் பெண்களது வாழ்க்கையில் மாபெரும் மாற்றங்களை ஏற்படுத்தியது விடுதலைப் போராட்டத்தில் தாம் இணைந்து கொண்டமையே என்று கருதுகின்றனர் எடுத்துகாட்டாக காலக்கணக்கு என்ற கவிதையில் ஒரு பகுதி:

1. காலமே – நீ
எங்கு செல்கின்றாய்

2. பெண்களின் அழகு, மென்மை
அடக்கம் பொறுமையில்
சுகம் காணச் செல்கின்றேன்

1. இப்போ....
சினம், வீரம், தலைமைத்துவம்
இவர்களில் குடி கொண்டு விட்டதே...

2. பெண்களின் வளர்ச்சி
கலக்கம் தரும் விடயமே

1. கலங்கரை விளக்கின்
ஒளி விம்பம் இப்போ
சீதனச் சந்தை
மணவாளர்களின் சன்னியாசமாச்சு

2. ஆயிரம் காலத்துப்
பயிரல்லவா திருமணம்
1. சில ஆயிரங்களில் மட்டுமே
உயிர் வாழும் – பின்
மறுமணம்
2. முழந்தாள் தவழும் – உன்
முந்தானைச் சுற்று...
1. மனம் நொந்துபோன
மணவாளர்களின் தூக்குக்கயிறு
நிலம் தவழும் முந்தானையில்
இறுக்கிய உணர்வுகள்
வரிப்புலிக்குள் புகுந்ததனால்
விடுதலையின் சிறகசைப்பு
நாணமும் பாவமும்
தாகமும் காமமும்
காடேறிகளிடம் காட்டிவிட்டோம்
2. சா(ஸ்)த்திரங்களை
என்ன செய்தீர்கள்
1. சுண்ணாம் பறையில் அடைத்து விட்டோம் – அது
ஆவியாகிப் போகின்றது
மூட நம்பிக்கைகளையோ
சிலுவைகளில் அறைந்து விட்டோம்
சுமை தாங்கி
நகர முடியாமல் முடங்கிவிட்டது
2. பெண்களின்
எதிர் நீச்சலின் முடிவு?
1. கந்தகப் பூவாய்
அடுக்கடுக்காய் அதிரவதைப்பார்

ii. தமிழீழ விடுதலையுடன் தமக்கும் விடுதலை கிடைக்குமென்று திட்டவட்டமாக நம்புகின்றனர் இதனை வெளிப்படுத்துகின்ற கவிதையொன்று பின்வருமாறுமுடிவுறுகின்றது. 28 :

“எங்கள் வரலாற்றுக்கு வழிகாட்டும் தலைவனின் வார்த்தைகளை இதயத்தில் பதித்தபடி இறுதிக் களத்துக்கு நடந்தபோது எமது பாசறையில் படிந்த உங்கள் பாதச் சுவடுகள் இன்னும் அழியாதபடி.... மனதில பதிந்து போன ஓவியங்களாய் நீங்கள் எப்படி நினைத்துக் கொள்வோம்?

நினைவுகளாக மட்டுமா நின்றீர்கள்? நேற்று வந்த புதிய தோழியின் கரங்களில் தவழ்கின்ற உங்களின் தோழமை உறுதியானபற்றலுடன் மிகுதிப் பயணங்கள் உங்கள் விழி சுமந்த கனவுகளைச் சுமந்து வழி மீது நடக்கின்றோம் புதிய தோழி எம் பின்னால் வருகின்றாள்"

iii. அத்தகைய விடுதலையில் போராளிப் பெண்களான தமக்கு முக்கிய பங்குண்டென்றும் கருதுகின்றனர். எ–டு:(முன்னோரிடத்தில் குறிப்பிட்டுள்ள) அவளே எழுதுவாள் எம் அழகிய காலம்.

இறுதியாக, மேற்கூறிய விடயங்களை அடிப்படையாகக் கொண்டு அவதானிப்பின் பின்வரும் முடிவுகளுக்கு வர முடிகின்றது

i. தமிழ்ப் பெண்களுள் பலர் தமிழின உணர்வு அடிப்படையில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் – குறிப்பிட்ட இயக்கத்தில் இணைந்துள்ளனர்

ii. எனினும், ஒருசாரார் சமூக/பெண் நிலை பற்றிய பிரக்ஞை காரணமாகவும் சேரமுற்படுகின்றனர்

iii. எவ்வாறாயினும் தாம் பெண்(போராளி)என்ற உணர்வுடன் காணப்படுகின்றனர் இதனால் தமது முக்கியத்துவத்தையும் செயற்பாடுகளையும் மன உணர்வுகளையும் வெளிப்படுத்த முற்படுகின்றனர்

iv. ஏனைய தமிழ்ப் பெண்களது பிரச்சினைகள் பற்றியும் சிந்திக்கின்றனர்

v. இன விடுதலையுடன் – தமிழீழம் கிடைப்பதுடன்–பெண்களது பிரச்சினைகள் தீருமென்றுதிடமாக நம்புகின்றனர்

## அடிக்குறிப்புகள்

1. அம்புலி (2004) என்னுரை, மீண்டும் துளிர்க்கும் வசந்தம்,அறிவமுது பதிப்பகம், கிளிநொச்சி பக் 1 x - x
2. மேஜர் கஸ்தூரி (1992), கஸ்தூரியின் ஆக்கங்கள், அறிவமுது பதிப்பகம், கிளிநொச்சி, பக்22–23
3. அம்புலி (2004), முகு நூ, பக் 50–53
4. ஆதிலட்சுமி சிவகுமார் (2000) என் கவிதைகள், அறிவமுது பதிப்பகம், கிளிநொச்சி ப.34
5. அம்புலி (2004), முகு நூ, பக் 76–77
6. அம்புலி (2004), முகு நூ, பக் 17–18
7. மலைமகள் (2004) ,முன்னுரை, புதிய கதைகள்,அறிவமுது பதிப்பகம் கிளிநொச்சி பக் x-xi
8. மலைமகள் (2004) மே.கு. நூ
9. மலைமகள் (2004) மே.கு. நூ. 33–34
10. தமிழ்க்கவி (2004) இருள் இனி விலகும், அறிவமுது பதிப்பகம் கிளிநொச்சி பக்.54–55
11. தமிழ்க்கவி (2004) மே.கு.நூ பக.67
12. தமிழ்க்கவி (2004) மு.கு. நூ பக். 15
13. இவ்விடயங்கள் சார்ந்த பல கவிதைகள் முற்குறித்த மீண்டும் துளிர்க்கும் வசந்தம் தொகுப்பிலுள்ளன
14. அம்புலி (2004), முகு நூ, பக். 22
15. அம்புலி (2004), முகு நூ, பக். 60–61
16. அம்புலி (2004), முகு நூ, பக்.24
17. ஆதிலட்சுமி சிவகுமார் (2000) மு கு நூ. பக்.58
18. மலைமகள் (2004) மு. கு. நூ. பக். 13
19. மலைமகள் (2004) மு .கு. நூ. பக்.87
20. தமிழவள் (2005) எல்லை காக்கும் இல்லங்கள் பாகம் I உங்களுடன் சில வார்த்தைகள் பக.xxv
21. தமிழவள் (2005) மே. கு. நூ பக். XVIII
22. ஆதிலட்சுமி சிவகுமார் மு.கு.நூ பக்.6
23. ஆதிலட்சுமி சிவகுமார் (2000) மு.கு.நூ பக்.54
24. மலைமகள் (2004) மு .கு. நூ. பக்.
25. மலைமகள் (2004) மே .கு. நூ. பக்.
26. எழுதாத உன் கவிதை தமிழீழப் பெண்களின் கவிதைகள் முன்னுரை ச.வே.பாலகுமாரன், அறிவமுது பதிப்பகம் , கிளிநொச்சி பக் iv - vii
27. எழுதாத உன் கவிதை () மே. கு. நூ. பக். 18–20
28. அம்புலி (2004) மு.கு. நூ. பக். 32

# காலக்கனவு: ஒரு பெண்ணிய நாடகத்தின் ஆக்கம்

பொன்னி அரசு

இந்நாடகம் மூன்று மாதங்களுக்கு முன் சென்னையில் தொடங்கப்பட்டது. சென்னையில் உள்ள இயல், இசை, நாடக மன்றத்தின் ஒரு சிறு அரங்கில் ஒத்திகை தொடங்கியது. சனி–ஞாயிறுகளில் நடந்த இவ்வொத்திகை நடிக்க இருந்த நால்வரும் நாடகப்பனுவல் செய்த வ. கீதாவும், நெறியாள்கை செய்த மங்கையும் எதிர்பார்த்துக் காத்திருந்த ஒரு நிகழ்வாய் மாறியது.

நாடகத்தின் சிறு குறிப்பு இதுவே: 18 ஆம் நூற்றாண்டின் தொடக்கம் முதல் 1930கள் வரை வந்த பெண்களின் குரலை இந்நாடகம் எடுத்துரைக்கின்றது. இதில் முதலில் கவனிக்க வேண்டியது, அ. மங்கையும் வ. கீதாவும் சேர்ந்து பணி புரிவதின் முக்கியத்துவம். பெண்ணிய நாடகக்காரராக சுமார் 20 வருடங்களாகச் செயல்பட்டு வரும் மங்கை, இடதுசாரி அமைப்பு ஒன்றின் மாதர் சங்கத்தில் தொடங்கி இன்றுவரை நாடக மேடையில், பால்சார்ந்த விஷயங்களைக் வெளிக்கொண்டு வருவதில் சிரத்தையுடன் செயல்பட்டு வருகிறார். சங்ககால, தற்காலக் கதைகள் அடிப்படையில் நாடகங்களை நிகழ்த்தியுள்ளார். இன்னொரு பக்கம் வ. கீதா அவர்கள் சுயமரியாதை இயக்க வரலாற்றைத் திரட்டி, அதை நம்முன் வைப்பதில் இவர், நாடகம் எழுதுதலில் முதல் படியைத் தாண்டியுள்ளாார். எங்கு சென்றாலும் தம் பெண்ணியத்தை நெருங்க அணைத்துச் செயல்பட்ட இவர் சுயமரியாதை இயக்க வரலாற்றையும் பெண்ணியத்தையும் 'காலக் கனவில்' ஒன்று சேர்த்துள்ளார். இதை இரண்டாம் நாடகமாக எழுதியுள்ளார்.

பால் சார்ந்த சர்ச்சைகள் இழையோடும் சங்க கால நாடகங்களை மேடையேற்றிய மங்கை, தம் பெண்ணியத்தைத் தெள்ளத் தெளிவாக காலக் கனவில் வெளிப்படுத்தியுள்ளார். இந்நாடகத்தில் நடித்த நால்வர், கல்பனா, கவின், ரேவதி மற்றும் நான். கல்பனா, அறிவியல் இயக்கத்தில் பல வருடங்களாகப் பணிபுரிந்து இப்பொழுது முனைவர்பட்ட ஆய்வில் ஈடுபட்டுள்ளார். கவின் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் உள்ளவர். வருமானத்திற்காக ஐ.டி. குழுமத்தில் (IT Company) பணிபுரிபவர். ரேவதி இடதுசாரி இயக்கங்களில் பணிபுரிந்தவர். அவரது 'சுனாமிக்குப் பிறகான' வாழ்வில் நாகப்பட்டினத்தில் கழைக்கூத்தாடி சமூகத்தைச் சேர்ந்த குழந்தைகளுக்காக 'வானவில்' என்னும் பள்ளியை நடத்தி வருகிறார். நான்

பெண்ணிய ஆய்வுகளிலும் அதைச் சார்ந்த வேலைகளிலும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறேன்.

இவ்வனைத்து அறிமுகங்களுக்கும் ஒரு காரணம் உண்டு. காலக்கனவு தமிழகப் பெண்ணிய வரலாற்றை எழுதி நடிக்கும் முயற்சி மட்டுமில்லாமல், தமிழகப் பெண்ணிய முயற்சிகளுக்கு ஒரு எடுத்துக்காட்டாகவும் அமைந்துவிட்டது. ஆறு பெண்ணியவாதிகள் ஓர் அறையில் ஒவ்வொரு சனி – ஞாயிறுகளில் சந்தித்தால் என்ன நடக்கும்? காப்பியும் சாப்பாடும் செழித்தோடும். அடிக்கடி சர்ச்சைகள் தொடங்கிச் சண்டைகளில் முடியலாம். நாங்கள் அன்புச் சண்டைகள் தவிர வேறெதுவும் போடவில்லை. வ. கீதா எழுதத் தொடங்கிய பனுவல் வேறெங்கோ போய் முடிந்தது.

**எங்களுக்குள் எழுந்த சில சர்ச்சைகள் இதோ:**

1. தேவதாசிகள் பற்றிய காட்சியில், இராமாமிருதம்மாள் மற்றும் முத்துலட்சுமி ரெட்டி மூலம் தேவதாசி வழக்கத்திற்கு எதிர்ப்பு மற்றும் அதைச் சார்ந்த சட்டகம் விளக்கப்படுகிறது. தேவதாசி குலத்தில் பிறந்த இவ்விருப் பெண்களும் வேறு வகைகளில் ஒரே வேலையைச் செய்வதை விவாதிக்கிறோம். எங்கள் நால்வருக்குள் ஒரு சர்ச்சை தொடங்கியது. அனைவரையும் போல நமது நாடகத்திலும் நாம் சோகக் கதைகளை மட்டும் சொல்வோமா? அல்லது வேறு மாதிரியாகத் தேவதாசிகள் தம் வாழ்வை பற்றிய யோசித்த, பேசிய அல்லது எழுதியவை இருக்கக்கூடுமா எனப் பேசினோம். இப்படியான வெளிப்பாடுகள் எழுத்து வடிவிலோ அல்லது ஏதாவது ஒரு வகையில் ஆவணப்படுத்தப்படவில்லை என அறிந்தோம். வரலாற்றுக் கோணத்தில் ஆவணப்படுத்தல் இன்றியமையாதது. ஆதலால் வேறு விதக் குரல்களை எங்களால் கேள்விகள் மூலம் மட்டுமே வெளிப்படுத்த முடிந்தது. பாலியல் சார்ந்த செயல்களில் ஈடுபடுபவர்களைப் பொதுவாக விபச்சாரி என அழைப்பர். இந்நிலையில் உடலுறவுக்காகப் பணிபுரியும் பெண்கள் நினைவுக்கு வந்தனர். அவர்களது வாழ்க்கையின் சுதந்திரம் மற்றும் பலவகையான இன்பத்தைப் பற்றியும் பேசி வருகின்றனர். மும்பாய், டெல்லி, கல்கத்தா, கேரளா ஆகிய அனைத்து இடங்களிலும் வன்முறை, இன்பம் ஆகியவை தொடர்பான சர்ச்சைகளை உடலுறவுத் தொழிலாளிகள் பேசி வருகின்றனர். இவ்வரலாற்றில் உருவான பெண்ணிய வாதிகளான நாங்களும் இச்சையையும் இன்பத்தையும் ஒரு முக்கிய அரசியலாகக் கருதுகிறோம். எந்த அளவிற்கு கருதுகிறோம் என்பதில் எங்கள் ஆறு பேர் மத்தியில் வித்தியாசம் உண்டு. இச்சர்ச்சைக்குப்பின் அமைக்கப்பட்ட காட்சியில் இந்த வெவ்வேறு வகையான வெளிப்பாடுகள் சாத்தியமா எனக் கேள்வி கேட்கிறோம்.

2. சுயமரியாதைத் திருமணங்களைப் பற்றி நாங்கள் பேசும்போது பட்டியல் ஒன்றிடுகிறோம். அதில் ஒரே சமயத்தில் இரு பெண்களை மணம் செய்து

கொண்டதாக' ஒரு வாக்கியம் வந்தது. உடனே நாங்கள் நால்வரும் கொதித்தெழுந்து இது என்ன சுயமரியாதை, எப்போதும் நடப்பது தானே என்றோம். பத்து வருடங்களுக்கு முன்பு பெண்ணியக் குழுக்களிலோ அல்லது இன்றும் பல குழுக்களிலோ இவ்வாக்கியத்தை மறு பேச்சின்றி அகற்றி இருப்பர். நாங்களோ பலத்த சர்ச்சையில் ஈடுபட்டோம். எம்மில் ஒருவர் இவ்விரு பெண்களின் ஒப்புதலுடன் இத்திருமணம் நடந்திருக்கலாம் என்கிறோம். இன்னொரு பக்கம் ஆணாதிக்கச் சமுதாயத்தில் பெண்களின் 'ஒப்புதலுக்கு' உண்மையில் என்ன அர்த்தம் இருக்க முடியும் என வாதாடினோம். இவ்வாக்கியத்தை அகற்றுவதில் எங்களுக்கு இஷ்டமில்லை. இச்சர்ச்சையின் போது கீதா இல்லை. அவருக்கு இதைப் பற்றி அறிவித்தவுடன் இம்மணம் செய்து கொண்ட இரத்தினத்தாயம்மாள், நாகம்மாள் மற்றும் அரங்கசாமியின் கதையை அவர் தேடி எடுத்தார். நாடகத்தில் எங்களுக்கு எல்லாம் விருப்பமான ஒரு பகுதியாகவும் பலரைச் சிரிக்கவும் சிந்திக்கவும் வைக்கும் ஒரு பகுதியாகவும் இது அமைந்தது. இப்பெண்கள் ஓர் பாலின சேர்க்கைக்கான இச்சை உள்ளவர்களாக இருந்திருக்கலாம் என்றும் அந்த ஒரே அடிப்படையில் ஆணை மணம் புரியும் அளவிற்கு ஆழ்ந்த உறவு கொண்டவர்களாக இருந்தது எங்களுக்கு மிக்க மகிழ்ச்சி அளித்தது.

பேசப்படாத பல பெண்ணியக் கூறுகளையும் நாம் இந்த ஆக்கத்தில் பார்க்க முடியும். இதில் பிரதானமானது, உடல்சார்ந்த சர்ச்சைகள். சர்வதேச அளவில் பெண்ணிய நோக்கிற்கு அத்தியாவசியமாக அமைந்துள்ளது உடல் சார்ந்த சர்ச்சை ஆகும். இதில் ஜூடித் பட்லர் (Judith Butler) விளக்கும் சொல்லாடல் மிக முக்கியமானது. அவர் பால் என்பதை நாம் அனைவரும் வெவ்வேறு வகைகளில் நிகழ்த்துகிறோம் (Perform) என்று வாதாடியுள்ளார். இந்தக் கோட்பாட்டை அவர் நாடக மேடை நிகழ்த்துதல் (Performance) மூலமாக விளக்கியுள்ளார். நாடகப் பயிற்சியின் முதல் பாடம் உடலின் ஒவ்வொரு பாகமும் எப்படி நடிக்கக்கூடும் என்பதாகும். பட்லரின் முறையியலைப் பயன்படுத்தி நாம் இந்நாடகத்தைக் காணமுடியும். உடல்சார்ந்த பெண்ணியச் சொல்லாடல்களைப் படித்து உணர்ந்தவர் மேடையேறினால் என்னாகும் என்பதையும் காணலாம்.

நாடகப் பயிற்சி பெற்ற எனக்கு உடல்சார்ந்த சொல்லாடல் ஒரு புதுக்கோணத்தை அளிக்கிறது. இந்நாடகத்தில் மேடையில் நின்று 18, 19ம் நூற்றாண்டில் வாழ்ந்த பெண்களாக நடித்தபோது எனக்குப் பலமுறை கூறப்பட்டது; மேடையில் வெளிப்பட்ட; என் ஆண் (Masculinity) தன்மைப் பற்றியது ஆகும். இதன் காரணம் என்னவென்று யோசித்ததில், நாடகப்பயிற்சியும் பெண்ணியமும் ஒன்றுகூடி ஒரு திறந்த, வசதியான உடலை மேடை எனக்கு உருவாக்கியுள்ளது. இன்னொரு பக்கம், என் உடன் நடித்தவர்களும் என் உடலில் உள்ள வித்தியாசத்தைக் கண்டறிந்தனர். அது நாடகப் பயிற்சியால் மட்டும் வந்தது எனச் சுலபமாக கூறிவிட முடியாது. 18, 19 ஆம் நூற்றாண்டின் பொது வெளியில் இயங்கிய

பெண்களின் உடல் எவ்வாறு நிகழ்த்தப்பட்டது என்பதே ஒரு முக்கிய சர்ச்சையாகக் கூடும். காலனிய ஆட்சியில், இந்திய சட்டமன்றத்தின் ஒரே ஒரு பெண் உறுப்பினராக இருந்த டாக்டர் முத்துலட்சுமியின் குரல், ஆண்குரல் நிறைந்த 1917 இல் எவ்வாறு இருந்தது? காமப் பொருட்களாய் பல நூற்றாண்டுகளாய் காணப்பட்ட தேவதாசிகள் சமூகத்தில் பிறந்து, உத்தமியாய் மாறிய இராமாமிருதம்மாள் பொது மேடைகளில் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஏறி நின்றது எப்படி இருந்திருக்கும்?

அரை நிர்வாணமாக வனராணியாக நடித்த கதாநாயகி, முதல் முதல் திரை அரங்கில் நுழைந்தபோது அவள் உடல் எப்படிக் காணப்பட்டது? அவர்கள் காமக் கருவிகளாகக் காணப்படுவதைச் சுட்டிக்காட்டும் பெண்ணிய அரசியல் இன்றியமையாதது. ஆனால் அவர்கள் கணக்கை அவ்வளவு சுலபமாக முடித்துவிட முடியாது. இச்சொல்லாடல் அழகியலுடன் மேடையில் அரங்கேறுவது இச்சர்ச்சைக்குப் பயனுள்ள உத்தியாகிறது. உரிமைகளைப் பற்றி நூற்றுக்கும் மேற்பட்ட வருடங்களுக்கு முன் பேசிய வரலாறு சிறப்புமிக்கதாக இருந்தாலும், பெண்ணிய வரலாறு என்பது மற்றைய வரலாறுகளைப் போல வார்த்தைகாளல் மட்டுமே கூறப்படுவதாக இருந்தால் மட்டும் போதாது. உரிமை சார்ந்த சொல்லாடலின் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிட முடியாது. ஆனால் அச்சொல்லாடலை விமர்சிக்கவும் ஆணாதிக்க நிறுவனங்களின் கருவைக் கேள்வி கேட்பதிலும் உடல்சார்ந்த சர்ச்சைகள் உதவக்கூடும்.

இன்று பெண்ணிய வரலாற்றை எழுதும்போது அவர்கள் கூறிய கருத்துகள் நம்மைச் சிந்திக்க வைப்பது மட்டுமல்லாமல், இவ்வுடல்களில் ஆக்கமும் (Performance) நிகழ்த்துதலும் ஒரு வரலாறாகும். 18, 19, 20 ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த பெண்களின் கதையைச் சொல்லும் இன்றைய பெண்ணிய வாதிகளான எமக்கு, பொது வெளியில் முன்பு காணப்படாத, இன்றும் குறைந்தே காணப்படும் உடல்களைப் பற்றிய சொல்லாடல்களில் ஈடுபடுவது அவசியமாகிறது. இதனால் பால் சார்ந்த வித்தியாசங்களும் அதில் அடங்கியுள்ள அடக்குமுறையும் வெளிவர ஒரு வழியாக உள்ளது.

இதனால் ஆணாதிக்கச் சமுதாய அடக்குமுறைகள், பால் சார்ந்த வன்முறைகள், பாலியல் சார்ந்த அடக்குமுறைகள் ஆகிய பல பெண்ணிய வாதங்களைப் புரிந்துகொள்ளமுடியும். இன்று உடலுறவு தொழிலாளிகளும் ஓரினச் சேர்க்கைப் பெண்களும் அன்றாட வாழ்க்கையின் பால் சார்ந்த வன்முறையும் பொதுவாழ்வில் உள்ள பெண்கள் சந்திக்கும் சவால்களும் குடும்ப வன்முறையும் பெண் உடலின் இச்சையை எழுதிய இன்றையப் பெண் கவிஞர்கள் சந்தித்த வன்முறைகளும் பெண்ணிய நோக்கின் கருவில் உள்ள உடல் சார்ந்த சொல்லாடலைச் சுட்டிக்காட்டுகிறது. இப்பனுவலின் மற்றொரு சர்ச்சை பெண்ணிய

வாதிகளின் ஒன்று கூடலும் அதில் எழும் விவாதங்கள் பற்றியதாகும். பல நேரங்களில் தனித்து மட்டுமே பணிபுரியும் பெண்ணிய வாதிகள் இந்த நாடகத்தில் ஒன்று கூடியுள்ளனர். அப்படியே ஒன்று கூடினாலும் ஏதாவது ஒரு குறித்த பிரச்சனையைப் பற்றிய பிரச்சாரத்துக்காகக் கூடும் இந்தக் காலத்தில், மனதளவில், உடலளவில் நெருங்கிய முறையில் ஆறு பெண்ணிய வாதிகள் ஒன்று கூடியுள்ளனர். எனது நோக்கம் இதைக் கொண்டாடுவது மட்டுமல்ல. அக்கொண்டாட்டத்தோடு நிறுத்திவிடாமல் அந்த நிகழ்வு முறை பற்றி எழுதவேண்டிய அவசியமுள்ளது. நாங்கள் அனைவருமே, முன்பு கூறியது போல வெவ்வேறு வரலாறுகளில் இருந்து வருபவர்கள். ஓரினச் சேர்க்கை இச்சைப் போன்ற நெருக்கமான விவரங்களைத் தோழிகளாக மட்டும் புரிந்து கொள்ளாமல் அரசியலாகவும் புரிந்து கொள்ளும் தன்மை இருந்தது.

இடதுசாரி இயக்கங்களிலிருந்து பெண்ணிய நோக்கு சார்ந்த வாக்குவாதங்களால் வெளியேறி வருபவரும், இன்றும் கட்சியில் பணியாற்றுபவரும் அமர்ந்து அவ்வரலாற்றைப் பற்றி பேசினோம். நேரடிச் செயல்பாடு (Activism) சார்ந்த பணிகளுக்கும் ஆராய்ச்சி (Research) சார்ந்த பணிகளுக்கும் இடையில் உள்ள வித்தியாசமும் ஒற்றுமையும், அவை இரண்டிற்கும் இடையிலான, மங்கலான கோடுகளும் வெளிக்கொணரப்பட்டன. அவரவர் தனிவேலையில் உள்ள பெண்ணிய நோக்கு பேசப்பட்டது. தனி வாழ்வில் பெண்ணிய நோக்கைப் பற்றித் தோழிகளாக அரசியல் இழையோடும் பேச்சு வார்த்தைகளாகக் காணமுடிந்தது. எம்முள் இருந்த வித்தியாசங்களையும் ஒற்றுமைகளையும் பட்டியலிடுவது எனது நோக்கம் அல்ல. எமது கலந்துரையாடலின் முறையியலே எனக்கு முக்கியமானது.

ஒரு புறம் ஒருவருக்கொருவர் சொல்லுவதைக் கூர்ந்து கேட்பதும் அங்கீகரிப்பதும் மதிப்புடன் வாதிடுவதும் முக்கிய முறையாக இருந்தது. இன்னொருபுறம், ஒரு பெண்ணிய நோக்கிற்கான தேடல் எங்கள் அனைவரிடமும் பொதுவாக அமைந்திருந்தது. இத்தேடலின் மகிழ்ச்சியும் துக்கமும் பகிர்ந்து கொள்ளக் கூடியதாகப் பின்னர் மாறியது. பல வருடங்களுக்கு முன்பு கேரளவில் உள்ள கள்ளிக் கோட்டையில் தேசியப் பெண்கள் இயக்கக்கூட்டம் ஒன்று நடந்தது. இன்றும் அக்கூட்டம் இந்தியப் பெண்ணிய வரலாற்றில் ஒரு முக்கியப் புள்ளியாக அக்கலந்துரையாடல் திகழ்கிறது எனலாம். இது எந்தவித நிதி உதவியும் இல்லாமல் நாடளாவிய பெண்ணிய அமைப்புகள் சேர்ந்து நிகழ்த்தியதாகும். இந்தக் கலந்துரையாடலை ஒருங்கிணைப்பதில் வ. கீதா பங்கேற்றார். ஒருநாள் 'கள்ளிக்கோட்டை' நாடகப் பயிற்சியின் போது மாநாட்டிற்கு அப்புறம் எனக்கு இப்படி ஒரு உணர்ச்சி இன்றைக்குதான் வந்திருக்கு என்றார்.

பெண்ணிய வரலாறு சார்ந்த உரையாடல்களுடன் வளர்ந்த எனக்கு இதைவிட பெரிய பாராட்டுக் கிடையாது. இந்தக் கதையினால் இரு விஷயங்கள்

தெரியவருகின்றன. ஒன்று, பெண்ணிய ஒருங்கிணைப்புகள் நெருங்கிய உணர்வு பூர்வமான, பரந்த அரசியல் சார்ந்து அடிக்கடி நடப்பதில்லை என்பது. இரண்டு, இப்படிப்பட்ட ஒருங்கிணைதல் நடத்தல் சாத்தியம் என்பது. நாங்கள் ஆறு பேரும் இந்நாடகத்திற்குப் பிறகு எல்லா நேரத்திலும் ஒன்றாகப் பணிபுரிவோம் என்று கூறமுடியாது. இன்னொரு முறை நாங்கள் சேர்ந்து பணிபுரிய வாய்ப்புகள் இல்லாமல் போகலாம். ஆனால், இந்த நாடக ஆக்கத்தின் மூலம் தோழமை மட்டும் அமையாமல் பெண்ணிய அரசியலைப் பற்றி கூர்ந்து வாதாடுவதற்கு ஒரு களமும் அமைந்தது எனலாம். எல்லாவற்றிக்கும் மேல் ஒரு பெண்ணியக் கனவைக் காலக்கனவு மூலம் சில கணங்களிலாவது பகிர்ந்துகொள்ள முடிந்தது. இந்தக் கணங்களில் தான் சமூக மாற்ற சிந்தனைகளுக்கான வலிமைகள் உள்ளன என்று வரலாறு நமக்குக் கூறுகிறது. ஆதலால் இவற்றை முக்கிய அரசியல் தருணங்களாகக் கருதுவது முக்கியமாகும். இக்கணங்களில் வேறுபாடுகளை இழக்காமல் அதைத் தாண்டி வளரக்கூடிய அன்பும் தோழமையும் சார்ந்த சமூக மாற்ற செயல்பாடுகளுக்கான அற இயலைப் பேணுதல் கூடும்.

இந்நாடகத்தின் இன்னொரு அம்சம் தமிழகப் பெண்ணியத்தின் வரலாறு என்பதாகும். ஆங்கிலத்தில் மேடையில் பேசி தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட சுயமரியாதை இயக்க அறிவாளிப் பெண் குஞ்சிதம் தொடக்கம், தனித்தமிழ் இயக்கங்களில் பெண்களின் பங்கு வரை இந்நாடகத்தில் நமக்கு அறிமுகப்படுத்தப்பட்ட வரலாற்றில் பல பெண்கள் இடம்பெற்றுள்ளனர். ஒரு சில ஆங்கில வார்த்தைகளை எமது வசனத்தில் சேர்த்துக் கொள்ளலாமா? என்பது பற்றி பேசிய போது 'தமிழ் பேசும் இடத்தில் பிறந்துள்ளோம், அவ்வளவுதான் என்றார் வ. கீதா.

அனைத்துச் சமூகங்களிலும் பெண்ணிய வாதிகளிடம் அடிக்கடி வைக்கப்படும் குற்றச்சாட்டு. நீங்கள் பெருமளவு தமிழர் அல்ல என்பது. இதனை நாம் அனைவரும் அறிவோம். இந்நாடகத்தில் பல வகையான தமிழ்ப்பேசும் பகுதிகளின், தமிழ்ச் சமுதாயத்தின் தெள்ளத் தெளிவான பெண்ணிய வரலாறு காட்டப்பட்டுள்ளது. இன்னொருமுறை நம்மை 'பான்ட் மாட்டிய, கிராப் வெட்டிய நீ, தமிழ்ப்பெண் அல்ல'. 'தமிழ்ச் சமூகத்தில் இப்படி இருப்பதில்லை' என்று கூறுபவர் முகத்தில் எறிய வரலாறு உள்ளது. வேட்டி, சட்டை அணிந்து தலித்துகளுடன் வாழ்ந்து, சைக்கிள் ஓட்டித் திரிந்த கம்யூனிஸ்ட் மணலூர் மணியம்மா உள்ளார். ஒரு கொண்டாட்டத்திற்குரிய இவ்விஷயங்களைக் கொண்டாடுதல் மட்டும் போதாது. மீண்டும் மீண்டும் ஆழ்ந்து புரிந்து கொள்ளலும் அவசியம். கலாச்சாரம்/சமூகம் என்று அழுத்தி பொறுத்தப்பட்ட வரையறைகளை அமைப்பதின் மங்கல் தன்மையும் பால், சாதி, இடம், பாலியல் சார்ந்த கீழ்நிலைப்படுத்தலும் அடக்குமுறையும் தெள்ளத் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இன்று பயத்தினாலும் தம் கீழ்நிலையாலும் அதே நேரம்

தாம் கொண்ட வலிமையாலும் தொடர்ந்து புகுத்தப்படும் 'கலாச்சார வன்முறை' களின் தாக்கத்தை நாம் அறிவோம். இது பெண்ணிய விவாதங்களில் வெவ்வேறு சமூகங்களில் பேசப்பட்டுள்ளது. ஆனால் இதைத் தாண்டி மரபு/கலாச்சாரம் என்ற சொல்லாடலான ஒற்றுமை மற்றும் சமநிலைக்கான உத்தியாகப் பயன்படுத்தலைப் பற்றி யோசித்தல் அவசியம். மரபுகளை அங்கீகரித்தல், அறிதல் மற்றும் பாதுகாத்தல் முக்கியமாக இருந்தாலும் அதை வழிபடும் வழக்கத்தைக் கேள்வி கேட்டல் அவசியம். இவ்வழிபாட்டினால் ஊக்குவிக்கப்படும் அசைக்க முடியா வரையறைகளும் அதைச் சார்ந்த வன்முறையும் தமிழகப் பெண் கவிஞர்கள் தாக்கப்பட்டபோதோ, ஒரு பத்திரிகையில் பாலியல் வாழ்வைப் பற்றி ஒரு வரி பேசிய குஷ்புவிற்கு எதிரான பிரச்சாரத்திற்கோ கருவாக அமைகின்றன என்பதில் ஐயமில்லை.

இந்நாடகத்தின் இறுதியில் தமிழகத்தில் இவ்வளவு முற்போக்காக இருந்த பொதுவெளி எங்கே போச்சு? என்றும் இந்த வரலாற்று முறிவின் அர்த்தமென்ன? என்றும் வாதிக்கப்பட்டுள்ளது. இதுவே தமிழ் பேசும் பல பகுதிகளிலும் முக்கியமான கேள்வியாக உள்ளது. இந்தியாவில் வேறெங்கும் காணப்படாத தெளிவான அறிவார்ந்த, துல்லியமான, ஆழ்ந்த, பரந்த முறையிலான சொல்லாடல்களை முத்துலட்சுமிரெட்டி முதல், சுயமரியாதை இயக்கப் பெண்கள் வரை கண்ட தமிழகம், இன்று கலாச்சார மாற்றத்தைக் கேள்விகேட்டு அதே சமயத்தில் ரசிக்கும் தன்மை இன்றி, சாதி, மதம், பால் சார்ந்த அடக்குமுறையில் மூழ்கியுள்ளது. பெண்நிலை, பெண்கருத்து இருப்பு ஆகியவற்றிக்கு இடமில்லாமல் போன காரணம் என்ன?

தொடக்கப் புள்ளியாக, நமது தற்கால பெண்ணிலைவாத கோட்பாடுகளையும் பணிகளையும் விமர்சனபூர்வமாகவும் ஆக்கபூர்வமாகவும் மறுபரிசீலனை செய்வது இன்றியமையாததாக உள்ளது. இது தமிழகத்திற்குப் பொருந்தும். இலங்கையின் வித்தியாசமான சூழ்நிலையைப் புரிந்துகொண்டு அதைப் பற்றி விவரிக்கும் நிலையில் நான் இன்று இல்லை. வேறுபாடுகளை அங்கீகரிக்காமல் ஒரு தமிழ் பெண்ணியத்தைக் கோட்பாட்டு முறைகளில் பயன்படுத்துவது தேவையற்றது. பொதுவாக, இந்த மறுபரிசீலனையின் நிகழ்முறையும் சொல்லாடலும் வெவ்வேறாக இருக்கலாம். ஆனால், கண்டிப்பாகப் பல பெண்ணியங்களுக்கு இது பொருந்தும். எங்களால் அநுபவிக்க முடிந்த இவ்வரலாற்றின் உற்சாகத்தை, அருகில் அணைத்து வைத்து அசாத்தியமான வலிமையும் கனவுகள் காண்பதற்கான தைரியத்தையும் சேகரிக்க முயல்கிறோம்.

"காலப் பயணத்தில் சரடுகளை அங்கீகரித்து அதற்கு மேலாக நாம் என்ன செய்கிறோம் என்பதுதான் நம்முன் உள்ள சவால். கேள்விக்கு முடிவேயில்லை."

# பெண்நிலைவாத தலித் பார்வையில் சாதிய ஆணாதிக்கமும் அடையாள அரசியலும்: இமையத்தின் 'செடல்' நாவல் பற்றிய ஒரு வாசிப்பு

-ச. ஆனந்தி-

கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக தமிழில் தலித் இலக்கியம் தனக்கென ஒரு முக்கியத்துவத்தை பெற்றுள்ளது. குறிப்பாக அதன் விமர்சன போக்கு – தலித் நோக்கில் தமிழ் இலக்கியத்தை விமர்சிப்பது – இன்னும் தீவிரமாக தமிழக வரலாறு, அரசியல், இலக்கிய கலாச்சாரத்தை தலித் பார்வையில் விமர்சிப்பது என்பதாக விரிவதுடன் தலித் அடையாள அரசியல் எத்தகையது, தலித்துகளின் வரலாறு என்பது எது என்று விளக்குவதாகவும் விரிகின்றது குறிப்பாக, தலித்துக்களுக்கு இனவரைவியலில் அளிக்கப்பட வேண்டிய முக்கியத்துவத்தை வலியுறுத்துவதாக தமிழ் தலித் இலக்கியம் அமைந்துள்ளது. இலக்கியத்துக்கு அடித்தள மக்கள் வரலாற்றியலைக் கொண்டுவர ராஜ் கௌதமன், பாமா போன்ற தலித் இலக்கியவாதிகள் மேற்கொண்ட முயற்சிகள் குறிப்பிடத்தக்கவை. தமிழில் தலித் அழகியல் தலித் இலக்கியம் மொழியை கையாளும் விதம், அது சாதியையும் குறிப்பாக, பார்ப்பனீயத்தையும் கேள்வி குறியாக்கும் பரிமாணங்கள் பற்றி போதிய விமர்சனங்கள் வைக்கப்பட்டுள்ளன.

தலித் இலக்கியத்தின் அடிப்படை நோக்கங்கள், ஒடுக்கப்பட்ட மக்களின் பண்பாட்டு அடையாளங்களைக் கண்டடைதல், தங்கள் பண்பாட்டுச் சிக்கல்களை ஆராய்தல், தங்கள் உணர்வுகளை ஒருங்கிணைத்தல் என்பதோடு நின்று விடாமல், தலித் ஆணாதிக்கம் குறித்த புரிதல் தலித் பெண்ணின் கலக்குரலை முன்னிறுத்தல் என்றும் விரிவடைந்துள்ளது.

குறிப்பாக, டர்பன் மாநாட்டிற்கும் பிறகு (இன மற்றும் சாதிவெறிகளுக்கு எதிராக அகில உலக மாநாடு) தமிழ்ச் சூழலில் தலித் பெண்ணியம், தலித் பெண்கள் இயக்கத்தால் தீவிரமாக எடுத்துச் செல்லப்படும் நிலையில் தலித் இலக்கியத்துக்குள்ளும் தலித் பெண்ணியக் கருத்துக்கள் விரவி வந்துள்ளது.

பெண்ணியம், ஆணாதிக்கம், பெண் அடையாளம் குறித்து தலித் பெண்ணியத்தின் நிலைப்பாடு என்ன என்று சுருக்கமாக கவனித்துவிட்டு தலித் இலக்கியத்தில் இதன் தாக்கம் குறித்து விவரிப்பேன். தலித் பெண்ணியம், தலித் பெண்களின் ஒடுக்குமுறைக்கு அடிப்படை காரணமாகச் சாதீயம் பார்ப்பனீயம்,

சாதிய ஆணாதிக்கம் ஆகியவற்றை அடையாளம் கண்டு எதிர்க்கும் தலித் ஆணை/ ஆண்களைத் தன் எதிரியாக நிறுத்தாமல் உயர்சாதி ஆணாதிக்கச் சமூகத்தை எதிர்ப்பதை குறிக்கோளாகக் கொள்ளும். ஏனெனில் உயர்சாதி ஆணாதிக்கச் சமூகத்தின் வன்கொடுமைக்கு பலியான தலித் பெண்களின் அனுபவங்கள் தனித்துவமானவை.[1] 'பெண்' என்கிற நிலையைக் காட்டிலும் 'தலித் பெண்' என்ற நிலையில், சாதிய அடிப்படையில் தலித் பெண்ணுக்கு ஏற்படும் பிரச்சினைகள உயர்சாதிப் பெண்களின் பிரச்சினையிலிருந்து வேறுபட்டுள்ளது. தீண்டாமை, உயர்சாதி அடையாளம் போன்றவற்றின் மூலம் உயர்சாதிப் பெண்கள் ஒட்டுமொத்த தலித் மக்கள் மீது அதிகாரம் செலுத்தக் கூடியவர்களாக இருப்பதாலும், சாதியம் சார்ந்த கொடுமைக்கு தலித் பெண்கள் அதிகமாக பலியாவதாலும் தலித் பெண்ணியம், ஆதிக்கச் சாதி ஆண், பெண் இருவரையும் எதிர்க்கும் அதே சமயம், தலித் சமூகத்தினுள் விரவிக்கிடக்கும் ஆணாதிக்க கருத்துக்கள், தலித் ஆண்களின் ஒடுக்குமுறையையும் எதிர்த்துப் போராடும் தலித் என்ற, பெண என்ற, ஆணாதிக்கம் என்ற மொத்துவத்தினை, சாராம்ச அடையாளம், உயிரியல் அடித்தளம் போன்றவற்றினை மறுக்கும் வகையிலேயே தலித் பெண்ணியம் உள்ளது.[2]

பொதுவாக, தமிழ் தலித் இலக்கியம் மேற்சொன்ன அனைத்து தலித் பெண்ணியச் சிந்தனையையும் உள்ளடக்கியதாக வளரவில்லை. உதாரணமாக, இயக்க ரீதியாகவும் (தலித் பெண்கள் இயக்கத்தை எடுத்துக் கொண்டால்) இலக்கிய ரீதியாகவும் 'தலித் வரலாறு' என்று ஒன்று எழுதப்படும் பொழுது மீட்டெடுப்பு அரசியலாக' மட்டுமே தலித் வரலாறும், தலித் பெண்ணியத்தின் பங்கும் பார்க்கப்படுகிறது. பொதுவாக, தலித் எழுத்துக்கள், தலித் வரலாறு (இந்திய அளவிலும்) என்று எடுத்துக் கொண்டாலும் தலித் இயக்கங்களில் பேசப்படும் மற்றும் செயல் பாடுகளாக முன்வைக்கப்படும் சொல்லாடல்களை எடுத்துக் கொண்டாலும் – அது தலித் மீதான வன்முறையை மட்டுமே விவரிப்பதாகவும், தலித் என்ற மொத்தத்துவ அடையாளத்தை முன்னிறுத்துவதாகவும், தலித் சமூகம் ஒருபடித்தானதாக காட்டுவதாகவும் மட்டுமே உள்ளது. வரலாறு, எனில் தலித் இயக் வரலாறு அல்லது வரலாறு மறுக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட ஒட்டுமொத்த நகர்புற மற்றும் கிராம, தொழிலாளிகள், அவர்கள் அரசியல் என்றே விரிவடைந்துள்ளது.

தலித் மக்களின் கலாச்சாரம், அடையாள அரசியல், குடும்பம், தனித்துவமான, மாறுபட்ட, பல்வேறு தளங்களிலும் கட்டமைக்கப்படும் தலித் பெணகள் மற்றும் ஆண்களின் பாலியல் அடையாளம், அவர்கள் அதை எதிர் கொள்ளும் விதம்

---

1. அ. மார்க்ஸ், 'தலித் பெண்ணிய கோட்பாடுகளும், தலித் பெண்களின் பிரச்சினையும்', அன்புக்கரசி, மோகன்லார்பீர் (தொகுப்பு),
2 தலித் பெண்ணியம், (மதுரை : விடியல், 1997), ப. 44.

முதலியவற்றை உள்ளடக்கிய ஒரு இனவரைவியல் சார்ந்த இலக்கியம் மற்றும் தலித் வரலாறு என்பது மிக அரிதாகவும், குறைவாகவுமே உள்ளது.

இத்தகைய விரிவான தலித் பெண்ணியம் சார்ந்த இனவரைவியல் மற்றும் தலித் பெண்ணிய வரலாற்றியல் மட்டுமே நமக்கு, 'தலித், 'தலித் பெண்கள்' என்ற மொத்தத்துவ அடையாள அரசியலிலிருந்து சற்று வேறுபட்டு, ஆழமாக தலித் மக்களின் பாலியியல் மற்றும் சமுதாய உருவாக்கங்களை, அவை பல்வேறு விதமாகக் கட்டமைக்கப்படுவதை, அதில் தலித் பெண்கள், ஆண்கள பங்களிப்பு போன்றவற்றைப் புரிந்து கொள்ள முடியும்.

அண்மையில், பாமாவின் கதைகள், குறிப்பாக 'கருக்கு', 'சங்கதி' போன்றவை எவ்வாறு தலித் பெண்ணிய கருத்துக்களை, தலித் பெண்ணின் பார்வை, அவர்களின் கலைக்குரல் போன்றவற்றை முன்வைக்கின்றன என்பதைப் பலர் தீவிரமாக விமர்ச்சித்துள்ளனர். குறிப்பாக, தலித் பெண்களே எழுதும் பொழுது அத்தகைய எழுத்துக்கள், தன் வரலாறு, தன் சமுதாயத்தின் வரலாறு என்று விரிவதுடன் அனுபவங்களை (ஒட்டு மொத்த தலித் சமூக அனுபவங்களையும்) உள்ளடக்கியதாக, பல்வேறு பரிமாணங்களில் பெண்களின் வாழ்வியலை வெளிக் கொணர்கின்றது என்றும் நோக்கப்பட்டுள்ளது.

தலித் பெண்ணிய பார்வையில் தலித் சமுதாயத்தை சாதீய ஆணாதிக்கத்தைத் தீவிரமாக ஆராய்ந்து கட்டுடைத்தல் இமையத்தின்[3] பங்கு பெரும்பங்கு என்பது என் கருத்து இத்தகைய கோணத்தில் இமையத்தின் இலக்கிய பங்களிப்பு இதுவரை நோக்கப்படாதது வருந்தத்தக்கதே இதுவரை நோக்கப்படாதது வருந்தத்தக்கதே. இமையத்தின் அனைத்து நாவல்களுமே ('கோவேறு கழுதைகள்' முதற்கொண்டு) வெறும் தலித் இலக்கியம் என்பதோடு நின்று விடாமல் நான் முன்னர், குறிப்பிட்ட தலித்திய இனவரையியல் என்றளவில் விரிந்துள்ளன. அண்மையில் அவர் எழுதியுள்ள நாவல் 'செடல்' (2007) தலித் பெண்ணிய இனவரையியலைத் தலித் இலக்கியத்துக்குள் கொண்டுவரும் முயற்சியாகவே நான் பார்க்கிறேன்.

சாதி அடையாளம், சாதிக் கொடுமை என்பது ஒட்டு மொத்தமாகவோ, ஒரே விதமாகவோ தலித்துகளுக்குள் காணப்படுவதில்லை. சாதீயம் சார்ந்த உயர்வு தாழ்வு மற்றும் ஆதிக்கக் கருத்துக்களை தலித்துகளும் உள்வாங்கி தங்கள் மத்தியில்,

3. பள்ளி ஆசிரியராக பணிபுரியும் இமையம், தனது முதல் நாவல் 'கோவேறு கழுதைகள்' (1994) மூலம் நன்கு அறியப்பட்டவர். நாவலின் ஆங்கில மொழி பெயர்ப்பு Beasts of Burden வந்துள்ள நிலையில் இவரின் இரண்டாவது நாவல் 'ஆறுமுகம்' மொழி பெயர்க்கப்பட்டு 2007ல் வெளியிடப்பட்டுள்ளது. இவரின் 'மண்பாலம்' சிறுகதைத் தொகுப்பு, தற்பொழுது 'செடல்' போன்றவை அதிகமாக பேசப்பட்டு வருகின்றது.

தங்களுக்குள் இருக்கும் உட்சாதி பிரிவுகளுக்குள் செயல்படுத்துகிறார்கள் என்பதை மிகத் தெளிவாக நாவல் முழுவதும் விளக்குகிறார் இமையம். குறிப்பாக உட்சாதி பிரிவுகளுக்குள்ளும் (தலித்களுக்குள்ளும்) எவ்வாறு தீண்டாமை என்பது தீவிரமாகக் கடைபிடிக்கப்படுகிறது என்பதையும், தாழ்த்தப்பட்டவர்களும் எவ்வாறு தங்களுக்குள் உயர்வு, தாழ்வு அடையாளங்களை வகுத்துக் கொள்கிறார்கள் என்பதைக் காட்டுவதாக இந்நாவல் அமைந்துள்ளது.

குறிப்பாக, தலித் என்ற ஒட்டுமொத்த அடையாளத்தை உள்வாங்கிக் கொள்ளாத பல்வேறு தாழ்த்தப்பட்ட பிரிவினர்கள், அவர்களின் அடையாள அரசியல், சாதியைப் பற்றிய அவர்களின் பார்வை, அன்றாடம் அவர்கள் அனுபவிக்கும் சாதிக் கொடுமை, சாதியக் கலாச்சாரத்துக்குள் தங்களின் மதிப்பீடு எப்படி இருக்க வேண்டும் என்று அவர்கள் வகுத்துக் கொள்ளும் முறைகள், ஆண்களும் பெண்களும், குறிப்பிட்ட உட்சாதி பிரிவுக்குள்ளேயே தான் என்ற அடையாளங்களை உருவாக்கிக் கொள்ளுதல், குறிப்பாக அவர்கள் பாலியியல் ரீதியான அடையாளங்களை முன்னிறுத்துதல், (உ–ம் 'ஆண்மையற்ற ஆண்', 'அறிவுள்ள தாசிப் பெண்' போன்ற கட்டமைப்பு), எத்தகையச் சூழலில் பாலின அடையாளங்கள் மற்றும் சாதிய அடையாளங்கள் வார்த்தெடுக்கப்படுகின்றன, இவற்றின் பின்னணியில் செயல்படும் சாதிய ஆணாதிக்கம், உயர்சாதி வர்க்கத்தினரின் ஒட்டுமொத்த ஆதிக்கம், பல்வேறு அடிமை முறையைக் கட்டிக்காக்கும் பொருளாதார அமைப்பு இவற்றினூடே செயல்படும் பாலியியல் பொருளாதாரம் போன்ற பல்வேறு விடயங்களை உள்ளக்கியதாக இந்நாவல் விரிகின்றது.

இந்நாவலுக்குள் கூறப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் இமையம் முன்னெடுத்துச் செல்லும் 'தலித் பெண்ணியம்' பற்றி விவாதிப்பதற்கு முன் இந்நாவலின் முக்கிய கருவாகவும், கதாபாத்திரமாகவும் விளங்கும் 'பொட்டுக் கட்டிய பெண்', தலித் தேவதாசி முறை பற்றியும் சற்று இங்கு பார்க்க வேண்டியுள்ளது.

தேவதாசி முறை பிராமணரல்லாத பல்வேறு சாதிப் பிரிவுக்குள் இருந்தமை, அதன் பல்வேறு பரிமாணங்கள் இந்துமதம், சாதிய அமைப்பு மற்றும் பாலியியல் சார்ந்த அடிமைப் பொருளாதாரம் தேவதாசிப் பெண்களின் அடையாளத்தைக் கட்டமைத்த விதம் பற்றி ஆராய்ச்சிகளும் நாவல்களும் தமிழில் இருந்துள்ளபோதும் தலித்துகள் மத்தியல் தேவதாசி முறை கடைபிடிக்கப்பட்டது என்பதும் அந்த முறை சற்று வித்தியாசமாக இருந்ததையோ, இன்றும் அத்தகைய கலாச்சாரம் தலித்துகள் மத்தியில் இருந்து வருவது பற்றியும் கவனிக்கப்படாத நிலையில் இமையம் தலித் தேவதாசிப் பெண்ணை மையமாக வைத்து நாவலை எடுத்துச் செல்வது மிகவும் கவனிக்கத்தக்கது.

தாழ்த்தப்பட்ட பெண்கள் மீதான பாலியல் ஒடுக்கு முறையாகவே தேவதாசி முறை தலித்துக்கள் மத்தியில் கடைபிடிக்கப்பட்டுள்ளது. தாழ்த்தப்பட்ட பெண்கள் மீதான பாலியில் ஒடுக்குமுறை என்பது ஒட்டுமொத்த தாழ்த்தப்பட்ட மக்கள் மீது தங்கள் ஆதிக்கத்தையும் அதிகாரத்தையும் பலப்படுத்துவதற்காக உயர்சாதி ஆண்கள் பயன்படுத்தும் கருவியாக உள்ளது. இதனால் தாழ்த்தப்பட்ட ஆணகளும் ஆண்மையற்றவர்களாக கட்டமைக்கப்படுகிறார்கள். தலித் பெணகள் மீதான பாலியல் வன்முறையே, சாதி ரீதியான ஒடுக்குமுறை மற்றும் சாதிப் பூசல்களுக்கு அடிப்படையாக அமைந்துள்ளது. சுருக்கமாக கூறினால், சாதி அடையாளம் என்பதே பெண்கள் மீதான பாலியல் அடக்கு முறையின் மீதான கட்டமைக்கப்படுகின்றது. உ–ம் பெண்கள் உடல் மீதான வன்முறை, தாழ்த்தப்பட்ட சமூகத்தையே ஆண தன்மையற்றதாக ஆக்குவதாக அமைதல்.

இத்தகைய சாதிய ஆணாதிக்கச் சமுதாயத்தில் பாலியல் பொருளாதாரமும் (Sexual economy) நிலப் பிரபுத்துவ பொருளாதாரமும் (Feudal economy) ஒன்றாகச் சேர்ந்து பெண்களின் மீதான ஒடுக்கு முறையாக, (தேவதாசி முறை போன்று) வெளிப்படுவதுடன், ஒட்டு மொத்த தாழ்த்தப்பட்ட மக்களின் பொருளாதாரத்தை சுரண்டுதல் ஒன்றாகிவிட்டது. தாழ்த்தப்பட்ட மக்களின் தனிப்புலமும் (Private Sphere), கலாச்சார வாழ்க்கையும் தீவிரமாகக் கணகாணிக்கப்படுதல் மூலம் அவர்களின் ஒடுக்கப்பட்ட அடையாளங்கள் கட்டமைக்கப்படுகின்றன. குறிப்பாக, தலித் பெண்களின் மீதான பாலியல் ஒடுக்குமுறை மூலமே அடிமை பொருளாதாரத்திற்குத் தேவையான அடிமை சமுதாயத்தை உருவாக்கமுடிகிறது. மேலும், தாழ்த்தப்பட்ட குடும்பத்திற்குள்ளும் பாலியல் ஒடுக்குமுறை சார்ந்த ஆணாதிக்க கருத்துக்கள் வலுவாக்கம் பெறுவதற்கும், ஆணாதிக்கம் சார்ந்த அடையாளங்களை உருவாக்குவதற்கும் இத்தகைய சாதியம் சார்ந்த பாலியல் பொருளாதாரம் உதவுகின்றது.

உயர்சாதி ஆண்களின் அதிகாரம், ஆண்மை ஆகியவற்றை உறுதிபடுத்தும் விதமாகவே தலித் பெண்கள் தேவதாசி முறைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். சாதியம் சார்ந்த பாலியல் பொருளாதாரத்தில் உயர்சாதி தேவதாசிப் பெண்களுக்கு அளிக்கப்பட்ட தகுதிகள், மதிப்பீடு போன்றவை தாழ்த்தப்பட்ட தேவதாசி பெண்களுக்கு அளிக்கப்படவில்லை. உ–ம்., பெரிய கோயில்களில் தேவதாசி பெண்களாக அறியப்பட்டவர்களுக்கு நிலமும், மற்ற கோயில் சொத்துக்கள் அளிக்கப்பட்டதுடன் தேவதாசிகளை வெறுமனே, பாலியல் அடையாளத்துக்குள் ஒடுக்கிவிடாமல், கலை, கலாச்சாரத்தில் ஆர்வமுடைய சிந்தனாவாதிகளாகவும் பார்க்கப்பட்டார்கள். ஆனால் தலித் தேவதாசிப் பெண்கள், புனிதமானவர்களாக கருதப்பட்டாலும், செல்வத்துக்கும், வளமைக்கும் காரணமாகக் கருதப்பட்டாலும், தாழ்த்தப்பட்ட சாதியை சேர்ந்தவர்கள் என்பதாலேயே, ஊரில் ஒதுக்கி வைக்கப்பட்டு, வறுமையால் உழன்று, வெறும் பாலியல்த் தொழிலாளியாக மாற்றப்பட்டு மேல்சாதி

வீடுகளில் வேலை செய்யும் அடிமைகளாகக் கருதப்பட்டனர்.[4] அதே சமயம், தலித் தேவதாசிகளுக்கு அளிக்கப்பட்ட சமூக அந்தஸ்து, முக்கியத்துவம் ஒட்டுமொத்த தலித் சமுதாயத்திற்கு (தீண்டத்தகாதவர்கள் என்பது) அளிக்கப்பட்டதை விட மேலானதாகவும் தீண்டதகாதவர் என்ற தகுதி இல்லாமலும் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (தாழ்த்தப்பட்ட பெண்களைத் தீண்டாமைக்கு அப்பாற்பட்டு, உயர்சாதி ஆண்கள் புனரலாம் என்ற மனுவின் விதிமுறை இங்கு கவனிக்கத்தக்கது)

தமிழ் நாட்டில், தேவதாசி முறை ஒழிக்கப்பட்டும் தாழ்த்தப்பட்டோர் மத்தியில் இந்த வழக்கம் தொடர்வது குறித்து இமையத்தின் 'செடல்' மூலமே நாம் அறிந்து கொள்ள முடிகிறது. 285 பக்கங்களுடன், மூன்று பகுதிகளைக் கொண்டுள்ள 'செடல்' தலித் தேவதாசியின் வாழ்க்கை வரலாறாக, அவளுடைய மற்றும் தாழ்த்தப்பட்ட பெண்களின் கண்ணோட்டத்தில் வாழ்வியல் குறித்த அவர்களின் பார்வை, அனுபவங்கள் மற்றும் சாதி வன்முறை பரவலாக காணப்படும் தன்மை போன்றவற்றை விவரிக்கும் விதமாக அமைந்துள்ளது.

ஊரில் மழையின்றி, பஞ்சம் பட்டினியால் பாதிக்கப்பட்ட பறையர்கள் அடிமைகளாய் பினாங்கு கண்டி போன்ற இடங்களுக்கு குடி பெயர்ந்து செல்கையில், மேல் சாதிக்காரர்கள் ஒன்று சேர்ந்து மழை பெய்ய வேண்டும் என்பதற்காக, கூத்தாடிக் குடும்பத்தைச் சேர்ந்த செடலை செல்லியம்மன் கோவிலுக்கு பொட்டி கட்டி விடுகின்றனர். ஊருக்கு ஒதுக்குப்புறமாக ஆதரவற்ற கிழவி ஒருத்தியின் பாதுகாப்பில் குடிவைக்கப்படும் 'சாமி' செடல் ஊர் ஊராகச் சென்று பள்ளு பாடவேண்டும், கோயிலைத் தூய்மையாக வைத்திருத்தல், இன்றைய வேலைகளை செய்ய வேண்டும் ஒவ்வொரு வீட்டிலிருந்தும் ஒரு மரக்கால் கம்பு, கேழ்வரகு என்று பிடி தருவதைக் கூத்தாடிக் குடும்பங்கள் பகிர்ந்து கொள்ளவேண்டும் என்று முடிவாகிறது செடலை பொட்டுக் கட்டிய பின்னரும் ஊரில் மழை பெய்யாததால் செடலின் பெற்றோரும் மற்ற கூத்தாடி குடும்பங்களுடன் செடலைத் தனித்து விட்டுவிட்டு கண்டிக்குச் சென்று விடுகின்றனர். மழையின்மையால், படி வருமானமின்றி செடல் மேல் சாதிக்காரர்களுக்கு கைவேலை செய்து பிழைத்து வருகையில், இவளுக்கு கிடைக்கும் படி வருமானத்தில் வாழ ஆசைப்படும் கிழவி இறந்துவிடுகிறாள். யாருமற்ற அனாதையாக தனித்து விடப்படும் செடல் பருவமடைந்தவுடன் அவள் தீட்டு அம்மனுக்கு ஆகாதென்று அவள் கோயிலருகில் குடியிருப்பதைத் தடை செய்வதுடன் அவளை ஆடுமாடுகளை விட கேவலாமாக நடத்துகின்றனர். 'சாமி செடல்' என்றாலும் தீண்டாமைக் கொடுமையை,

---

4. தலித் தேவதாசிப் பெண்களின் பாலியல் மற்றும் சாதிய அடையாளம், அவர்கள் மீதான பாலியல் அடக்குமுறை, அவர்களின் வாழ்வியல் பற்றி அண்மையில் வெளிவந்துள்ள ஒரு நூலிலிருந்து சான்றுகள் பெறபட்டன : Priyadarsini Vijaisri, Recasting the Devadasi : Patterns of Sacred Prostitution the Colonial South India, (New Delhi : Karishka Publisher, 2004)

வறுமையை, தனித்து விடப்பட்டு அனுபவிக்கும் செடல், ஊர் சனங்கள் மேல் வெறுப்படைந்து தன் உயிரை மாய்த்துக் கொள்ள முயல்கிறாள். ஆற்றில் தன்னை மாய்த்துக் கொள்ள நினைக்கும் செடலின் மனதை மாற்றி வேறொரு கிராமத்தைச் சேர்ந்த பொன்னன் என்ற செடலின் தூரத்து உறவினன் அவளை நாடகக் குழுவில் சேர்த்து விடுகிறான். நாடக ஒத்திகைக்காக பொன்னனால் ஊரின் ஒதுக்குப் புறத்தில் கட்டப்பட்டுள்ள சிறிய கொட்டகையில் தங்க வைக்கப்படும் செடல் நடனக்காரியாக மாறுவதும், நடன வாழ்க்கையில் கிடைக்கும் சிறு காணிக்கை மூலம் தன் வாழ்வை நகர்த்துவதுமாக கதையின் இரண்டாம் பகுதி விரிகிறது. கூத்தாடிகளின் தொழிலான நாடகம் நடனம், ஆண்களாலேயே நடத்தப்பட்டு வந்தாலும் பொட்டு கட்டி விடப்பட்ட செடல் போன்ற கூத்தாடிப் பெண்கள் ஆட்டக்காரிகளாக மாறுவதால், பொட்டுக் கட்டிய செடல் வேசியாகப் பார்க்கப்படுகிறாள். பொட்டுக் கட்டி விடப்பட்டவள் என்பதாலும், சாதியில் கூத்தாடிச்சி என்பதாலும் சுய சாதிப் பெண்கள் தனக்கு மேலுள்ள பறையர் சாதியைச் சார்ந்தவர்களால் கேவலமாக பார்க்கப்படும் செடல், நடனக்காரியாக அனுபவிக்கும் தொல்லைகள், துயரங்கள், அதே சமயம் ஒரு தேர்ந்த நடனக்காரியாகத் தனக்குரிய தாசி அடையாளத்தை வேண்டிய பொழுது பயன்படுத்திக் கொள்ளும் விதத்தை விவரிக்கும் விதமாக கதையில் மூன்றாம் பகுதி அமைந்துள்ளது.

இந்த நாவல் செடலை சுற்றி, இவள் கண்ணோ தாழ்த்தப்பட்டோரிலும் கீழான கூத்தாடிகளின் வாழ்வு பற்றி மட்டும் நமக்கு விளக்குவதாக அமைய நான் முன்பு விவாதித்தது போன்று, தாழ்த்தப்பட்ட சாதிகளிலும் தீண்டாமையை கடைபிடிக்கும் விதம் தாழ்த்தப்பட்டோர் தங்களுக்குள் சாதிய அடிப்படை உயர்வு தாழ்வு முறைகளைச் செயல்படுத்துவதும் தனக்கும் கீழாக கருதப்படும் சாதி மக்களை ஒடுக்கு வன்முறை வாழ்க்கையில் உழலும் ஒவ்வொரு தாழ்த்தப்பட்ட ஆணும் பெண்ணும் வன்முறையை வாழ்வியல் ஆதாரமாக மாற்றும் விதத்தினையும் குறிப்பாக, சாதிய மற்றும் ஆணாதிக்க வன்முறைக்கு ஆளாகும் பெண்கள் பல்வேறு வாதங்களின் வன்முறையை வாழ்வாதாரமாக மாற்றுவதையும் மிக நுட்பமாக விளக்குகிறது இந்த நாவல்.

மேலும், வன்முறை மூலமே அன்றாடம் அனுபவிக்கும் சாதிய ஆணாதிக்க கொடுமைகள், ஒடுக்கு முறைகளை ஒவ்வொரு தாழ்த்தப்பட்ட ஆணும் பெண்ணும் சமாளிக்கின்றனர் என்பதை இமையம் மிகத் துல்லியமாக விவரிக்கின்றார். ஒடுக்கு முறை மூலமே ஒவ்வொருவரும் தனக்குள்ள தனித்துவத்தையும், ஆண், பெண் அடையாளங்களையும் குறிப்பிட்ட ஒரு சாதிக்குள் தக்க வைத்துக் கொண்டுள்ளனர் எனவும் கொள்ளலாம்.

பறையர்கள் தங்களின் சாதி உயர்வைக் காட்டும் விதத்தில் தங்களுக்குக் கீழுள்ள கூத்தாடி சாதியைச் சேர்ந்தவர்களைக் 'கூத்தாடி நாயி' என்றழைப்பதும்

(ப. 30), கூத்தாடி பெண்களின் குடும்பச் சண்டையில் தலையிடும மற்றும் கூத்தாடி ஆண்களின் 'ஆண்மையற்ற' போக்கினை விமர்சிக்கும் உரிமையைப் பெற்றவர் களாகப் பறையர்கள் இருப்பதையும், (ப. 37), புது வழமைகளைத் தாழ்த்தப்பட்டோர் மத்தியில் கொண்டுவரும் உரிமையைக் கூத்தாடிகளுக்கு மறுப்பதும், சாமி யென்றாலும் செடல் கூத்தாடிச்சி என்பதாலேயே அவளைக் கேவலமாக அவமதிப்பது போன்ற ஆதிக்க மனப்பான்மையைப் பறையர்கள் வெளிப்படுத்தும் விதத்தையும் விவரிக்கும் இமையம், ஒவ்வொரு கீழ்ச் சாதியும், சாதிப் பிரிவுகள் உருவாக்கி தீண்டாமையைக் கடை பிடிப்பதைப் பின்வருமாறு கதையில் விவரிக்கிறார்.

"சக்கிலிப் பிள்ளையை இவள் தூக்கியதைப் பிள்ளைகள் பார்த்துவிட்டால் போதும் ஹேஹே தீட்டு, யேயே சக்கிலி, எட்டப்போ, எங்களோட சேராத, யேயே சக்கிலி என்று பறத்தெருப் பிள்ளைகளெல்லாம் கேலிபண்ண ஆரம்பித்து விடுவார்கள். ஏற்கெனவே இவளைக் கூத்தாடிச்சி என்று சொல்லி திட்டுவார்கள் சில நேரங்களில் தொடக் கூடமாட்டார்கள் பொட்டுக் கட்டி விட்டதால் தான் அதிகம் ஒதுக்கிவைக்காமல் இருக்கிறார்கள். இல்லையென்றால் சக்கிலிச்சியை விட மட்டகரமாகத்தான் நடத்துவார்கள்". (ப. 80)

மேலும், மிகவும் தாழ்த்தப்பட்ட சாதியாகக் கருதப்பட்ட கூத்தாடிகள் கூட தங்களுடன் வாழும் தொம்பை சாதியைச் சேர்ந்தவர்களைத் தீண்டாமை கொடுமைக்கு ஆளாக்குவதைச் செடலின் நடத்தையின் மூலமும், தொம்பை கிழவியின் ஏற்பு மூலமும் விளக்குகிறார் :

தொம்பை கிழவி கொடுத்த கிழங்கை வாங்க மறுத்த செடல், "நீ எட்டபோ, என்னைத் தீண்டாத" என்று விரட்டுவதும், தொம்பைக் கிழவி செடலிடம், "... நாங்க எத்தன நாளு இருந்தாலும் நாங்களோ எங்க புள்ளிவளோ கோவிலுக்குள்ளார அடிவச்சிப் பாத்திருக்கியா, வெரல நீட்டி சொல்லு பாப்பம் கட்டு மானமாத்தான இருக்கோம் ஒரு குத்தங்கொற சொல்லச் சொல்லு பாப்பம்...." (ப. 86)

சாதியம் சார்ந்த வன்முறைகளும், வன்முறை கலந்த வாழ்க்கை முறையும் சாதிய சமுதாயத்தில் கட்டுண்டு கிடக்கும் அனைவரின் செயல்பாடுகளிலும், மனித உறவுகளில் வெளிப்படுவதை மிகத் தெளிவாக வெளிக் கொணரும் இமயம், ஆதிக்கச் சாதிகளின் தீண்டாமை கொடுமை என்பது ஒட்டு மொத்த தாழ்த்தப்பட்ட சாதிகளின் மீது திணிக்கப்படும் விதம், அதன் வீரியம், அதிகாரத்துவம் முதலியவற்றையும் தீவிரமாக அவ்வப்பொழுது சுட்டிக் காட்டுகிறார். ஒடுக்கப்பட்ட அடையாளத்திற்குள் வாழ்கின்ற தாழ்த்தப்பட்டோர் செடலை நடத்தும் விதமும் (அவளை 'சந்தைக்கு வந்த ஆடாக' பார்ப்பினும்) தீண்டாதவள் என்பதாலேயே மேல் சாதிக்காரர்கள் ஆவளை வெறும் அடிமை கூத்தாடிச்சியாக பார்ப்பதற்கும் உள்ள

வித்தியாசத்தை செடலின் எண்ண ஓட்டம் மூலமே ஓரிடத்தில் விவரிக்கிறார் இமையம்:

"எந்த ஊருக்கு ஆடப் போனாலும் காலனியில் ஆடுவதற்கும் குடித் தெருவில் (மேல் சாதியினா் வாழுமிடம்) ஆடுவதற்கும் வித்தியாச மில்லாமல் இருக்காது. குடித் தெருவில் எத்தனை நாள் ஆட்டமாக இருந்தாலும் மாட்டுப் பிட்டியில் வைத்துத்தான் சோறு போடுவார்கள். 'கூத்தாடி நாயவுளுக்கு திங்க தெரியுதா பாரேன் என்று சொல்லி திட்டுவார்கள். மாட்டுக் கொட்டகையில் படுத்துக் கொள்ள வேண்டும்.... அடிக்கவும் செய்வார்கள்... பறத் தெருவில் எந்தத் தொந்தரவும் இருக்காது. ஒரு நாளைக்கு ஒரு வீடு என்று முறை வைத்துக் கொண்டு ஊர்ப் பெரியவர்கள் வீட்டில் சோறு போடுவார்கள். கோயிலிலேயே படுத்துக் கொள்ள விடுவார்கள்... (ப. 165 – 166)

கூத்தாடிகளைத் தமக்குக் கீழானவர்களாகவும், தங்களுக்குக் கட்டுபட்டவா் களாகவும் பறையா்கள் கருதியும், நடத்தியும் வந்தாலும், செடல் 'சாமி செடல்' என்பதாலயே உயா்வாக நடத்தும் விதத்தையும், மேல்சாதி, குடித்தெருவை பொறுத்த மட்டில், ஒட்டு மொத்த தாழ்த்தப்பட்டோர் தீண்டாத்தகாதவர்களாக பார்க்கப்பட்டும், நடத்தப்பட்டதாலேயே தாழத்தப்பட்ட பல்வேறு சாதி பிரிவுகளுக்குள்ளும் 'தீண்டாத சாதி' என்ற ஒட்டு மொத்த அடையாளம் ஒட்டிக் கொண்டு விட்டது என்பதை பல்வேறு இடங்களில் பின்வருமாறு காட்டுகிறார் இமையம்.

குடித்தெரு செக்காதிக்கும், செடலுக்கும் நடக்கும் உரையாடல் :

> யே, அங்க போறவ யாருடி ?
> யாஞ்சாமி
> எந்தத் தெருவு
> பறத்தெருவு சாமி
> மனுசா்ளு போறது வா்றது தெரியலே?

(பறத்தெருவைச் சோ்ந்த செடல் மிருகமே / ஆடு, மாடுதான் என்பது உள்ளடங்கிய ஆா்த்தம்)

> கண்ணா நொள்ள ? செத்த ஒதுங்கிப்
> போனாத்தான் என்னாங்கறன் ?..... (ப. 57)

ஆனால் பறையா்களோ, கூத்தாடிகளைக் கேவலமாக நடத்தினாா். பொட்டுக் கட்டிய செடலுக்கு அய்யருக்கு (கோவில் பூசாரி) அடுத்தபடியாக முக்கியத்துவம் கொடுக்கும் விதத்தைக் காட்டுகிறாா். (ப. 64) சாதிய வன்முறைக்கு ஆளாகும்

தாழ்த்தப்பட்டோர். சாதிப் பிரிவுகளையும் மீறி ஒடுக்கப்பட்ட அடையாளத்தில் ஒன்றாகிவிடும் சூழலைக் காட்டும் இமையம், சாதிய ஆணாதிக்கம் எவ்வாறு ஆதிக்கச்சாதி ஆண்கள் அனைவரையும் அதிகாரம் படைத்தவர்களாகவும், ஒடுக்கப்பட்ட சாதியைச் சார்ந்த ஆண்களை 'ஆண்மை'யற்றவர்களாக உருவாக்குவதுடன் ஆண்கள் என்பதாலேயே ஏற்படும் அடையாள ஒற்றுமையில் ஓரளவு அதிகாரம் படைத்தவர்களாய் (பெண்களை விடவும்) உருவாக்குகின்றது என்றும் எடுத்துக் காட்டுகிறார். உ-ம் நடராஜப் பிள்ளையின் (மேல் சாதி ஆண்) போக்கு நடவடிக்கைகள், (பண்ணையார் என்ற அதிகார மனப்பான்மை)பறையர்கள் கூத்தாடி ஆண்கள் மற்றும் பெண்களை நடத்தும் விதம், பறையர் ஆண்கள் குடித்தெரு ஆண்களுக்கு 'வணக்கம் சனக்கமாய்' இருப்பது அதே சமயம் கூத்தாடிகள் மற்றும் பறையர் பெண்கள் மீது அதிகாரம் செலுத்துவது இப்படியாக தங்களின் பல்வேறுபட்ட சாதியம் சார்ந்த அடையாளங்களை அதிகாரம் வாய்ந்ததாக மாற்றிக் கொள்வதன் மூலம் தனக்கென ஓரிடத்தை ஒடுக்குமுறை சமுதாயத்தில் உருவாக்கிக் கொள்கின்றனர்.

சாதிய ஆணாதிக்கத்தின் வன்முறைக்கு ஆளாகும் பல்வேறு சாதியைச் சார்ந்த பெண்களும், சாதியம் சார்ந்த பழைமை வழக்கங்கள், மூடநம்பிக்கைகளையே தன் சமுதாயத் தகுதிக்கு அடிப்படையானதாக மாற்றிக் கொள்ளும் நிலைமையை இமையம் நாவல் முழுவதும் விவரிக்கின்றார். குறிப்பாக, மேல்சாதி பெண்களுக்குச் சாதி அடையாளமே அதிகாரத்தையும், சமுதாயத்தில் மதிப்பையும் ஏற்படுத்துவதால் அதை தக்க வைத்துக் கொள்வதில் மேல்சாதி பெண்கள் அதிகம் ஆர்வம் கொண்டவர்களாய் இருப்பதையும், தாழ்த்தப்பட்ட பெண்கள் மீது அவர்கள் அதிகாரம் செலுத்துவதையும் விவரிக்கிறார். உ-ம் நடராஜப் பிள்ளையின் (பண்ணையார்) மனைவி அமராவதி ஆச்சிக்கு இருக்கும் சாதிப் பற்றை காட்டுதல் நடராஜப் பிள்ளை கிறிஸ்தவ பாதிரியாரை வரவேற்றாலும் அவர் மனைவி பாதிரியாரையும் அவரின் கிறிஸ்தவ மத போதனையை வெறுப்பதுடன் 'செத்தாலும் சாதி மானம் காக்கப்பட வேண்டும்' என்ற உறுதியுடன் இருப்பதைக் காட்டுவது. (ப. 68)

சாதி அடையாளத்தால் வேறுபட்டு நிற்கும் பெண்கள், சாதியக் கலாச்சாரத்துக்குள், ஒருவர் மீது ஒருவர் வன்முறையைப் பிரயோகிப்பதுடன் பல்வேறு அடையாளங்களால் வேறுபட்டு அதேசமயம் தங்களுக்குள் ஒரு ஒற்றுமையையும் உருவாக்கிக் கொள்கின்றனர் என்றும் சுட்டிக் காட்டுகிறார். நான் முன்பு குறிப்பிட்டது போன்று பாலியல் பொருளாதாரத்திலும், சாதியம் சார்ந்த அடிமைப் பொருளாதாரத்திலும் வன் கொடுமைக்கு ஆளாகும் தாழ்த்தப்பட்ட பெண்கள் வெறும் பலிக்கடாக்களாக மட்டுமின்றி, இத்தகைய வன்முறைக்கு அடித்தளமாக உள்ள பழமை நம்பிக்கைகளையும் பழக்க வழக்கங்களையும் தீவிரமாக செயல்படுத்துபவர்களாக இருக்கின்றனர் என்பதையும் பல இடங்களில் சித்தரிக்கின்றார். உ-ம். பொட்டுக் கட்டிய

செடலுக்கு பாதுகாப்பாக இருக்கும் கிழவியின் வயதாகிய, நிராதரவற்ற, உடலுழைப்பு தேய்ந்த நிலை, அவளைச் செடலுக்கு பொட்டுக் கட்டிய தருணத்தையே தனக்கு ஆதாயமானதாகவும், பொருளாதார பாதுகாப்பு தருவதாகவும் நினைக்க வைக்கின்றது. அவளை அப்பழக்கத்திலுள்ளள வன்முறையைத் தன் வாழ்வியல் ஆதாரமாக கருத வைக்கின்றது என்பதை மிக ஆழமாக பின்வருமாறு விவரிக்கின்றார். செடலுக்காக ஊரார் சேர்த்து வைத்துள்ள 'படி' – கிழவியை மனதில் விட்டுவிடக்கூடாது என்ற எண்ணத்தை உருவாக்குகிறது (ப. 21) செடலை வைத்துப் பஞ்ச காலத்தை ஓட்டிவிட நினைத்திருந்த தன்னுடைய திட்டத்தில் மண்ணைப் போட்டுவிடுவாள் போலிருக்கிறதே என்று நினைத்தவள் பிடியை மேலும் இறுக்கினாள். (செடல் ஒடிவிடாமல் இருக்க) (ப. 22) மேலும், கிழவியின் இருப்பு, பங்களிப்பு, ஆதாயம் தேடும் மனப்பான்மை மூலம் தலித் பெண்களின் வாழ்வியல் ஆதாரமற்ற சூழல் (சாதிய ஒடுக்கு முறை சமுதாயத்தில்) நிலமற்ற பொருளாதாரச் சூழலில் தலித் பெண்கள், ஆண்களைவிட குறிப்பாக வயதான பெண்கள் அதிகமாக பாதிக்கப்படும் பொழுது மூட பழக்க வழக்கங்களையே தான் வாழ்வதற்கு ஆதாயமாக மாற்றிக் கொள்ளும் போக்கு முதலியவற்றை காட்டுவதுடன், பாலியல் ஒடுக்கு முறைக்கு ஆளாகும் செடலுக்கும், பொருளாதார ஒடுக்குமுறைக்கு ஆளாகும் கிழவிக்கும் ஏற்படும் அனுபவங்கள் சிலசமயம் ஒன்றாகவே உள்ளது என்றும் குறிப்பிடுகிறார் இமையம் : கிழவியின் விதவை நிலை, சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டு பொருளாதாரத்திற்கு போராடும் தன் நிலையும், பொட்டு கட்டியதால் 'தனித்து விடப்பட்டு' ஆண் துணையின்றி தன் உடலுழைப்பையும், ஊரார் படியையும் நம்பி வாழ வேண்டிய செடலின் நிலையையும், ஒப்பிட்டு செடலின் மேல் இரக்கம் காட்டும் கிழவி மூலம் தெளிவுபடுத்துகிறார். (ப. 41). அதே சமயம் தன்னுடைய பொருளாதாரப் பாதுகாப்பிற்கு பொட்டுக் கட்டிய செடலின் 'படி உறுதுணையாக இருப்பதால் செடல் வெறுத்தாலும் பொட்டுக் கட்டுதலை செடலின் பெருமையாக, முக்கிய அடையாளமாக மாற்றுகிறாள் கிழவி :

> "சாதியில கூத்தாடிச்சியா இருந்தாலும் நீ ஒருத்திதான் இந்தச் சுத்துப்பட்டு கிராமத்துக்கெல்லாம் பொறந்த பொண்ணுமாரி. ஒனக்கு இல்லாத உரும வேற யாருக்கு இருக்கு? ஒங்க அத்தக்காரி பள்ளுப்பாட (பொட்டுக் கட்டப்பட்ட செடலின் அத்தை) போனதை வச்சித்தான் ஒப்பன் குடும்பமே ஓடுச்சி" (ப. 66).

அதே போன்று, சாதிய ஆணாதிக்க ஒடுக்கு முறைகளை ஒரே விதமாக அனுபவிக்கும். ஒரே சாதியைச் சேர்ந்த பெண்களுக்குள்ளும் சாதிய ஆணாதிக்கம் வலியுறுத்தும் பாலியல் கோட்பாடுகளாலும், பாலியல் சுதந்திரமற்ற தன்மையானாலும் வேறுபாட்ட அடையாளங்களால் வேறுபாடுகள் கட்டமைக்கப்படுகின்றன

என்பதைக் காட்டும் இமையம் பெண்கள் இதை எவ்வாறு எதிர்கொள்கிறார்கள் என்பதை குடும்ப அமைப்பின் பல்வேறு நிலையிலுள்ள தாழ்த்தப்பட்ட பெண்களின் எண்ண ஓட்டங்கள் மூலம் தெளிவுபடுத்துகிறார்.

பொட்டுக் கட்டிய பெண்களுக்குள், பொட்டுக் கட்டியதால், தேவதாசியாக இருப்பதால் ஏற்படும் அடையாள ஒற்றுமை, (தங்களின் மேல் திணிக்கப்பட்ட இந்த அடையாளத்தின் மூலமே) அவர்களுக்குள் கருத்தொற்றுமையை உருவாக்குவதுடன், அந்த அடையாளத்தின் மூலம் ஆதாயம் தேடும் அவர்கள் மனப்போக்கையும், அவர்களும் தேவதாசி தொழிலை எப்படி பார்த்தனர் என்று விளக்குகிறார் இமையம் பொட்டுக் கட்டிய பெண்களின் அறிவுக் கூர்மை, தன்தனித் திறமைகளை வெளிப்படுத்த பொட்டுக் கட்டுதல் வழக்கம் வாய்ப்பளித்தல் பாலியியல் தொழிலால் வரும் பொருளாதார ஆதாயம் முதலியவற்றை செடல் மற்றும் பாஞ்சாலி போன்ற பொட்டிக் கட்டிய கூத்தாடி தேவதாசி பெண்கள் மூலம் காட்டும் இமையம் அவர்களுக்கு மற்ற 'குடும்ப பெண்கள்' போன்று இல்லாதது குறித்து இருக்கும் ஏக்கம் பாலியியல் தொழிலில் உள்ள வன்முறை குடும்ப அமைப்பில் கிடைக்கும் பெருளாதார, பாலியல் பாதுகாப்பு குறித்த தாசிகளின் ஏக்கம் முதலியவற்றை பல்வேறு இடங்களில் சுட்டுகிறார். உ–ம் "மட திறக்க போன மச்சான் இன்னம் எங்கடைய திறக்க வல்லியேன்னு" தாசி லட்சுமி பாடுதல் (ப. 79) அதே போன்று, பொட்டுக் கட்டிய பெண்களின் சுதந்திரம், குடும்பப் பொறுப்புகளற்ற சூழல், 'படி' வாங்குவதால் கிடைக்கும் பொருளாதார அதிகாரம். அவர்களுக்கு கிடைக்கும் பாலியியல் சதந்திரம் (திருமணம், குடும்பம் என்ற அமைப்பிலுள்ள பாலியல் கட்டுப்பாடு இல்லாமை) குடும்பம் சார்ந்த தாழ்த்தப்பட்ட பெண்கள் மத்தியில் பொறாமையையும், ஏக்கத்தையும் ஏற்படுத்துவதையும் நாவலின் பல்வேறு பகுதிகளில் பின்வருமாறு காட்டுகிறார்.

> செடலைப் பார்த்து எல்லா பெண்களுமே பொறாமைப்படுவார்கள். அவளைப் போல சீவிக் கொள்ள, சேலை கட்டிக் கொள்ள முடியவில்லையே என்று மனம் புழுங்கிப் போவார்கள். (ப. 146) பொட்டுக் கட்டிய செடலைப் பார்த்து, அவளின் நடனமாடும், மயக்கும் திறமைகளை பார்த்து அதிசயத்துடன் குடும்பப் பெண்கள் பேசுவதாக

பின்வருமாறு விவரிக்கிறார் :

> என்னாடி அம்மா அதிசயமாக இருக்கு நாலு ஊருக்காரன் கூடியிருக்கிற சவயில் நவ குட்டி வந்து என்னம்மா ஆடுறா; பாடுறா? .... இப்படியொரு அதிசயத்த எங் கண்ணால ஒரு நாளும் நான் கண்டதில்லடி சாமி ! எதுத்த வூட்டு ஆம்பிளகிட்டே பேசுறதுன்னாலே நம்பளுக்குப் பொச்சியில தண்ணீ வந்து போவுது, தொட நடுங்கிப் போவுது.... (ப. 164)

தாழ்த்தப்பட்ட குடும்பங்களுக்குள்ளும், தீண்டாமையை பல்வேறு மதம் சார்ந்த மூட நம்பிக்கைத் தாழ்த்தப்பட்ட பெண்கள் தீவிரமாகக் கடைப்பிடிப்பினும், குடும்ப அமைப்பின் மூலம் தங்கள் மீது திணிக்கப்பட்டுள்ள பாலியல் கட்டுப்பாடுகளை மீறவேண்டும் என்ற எண்ணங்களை செடலை அவர்கள் பார்க்கும் விதத்திலிருந்து விவரிக்கின்ற இமையம், அதே போன்று அப்பெண்கள், குடும்ப அமைப்பின் மூலம் தாங்கள் பெறும் சமுதாய அந்தஸ்து, ஆண்கள் மூலம் கிடைக்கும் (சிறிதளவு என்றாலும்) வருமானம் ஆகியவற்றை இழக்கத் தயாராகவில்லை என்பதோடு, இத்தகைய எண்ண ஓட்டங்களே அவர்களுக்குள் ஒரு நிலைகொள்ளாத் தன்மையையும், செடலுக்கு எதிராக தங்களின் அடையாளத்தைக் கட்டமைக்கும் சூழலையும் ஏற்படுத்துகிறது என்பதையும் சுட்டிக் காட்டுகிறார். உ–ம்.. செடலின் நடை, உடை, பாவனை, பாலியல், சுதந்திரம், குடும்பப் பொறுப்புகளற்ற நிலைமையை தங்கள் நிலைமைக்கு மேலானாதாக கருதும் அவர்கள், செடலை வேசியாகவும், ஆண்களை மயக்கும் குடும்பத்தை கெடுக்கும் 'கூத்தியாளாகவும்' வர்ணிக்கின்றனர். (ப. 129)

அதே போன்று பொட்டுக் கட்டிய பெண்களும் பொட்டுக் கட்டும் வழக்கத்தையும், வேசியாக பார்க்கப் படுவதையும் வெறும் வன்முறையாக மட்டும் பார்க்காமல், அந்த நிலையை தன் பாலியல் அடையாளங்களை தான் வாழ்வதற்கு சாதகமாக மாற்றிக் கொள்ளும் திறமை மிகுந்தவர்கள் என்பதையும் தெளிவுபடுத்துகிறார். நாவலின் பல்வேறு பகுதிகளில், செடல் ஒரு பொட்டுக் கட்டிய பெண்ணாக தன்னை வரித்துக் கொள்ளும் விதத்தினையும், அவளிடம் ஏற்படும், உடல் மற்றும் மனம் மாற்றங்கள், அதிலிருக்கும் அழகியலையும் விவரிக்கிறார்.

> செடலினுடைய அலங்காரத்தை, ஒயிலை மற்றவர்கள்தான் ரசித்தார்கள் என்றில்லை. அவனுக்கே அதில் விருப்பம் உண்டு. போதை உண்டு. அதைக் குறைத்துக் கொள்ள வேண்டும் என்று ஒருநாள் கூட அவள் எண்ணியதில்லை. பொட்டுகட்டி விடப்பட்ட பெண்களுக்கே உரிய தளுக்கும் மெளுக்கும் செடலிடமும் உண்டு.... தேவைப்பட்ட நேரங்களில் அவற்றைப் பயன்படுத்திக கொள்ளவும் அவள் தவறவில்லை. (ப. 146).

பாலியல் சார்ந்த தங்கள் பொட்டுக் கட்டிய அடையாளத்தை வைத்து ஆண்களின் மீது தங்கள் அதிகாரத்தைத் திணிக்கத் துணிந்தவர்கள் இவர்கள் என்பதையும் பின்வருமாறு விவரிக்கிறார்.

> பொட்டு கட்டி விடப்பட்ட பெண்களும் லேசுபட்டவர்களில்லை. பின்னாலேயே சுற்றிச் சுற்றி வருகிற பையன்களிடம் சகஜமாகச் சிரித்துப் பேசுவார்கள் சட்டைப் பையில் கையை விட்டுக் காசு எடுக்கப்பார்ப்பார்கள்.... மடிடிய அவிழ்த்துப் பார்ப்பார்கள். காசு இல்லாத

ஆட்களைக் கிண்டலான பாட்டைச் சொல்லி மட்டம் தட்டுவார்கள். பசை உள்ள ஆள் என்று தெரிந்தால் சிரித்தே, முகச் சொடுக்கல் போட்டே காரியத்தை முடித்துவிடுவார்கள். (ப. 149)

சாதிய ஆணாதிக்க சமுதாயத்தில் பல்வேறு சமூக மூடப் பழக்கங்களால் (பொட்டுக் கட்டுதல் போன்று) மிகவும் வன்முறைக்கு ஆளாக்கப்படும் தாழ்த்தப்பட்ட சாதியை சார்ந்த பெண்கள் அத்தகைய ஒடுக்குமுறைகளையும் மீறி பல்வேறு சூழலுக்கேற்ப, தங்கள் அடையாளங்களை, வளமை மிகுந்த கற்பனைகளுடன், கட்டமைத்துக் கொள்கின்றனர் என்பதை காட்டும் இமையம் ஒடுக்கப்பட்ட சமுதாயத்து (தலித்துகள்) ஆண்களும் தங்களை எவ்வாறு கட்டமைத்துக் கொள்கின்றனர் என்பதை விவரிக்கிறார். பொட்டுக் கட்டிய பெண்ணின் படி வருானத்தில் வாழும் கூத்தாடி ஆண்களை 'ஆண்மை'யற்றவர்களாக பறையர்கள் கட்டமைப்பதையம், கூத்தாடிப் பெண்களே தங்களின் ஆண்களை ஆண்மையற்றவர்களாக பார்ப்பதையும், இத்தகைய அடையாளங்களை கூத்தாடி சமுதாயத்து ஆண்கள் எவ்வாறு எதிர் கொண்டனர் என்பதை பொன்னன் போன்ற பாத்திரங்கள் தெளிவு படுத்துகின்றன. (ப. 129)

வறுமையையும், சாதிய ஒடுக்குமுறையையும் நேரடியாக எதிர்த்துப் போராடும் திராணியற்ற அடித்தட்டு மக்கள், தங்கள் மாற்று எண்ணங்களாலோ இத்தகைய வன்முறையை எதிர்கொண்டனர், எதிர்த்தனர் என்பதையும் இமையம் காட்டத் தவறவில்லை. வளமையை கற்பனை செய்யும் ஒடுக்கப்பட்ட சாதியைச் சார்ந்த பெண்களின் திறமை, அவர்களின் கற்பனைகள் எவ்வாறு வறுமையின் நிதர்சனத்தை தலை கீழாக மாற்றிப் போடுகிறது என்று காட்டும் நாவலாசிரியர். வறுமைக் கெதிரான பெண்களின் கனவுகள், கற்பனைகள் அவர்களுக்கேயுரிய கதை சொல்லும் திறமையில் அடங்கியிருப்பதை கிழவி மற்றும் சில கூத்தாடி பெண்களின் வாயிலாக வெளிக் கொணர்கிறார் இமையம் இந்நாவலில் வெளிப்படும் தலித் பெண்ணியப் பார்வை என்னைப் பொறுத்த மட்டில், இதுவரை தமிழ் தலித் இலக்கியத்தில் இடம் பெறாத ஒன்று என்றே குறிப்பிட வேண்டும். ஒடுக்கப்பட்ட, பல்வேறு வன்முறைகளுக்கு ஆளாகும் பெண்களின் பார்வையில், பெண்மை, ஆண்மை பற்றிய புரிதல் எவ்வாறு சாதிய ஆணாதிக்கத்தை சார்ந்தும், அதனை எதிர்த்தும் கட்டமைக்கப்படுகின்றது – செயல்படுகின்றது என்பதை அப்பெண்கள் பொருளாதார மற்றும் பாலியியல் கொடுமைகளுக்கு எதிராக வகுக்கும் திட்டங்கள், தங்கள் பாலியியல் தேவைகளை வெளிப்படுத்தும் விதம் சுய சாதி ஆண்களின் அடையாளங்களை கட்டமைக்கும் வாதம் போன்றவற்றால் விளக்குவதுடன், சாதிய ஆணாதிக்க சமுதாயத்தில் தாழ்த்தப்பட்ட மற்றும் உயர் சாதி ஆண்கள், சாதியத்துடன் தங்கள் அடையாளங்களை இணைத்து, மற்ற சாதி ஆண்கள், பெண்களை மதிப்பிடும் விதம், ஆண்மை குறித்த மதிப்பீடு முதலானவற்றால் சற்று வேறுபட்ட முறையில்

தலித் வாழ்வியலின் உள்முரண்பாடுகளை முன்வைக்கின்ற யதார்த்த வகை நாவலாக விளங்குகின்றது.

குறிப்பு :

இக்கட்டுரையின் சில பகுதிகள் செப்டம்பர் 07ல் சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனத்தில் நடத்தப்பட்ட நூல் விமர்சனக் கூட்டத்தில் பகிர்ந்து கொண்டவை. வேறு சில பகுதிகள் மற்றும் கட்டுரையின் முன் படிவம், 'தெற்காசிய பெண்ணியம் : ஆணாதிக்கம், தேசியவாதம் மற்றும் அடிப்படை வாதம் என்ற தலைப்பில் 'பெண்கள் கல்வி மற்று ஆராய்ச்சி நிறுவனம்; கொழும்பில் நடைபெற்ற கருத்தரங்கில் (நவம்பர் 30 டிசம்பர் 01, 2007) வாசிக்கப்பட்டது. இக்கருத்தரங்கில் கலந்து கொண்டோர் முன்வைத்த விமர்சனங்கள் சிலவற்றையும், நூல் அறிமுக கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட கருத்துக்களையும், முழுவதுமாக இக்கட்டுரையில் சேர்க்க இயலாவிட்டாலும் ஓரளவு முயன்றுள்ளேன். கலந்து கொண்டு கருத்து தெரிவித்தோர் அனைவருக்கும் நன்றி. குறிப்பாக, என் நண்பர்கள் அறிவழகன், செல்வி திருச்சந்திரன் போன்றோரின் விமர்சனங்கள் கட்டுரையை செழுமை படுத்த மிகவும் உதவின.

# தமிழ் உடலரசியலின் மூன்றாம் பரிமாணம்

-குட்டி ரேவதி-

**நா**ன், எனது பார்வை, எனது சிந்தனை, எனது சொற்கள் எல்லாமும் இந்த உடலிலிருந்துதாம் வெளிவருகின்றன. இந்த உடலுக்குள் இருந்துகொண்டுதான் ஒரு தாழிக்குள் கையை விட்டு எடுத்துத்தருவதைப்போல எல்லாவற்றையும் எடுத்துத்தருகிறேன். இந்த உடல் 'ஒரு பெண்ணுடலாக' இருப்பதாலேயே பொருட்படுத்தப்படுகிறது. எதிர்பொருட்டு உடையதாக விளங்குகிறது. அளிக்கப்படும் நிர்பந்தங்களும் விதிகளும் கட்டுப்பாடுகளும் பெண்உடல் என்பதாலேயே மதம், சாதி, பாலிமை, வர்க்கம், அரசியல் என ஓர் 'அரசியல் அடையாள அட்டை'யாக இயங்குகிறது.

தமிழகத்தில் உடலரசியல் விவாதத்திற்கானப் பொருளாக ஆனபோது பெண்படைப்பாளிகளுக்கிடையே இயக்கவாதிகளுக்கிடையே எழும்பிய கருத்தியல்முரண்களையே, அவை அணுகப்பட்ட முறைகளையே இன்றைய கருத்துரைக்கான விஷயமாக எடுத்துக்கொள்கிறேன்.

பெண்கவிஞர்கள் உடலுறுப்புகளைப் படிமங்களாக எழுதத் தொடங்கியதும் எழுந்த பெண் எழுத்தாளர்களின் விமர்சனங்களே இங்கே நினைவுகூரத்தகுந்தன. 'காலங்காலமா ஆண்கள் எழுதுவதைத்தான் பெண்களும் செய்கிறார்கள். ஆண்கள் பெண்களின் உடைகளை உரிந்தார்கள். இப்பொழுது பெண்களே அவிழ்த்துக் கொள்கிறார்கள்' என ஒரு படைப்பாளி கூறினார். இன்னொருவர் 'உடல் தினவெடுத்துக் கவிதை எழுதுவதாகவும்' சொந்த வாழ்க்கையில் பாலியல் திருப்தி இல்லாமல் கவிதை எழுதுவதாகவும் குறிப்பிட்டார். மற்றொருவர், 'பெண்ணுடல் ஒரு புதிர்; அதை எழுத்தில் வெளிப்படுத்துவது பெண்மைக்கு இழுக்கு' என்றார். இத்தகைய பெண் எழுத்தாளர்களுக்கு மத்தியில் தொடர்ந்து தார்மீக ஆதரவு தந்தவர்கள் அம்பை, சிவகாமி, பாமா என வெகுசிலரே. இவர்களின் புரிதலும் உள்வாங்கிக்கொண்ட பெண்ணிய அரசியலும் காத்திரமானதாக இருப்பதே காரணம்.

தமிழின் ஒரே சொல் ஆணால் பயன்படுத்தும்போது அவனது அதிகாரப்பிரயோகமாகவும், பெண் அந்தச் சொல்லைப் பயன்படுத்த இயலாதபடி சமூக இறுக்கமாகவும் வெளிப்படுகிறது. ஆக, ஆணின் பயன்பாட்டுக்கு மட்டுமே

இருக்கும் சொல்லை நமது பயன்பாட்டுமொழிக்குள் கொண்டுவர வேண்டியிருக்கிறது. மேலும், அந்தச் சொல்லுக்கு வேறு சமூக, பண்பாட்டு அர்த்தங்களைக் கொடுக்க வேண்டியிருக்கிறது. அதுமட்டுமன்றி பெண்ணுக்கும் ஆணுக்கும் மொத்தமாக மானுடக்குலத்துக்கே பயன்பட புரியும் வண்ணம் பொதுமொழியை உருவாக்க வேண்டியிருப்பதை இச்சூழ்நிலை உணர்த்துகிறது.

பெண்ணுக்கு மறுக்கப்பட்ட ஒற்றைச்சொல்லைப் பயன்படுத்துவது கூட அவளது உடையை அவளே அவிழ்த்துக்கொள்வதற்கு ஒப்பானது என்னும் கூற்று. கூறியவர் பெண்எழுத்தாளராக இருப்பினும் அவரது அடிமனதில் சமூகம் சுமத்திய பண்பாட்டு ஒடுக்குமுறைகள் இயங்கிக்கொண்டேதானிருக்கின்றன என்பதைப் புலப்படுத்துகிறது. கற்பிற்கான இன்றைய விளக்கம் திராவிட அரசியலால் தரப்பட்டது. இதையே எல்லாப் பெண்களும் மனனம் செய்துகொண்டு விடுதலையின் சொற்களைக் கூட உடலுக்குள் அனுமதிக்க மறுக்கின்றனர்.

'பெண்ணுடல் ஒரு புதிர்' என்று கூறுவதன் வழியாக உடலுக்குள் மறைந்து இருக்கும் நோய்களைத்தான் காப்பாற்ற முடியும். சொந்த வாழ்க்கையில் பாலியல் திருப்திக்கான அளவுமானியாகப் பெண்ணெழுத்து மாறிநிற்குமெனில் நாம் இங்கு இன்று பெண்படைப்பாளிகளாகக் கூடி பெண்ணிய அரசியலை விவாதிக்க வேண்டியதில்லை. சொந்த வாழ்க்கையில் பாலியல் திருப்தியுடன் இருக்கிறேனா என்று வெளிப்படையாகவே என்னாலோ எந்தப் படைப்பாளியினாலுமோ கூறமுடியும். அதற்கு எழுத்தை நாடவேண்டிய அவசியமில்லை. மருத்துவர் இக்கேள்வியை எழுப்பும்போது துறைசார்ந்த அறமாகப் போற்ற, இவர்களுக்குள்ளே இப்படி ஒரு கேள்வி எழுவது வேடிக்கையான விஷயம். இம்மாதிரியான கவிதை எழுதுபவர்கள் காதலில் தோல்வியுற்றவராக, கணவனின் அன்பு பெறாதவராக, நிறைவான குடும்பவாழ்க்கை பெறாதவராக இருப்பார்கள் என்ற கற்பிதங்களைப் பெண் எழுத்தாளர்களே எழுப்பிவிட்டனர்.

அடுத்ததாக, 'உலகில் இதைவிட எழுதவேண்டிய பிரச்சனைகள் எவ்வளவோ இருக்கையில் அதாவது தேசியம், அணு ஆயுதப் பிரச்சனை, மதத்தீவிரவாதம், போர், சுற்றுச்சூழலில் பிரச்சனைகள், இனஒடுக்குமுறை... என நாம் விவாதிக்க வேண்டிய பிரச்சனைகள் பல இருக்கையில் பெண் எழுத்தில் உடலை முன்வைப்பதும் அதற்கான அவசியத்தை விவாதிப்பதும் அவசியமில்லாதவை' என ஒரு வாதம் எழுந்தது. ஆனால் மேற்சொன்ன பிரச்சனைகளிலிருந்து விடுதலை பெறுவதற்கான திறப்புத்தான் எம் எழுத்து. ஏனெனில் மேற்சொன்னவை எல்லாவற்றிலும் காயம் பெறுவது, அடிவாங்குவது, வன்முறையை அனுபவிப்பது பெண்ணின் உடலே. மேற்சொன்ன பிரச்சனைகளின் சக்கரங்களுக்கிடையில் நசுங்கிச்சாவதும் பெண்ணின் உடலே. இந்நிலையில் பெண்ணின் பக்கமிருந்து எதைப் பேசுவது?

மேலும் தேசியமாக இருக்கட்டும், அணுஆயுதப்போராக இருக்கட்டும், மதத்தீவிரவாதமாக இருக்கட்டும், சுற்றுச்சூழலியலாகட்டும், இனஒடுக்குமுறையாக இருக்கட்டும், எதிலுமே பெண்ணின் இருப்பும் கருத்தும் மதிக்கப்படுவதில்லை. இவை பெண்ணால் உருவாக்கப்பட்ட பிரச்சனைகளுமல்ல. ஆணின் தர்க்கங்களையும் அதிகாரங்களையும் நிலைநிறுத்த ஆண்களால் வடிவமைக்கப்பட்ட தத்துவங்கள், அதை வலியுறுத்த நடத்தப்படும் போர்கள். இவற்றை எதிர்க்கவும் அடியோடு சாய்க்கவும் ஆணின் அதிகாரத்தை வேரறுக்கவும் பெண்கள் தமது உடலைப் பாடுபொருளாக்க வேண்டும். பெண்உடல், ஆணின் தத்துவங்களால் அங்கஹீனப்படுவதையும் வன்முறை, ஒடுக்குமுறைக்கு ஆளாவதையும் எதிர்க்க உடலைப் பாதுகாக்க இப்பிரச்சினைகளினால் உடல்கொள்ளும் படிமங்களை முன்வைக்க வேண்டும்.

ஒரு கவிஞராக வாழ்வியல் சிக்கல்களைத் தீர்க்கும் சரியான ஆயுதங்களாக சொல்படிமங்களே இருப்பதை நம்புகிறேன் நான். ஒரு குறிப்பிட்ட பிரச்சனையின் அத்தனை முடிச்சுகளையும் ஒரு சொல்படிமம் கொண்டு அவிழ்க்கும்படியான கவிதையே நவீனக் கவிதையாக இருக்க முடியும். சொல்லப்போனால் தமிழகத்தில் கவிஞர்களோ இயக்கவாதிகள், அரசியல்வாதிகளுக்கு முன்பாகவே பிரச்சனைகளை முன்கூட்டியே கவிதைகளில் ஆண்டிருக்கிறார்கள். ஆக. இன்று முன்வைக்கும் உடலரசியல், மறைந்திருக்கும் அத்துணை பெண்பிரச்சனைகளையும் மறைக்கப்பட்ட ஒரு தாழ்த்தப்பட்ட பெண்ணின் பிரச்சனைகளைக்கூட கண்முன்னே இழுத்து வருகிறது.

பெண்கள் தங்களுடைய பாடுகளைச் சொல்லவே அவயவங்களைக் குறிப்பிடுகிறார்கள். அந்த அவயவங்களுக்குள் பல நூற்றாண்டுகளின் பெண்வரலாறு நினைவுகளாகவும் உணர்ச்சிகளாகவும் ஒளிந்திருக்கிறது. உடலை வெறும் இன்பங்கள் நுகர்வதற்காகவே என்ற எண்ணத்தை வலியுறுத்துவதானவை யாகவே இருந்தவை விமர்சனங்களே. புத்தகங்களைச் சுமந்து விற்றல், தெருக்கடையில் தேநீர் அருந்துதல், தெருவில் நின்று போராடுதல், பேரணியில் கலந்துகொள்ளல் என உடலுக்கு மறுக்கப்பட்டதை, உடலால் இயலாது எனத் தீர்மானித்ததை வலிந்து செய்தல் உடலின்பத்திற்காக எனவே இருக்க முடியாது.

தமிழகத்தில் உடலரசியல் இவ்வளவு முன்னபிப்பிராயங்களோடும் எதிர்ப்புகளோடும் அணுகப்படக் காரணங்கள், பெண்கள் தன்மைக்கூற்றோடு கவிதைகள் எழுதும்போது அவை சுயஅனுபவங்களாகவே கருதப்படுதல், பாலியல் விவாதத்தை எழுப்பும் எழுத்து சாதி, மத, குடும்ப, அரசு நிறுவனங்களைக் குலைக்கும் வன்மையைப் பெற்றிருத்தல், மற்றும் கடந்த தமிழக வரலாற்றின் தூண்கள் ஆண்மையக் கற்பிதங்களான பெண்உடல் புனிதம், கற்பு, தாய்மை, கருஉருவாக்கம் போன்றவற்றின் மீது நிறுத்தப்பட்டிருத்தல்.

காமம், விரகதாபம், கற்பழிப்பு தொடர்பான விஷயங்களை மட்டுமே நேரடியாக உடல்உறுப்புகள் சுட்டல் அல்லது உடலரசியல் குறிப்பதாக, பெண்உடல்வெளியைக் குறுக்கிவிடுகிறார்கள். ஏனெனில் அந்தச் சொற்களுக்கு அப்படியானதொரு ஒற்றைப்பரிமாண அர்த்தம் மட்டுமே, வழங்கப்பட்டு, பேசப்பட்டு வந்திருக்கிறது. தனக்கெனக் காலூன்ற நிலம் அல்லது வெளி அளிக்கப்படாத பெண்ணாகவோ, உடல்கூறுகள், இயங்கும் தத்துவம், ஆரோக்கியம் மற்றும் அவை சார்ந்த விழிப்புணர்வு பெறாத பெண்ணாகவோ பெண்படைப்பாளி பார்க்கப்படுவதில்லை; அவள் எழுத்தில் சுழலும் அத்தகைய அரசியலும் விவாதிக்கப்படுவதில்லை. கண்ணகி என்னும் இலக்கியப் பெண்படிமத்தினைக் கற்பு எனும் ஒற்றைப் பரிமாணத்திற்குள் அடைத்து அதை அரசியல் ஆதாயத்திற்கான சந்தைப்பொருளாக்கிய ஓர் அரசு – ஆண்மைய அரசு – இதுவரை பெண்களுக்கு இயைபான உரையாடலைக் கிளப்பியதே இல்லை. எனில் 'உடலரசியல்' என்பது பெண்ணின் சுயஅனுபவமாகவே பார்க்கப்படுவதான அரசாகவே இருக்கும். அந்தந்த நிலப்பொருளாதாரம் அந்தந்த நிலவெளிக்கு ஏற்றாற்போல் பயன்பாட்டுப் பொருளாய் மாற்றப்படும் பெண், ஆகியவற்றை கவனத்தில் கொண்டே ஒடுக்குமுறையை நிகழ்த்துகிறது அத்தகைய அரசு. பெண்ணின் மற்ற குணஇயல்புகளை அறம், துணிவு, ஞானம், துறவு ஆகியவற்றைப் பேசாமல் பெண்ணின் பாலிமை குறித்த கவலையைப் பண்பாடாகக்கொண்டிருக்கும் ஒரு சமூகமும் அரசும் பெண்ணின் பாலிமை குறித்த உரையாடல்கள் எழும்போதுகூட வரம்பு மீறிய செயலாகவே அர்த்தப்படுவதும், அத்தகையப் பெண்ணை மௌண்ட்ரோடில் நிற்கவைத்து மண்ணெண்ணெய் ஊற்றி எரிக்கவும் சூளுரைக்கும்.

உடல்மொழி, உடலரசியல் போன்றவை மேலைதேயத்துத் தத்துவமெனவும் அதை நாம் கடன்வாங்கிப் பயன்படுத்துவதாகவும் கூறப்படுகின்றன. உலகில் எந்த நாட்டிலும் இழிவான சாதிப்படிநிலையை முன்வைத்து 'உடலைத் தீண்டினால் தீட்டு' எனும் கருத்தும் நடைமுறையில் இல்லை. தலித் மக்கள் வாயில் மலம் திணிப்பதையோ மூத்திரம் பெய்வதையோ உடல்ரீதியான வன்முறையாகப் பார்க்காத இந்தியச் சமூகத்தில் அல்லாது வேறெங்கு உடலரசியலின் தேவையும் பயன்பாடும் மிக்கதாக இருக்கும்? நமது சாதி, வர்க்க மண்ணுக்கு மேலதிகமான தொடர்புடையதாகவும், நிவாரணம் தருவதாகவும் உடலரசியல் இருப்பதால் தான் சாதி, மதம், வர்க்கம், குடும்பம் போன்ற அதிகாரமையங்கள் வழியாக அதிகாரத்தை நுகர்ந்தவர்கள் 'உடலரசியலை' விவாதிப்பதன் மூலம் சுயநசிவைச் செய்யவேண்டியிருக்கும் என்று அச்சம் கொள்கின்றனர்.

பெண்ணியத்தைச் சாதிய அடிப்படையில் அணுகுவது குறுகலான பார்வை என்றும் பெண்ணியத்தின் ஒரு பகுதியாக சாதிமறுப்புப் பெண்ணியம் இருக்க முடியுமே அன்றி சாதிமறுப்பு இயக்கத்திற்குள் பெண்ணியத்தைப் பொருத்த

முடியாது என்றும் கூறும் தமிழகப் பெண்ணியலாளர்களும் உள. ஆனால் இந்திய மண்ணின் வாழ்வியல் அத்தகையதன்று. சாதியதிகாரப்படிநிலை வழியாகவே பெண்ணின் மீதான ஒடுக்குமுறை இயங்கிவந்திருக்கிறது. அவ்வதிகாரப் படிநிலையைத் தகர்த்தாலன்றி பெணவிடுதலை முழுமையானதாயிராது. அதன் பூரணத்துவத்தைத் தொடஇயலாது. ஆக, ஆணாதிக்கம் குறித்த விளக்கத்தை மறுபடியும் விளக்கம்பெறச் செய்யவேண்டியிருக்கிறது. இயற்கையையும் இயல்பூக்கத்தையும் புறக்கணித்து சாதியதிகாரப்படிநிலையை ஏற்பதாக இருக்கும் தற்போதைய 'ஆணாதிக்கம்' தரும் விளக்கத்தைப் புறக்கணிக்க வேண்டும். புதிய விளக்கம் தேவையாயிருக்கிறது.

சாதியம் என்பது ஆராய்ச்சிக்கு உரிய பொருள் மட்டுமேயன்று. முடிந்துபோவதற்கு. ஏனெனில் சாதியத்திற்கு எதிரான போராட்டம் சென்ற நூற்றாண்டில் தொடங்கியதும் அன்று. ஆசீவகம் இருந்த காலந்தொட்டே இந்து மதத்தைப் பலவகைகளில் எதிர்க்கவும் தோற்கடிக்கவும் வேண்டியிருந்தது. கடந்த நூற்றாண்டில் தமது அதிகாரத்தை அதிகப்படுத்திக்கொண்ட மற்ற சாதிப் படிநிலைகளில் இருந்தவர்கள்கூட, சாதியின் அடையாளத்தோடுதான், அதன் வழியாகத்தான் தங்களின் செல்வாக்கை உயர்த்திக்கொள்ள முடிந்தது. ஆகவே, நான் முதல் தலைமுறையன்று, 'ஒடுக்குமுறை சரியன்று' என வெறுமனே வார்த்தைகளால் எதிர்த்துப்போராட நமது உடல்களால் எதிர்க்க வேண்டியிருக்கிறது. ஏனெனில் எல்லா ஒடுக்குமுறைகளும் நமது உடல்வழியாகவே நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றன. கொடுமையான நினைவுகளைச் சேகரிக்க முடியாத இடமாக அல்லது சேகரிக்கவேண்டிய இடமாக உடல் மாறியிருக்கிறது. அவை உடலைக் குறுக்கவேண்டிய தருணங்களைப் பற்றியதாகவும் அவை பற்றிய நினைவுகளாகவும் இருக்கின்றன. உடலரசியலை எழுதும்போதும் சுயம் முற்றிலும் விடுபட்டதைப்போன்று உடலரசியல் அவதானிக்கப்படுகிறது.

தமிழில் உடலரசியின் முதல் பரிமாணமாக ஔவையின் கவிதைகளைப் பார்க்கிறேன்:

*'முட்டு வேன்கொல்; தாக்கு வேன்கொல்*
*ஓரேன் யானும்; ஓர்பெற்றி மேலிட்டு*
*ஆஅ ஒல்எனக் கூவு வேன்கொல்*
*அலமரல் அசைவளி அலைப்ப என்*
*உயவுநோய் அறியாது துஞ்சும் ஊர்க்கே*

(குறுந்தொகை 28)

எனும்போதில் பெண்ணின் உயவுநோயை அலட்சியம் செய்யும் ஊரும் அதை எதிர்த்து அலைபாயும் பெண்ணின் மனமும் உரத்த குரலுடன் வெளிப்பட்டுள்ளன.

அன்றைய நாள் ஆணின் முடியாட்சி இலங்கிய நாளில் கூட பெண்ணின் அறிவும் கருத்தும் போற்றப்பட்டிருக்கிறது. ஔவையாரின் ஞானம் அரசர்களால் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அரசர்கள் அறம் மீறும்போது பெண்பால்புலவர் கண்டிப்பவராகவும் ஆலோசனை சொல்பவராகவும் இருந்திருக்கிறார். எல்லாவற்றிலும் பெண்ணின் காதல்உணர்வைக்கூட வெளிப்படையாகச் சொல்ல கவிதை வடிவத்தைப் பயன்படுத்த முடிந்திருக்கிறது. பெண்ணின் ஆளுகைக்குள் எழுத்தும், அரசு அதிகாரமும் செயல்பட்டிருப்பதும் புலனாகிறது.

அடுத்த பரிமாணமாக இன்றைய பெண்ணெழுத்தின் வழியாகப் போலி பிம்பங்கள் தகர்க்கப்படுவதைக் கூறலாம். தேர்ந்தெடுக்கப்பட்ட பாலியல் சொற்கள் ஆண்களின் பயன்பாட்டுக்குரியவை, பெண்களால் உச்சரிக்கப்படும்போது ஆண்கள் பயன்படுத்தப்படும் அர்த்தங்களால் நிரம்பியவை. பெண் தன் பாலியல் இன்பங்களை வெளிப்படுத்த சொற்கள் அனுமதியாமை, பெண்உடல் உணவுஉற்பத்தியின் உழைப்பிற்கும், இனவிருத்திக்கான இச்சைக்குமே உகந்தவை என்பதைத் தகர்த்துள்ளன.

மூன்றாவது பரிமாணமாக இலங்கும் பெண்ணியவாதம் தற்கால அரசியலுக்கு முரணான தத்துவத்தையும் இயக்கத்தையும் முன்னெடுத்து வருவதைத் தலித் பெண்படைப்பாளிகள் தமது உடலரசியல் வழியாக எதிர்க்கின்றனர். உடலரசியலைக் கையில் எடுப்பதற்கான முழுச் சாத்தியப்பாடுகளும் சாதியமறுப்புப் படைப்பாளிகளுக்கு உண்டு. இன்றுவரை தலித் பெண்களின் உடல்கள்தாம் ஆதிக்கச்சாதி ஆண்களின் பாலியல்வன்முறையின்போது வெறும் யோனியாக, ஆதிக்கச்சாதிப்பெண் செலுத்தும் ஒடுக்குமுறையின் போது வெறும் உணவு உற்பத்திக்கான, உழைப்பிற்கான உடலாக அதே சாதிப்படிநிலையிலிருந்தாலும் ஓர் ஆண் என்பதாலேயே அப்பெண்ணை இனவிருத்திக்கான உடலாகவும் பார்க்கும் சமூகத்தில் முன்வைக்கப்படும் உடலரசியல் மேலைத்தேயத்தின் பெண்ணிய வாதத்திலிருந்தும், கற்பைச் சுமந்தலையும் உடலுடைய பெண்களின் வாதத்திலிருந்தும், ஓர் ஆண் பெற்ற அதிகாரமும் விடுதலையுமே தனக்குப் போதுமானது என்று கூறும் ஆதிக்கசாதிப்பெண்களின் இடதுசாரிவாதத்தை ஏற்கும் பெண்களின் வாதத்திலிருந்தும், முற்றிலும் மாறுபட்டது.

# பெண்களும் சமூகக் கட்டமைப்புக்களும்

# பெண்கள் அனுபவிக்கும் அனர்த்தங்களை எதிர்கொள்ளல்

-அநுசூயா சேனாதிராஜா

## பெண்களும் சமூகக் கட்டமைப்புக்களும்

அனர்த்தங்கள் எனப்படுவது இயற்கையாகவும் செயற்கையாகவும் அல்லது மனிதனினாலும் ஏற்படக்கூடியன. இவ் அனர்த்தங்கள் பல்வேறு வளர்ந்துவரும் வளர்ச்சித் திட்டங்களிற்குத் தடையாகக் காணப்படுகின்றன. இதனால் ஏராளமான உயிர் இழப்புக்களும் புவியியல், பொருளாதாரச் சேதங்களும் ஏற்படுகின்றன. இதனால் இயற்கை வளங்கள் அழிவுற்று, சமூக உறுதிப்பாடுகள் உடைக்கப்படுகின்றன. அல்லது பலவீனப்படுத்தப்படுகின்றன. அபிவிருத்திச் செயற்பாட்டிற்கான பெருந்தொகையான பணம், இத்திடீர் அனர்த்தங்களிற்குத் திசை திருப்பப்படுகின்றன. வளர்ச்சிப் பாதைக்கு இது சவாலாக அமைகின்றது.

## அனர்த்தத்தின் கடந்தகால விளைவுகள் :

வளர்ச்சி அடைந்துவரும் நாடுகளில் வருடாவருடம், 90 சதவீதமான இயற்கை அனர்த்தங்களும் அதன் விளைவாக 95 சதவீதமான உயிர் இழப்புக்களும், உலகளாவிய ரீதியாக சம்பவிக்கின்றன. 2025ம் ஆண்டளவில், உலக சனத்தொகையில் 80 சதவீதமானோர் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் வாழ்ந்துவருவர் என எதிர்வு கூறப்படுகின்றது. அவர்களில் 60 சதவீதமானோர் வெள்ளப்பெருக்கு, கொடூரமான புயல், மண்சரிவுகள் போன்ற இயற்கை அனர்த்தத்தினால் பாதிப்படைவர்[01] எனக் கணக்கீடுகள் கூறுகின்றன.

பல்வேறு வருட காலமாக, இழப்புக்கள் ஏற்பட்டு வருகின்றன. 1981, 1989 ஆண்டுகளில் ஏற்பட்ட இழப்புக்களைவிட, 1990ல் ஏற்பட்ட இழப்புகளும், அழிவுகளும், மும்மடங்கானவை. இழப்புகள் ஏற்படுவதற்குப் பயமே முக்கிய காரணியாகும். தெற்காசியப் பிராந்தியம், புவியியல் அமைப்பு ரீதியாக இலகுவில் சூறாவளி, மண்சரிவு, வெள்ளப்பெருக்கு, வறட்சி, போன்ற இயற்கையின் சீற்றங்களுக்கு உட்படுகின்றது. இப்பிரதேசங்களில் வாழ்பவர்களிற்கும் இது புதிதல்ல. இவ் உபகண்டத்தில், 1992 – 2001 வரையான காலகட்டத்தில், 96,285 உயிர்கள் இயற்கை அனர்த்தத்தினால் காவு கொள்ளப்பட்டன.[02] 2001 ஆண்டில் தெற்காசிய நாடுகளில் 56 சதவீதமான மக்கள் இயற்கை அனர்த்தங்களின் தாக்கத்தினால் கொல்லப்பட்டனர்.

பாகிஸ்தான் – 1,315,211
பங்களாதேஷ் – 729,033
நேபாளம் – 21,026
இலங்கை – 1,000,200 [03]

- இவ்வகையான அனர்த்தங்கள் எல்லா நாடுகளிலும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. அத்துடன் இவ் ஆபத்துக்களின் பரிமாணம், முகாமைத்துவம், அதனால் ஏற்படும் தாக்கம் என்பன பெரிதும் வேறுபடுகின்றன.

- 1982 – 2001 தெற்காசிய அனர்த்தங்களின் விளைவுகள்:

| நாடு | மக்கள் இறப்பு வருடாந்த சராசரி | மக்கள் பாதிப்பு வருடாந்த சராசரி |
|---|---|---|
| பங்களாதேஷ் | 8,754 | 15,897,987 |
| இந்தியா | 5,391 | 56,116,660 |
| பாகிஸ்தான் | 542 | 1,437,785 |
| நேபாளம் | 285 | 92,497 |
| இலங்கை | 65 | 721,182 |

[04]

1992 – 2001 வரை அனர்த்தத்தினால் 622,363 பேர் இறந்தும் உலகளாவிய ரீதியில் 20,001,519,000 பேர் பாதிக்கப்பட்டும் உள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. சர்வதேச மட்டத்தில் மொத்தச் சேதம் $ 694,424 எனக் கணிக்கப்பட்டுள்ளது.[05]

## அனர்த்தத்தின் பரிமாணங்களும் அதன் நலிவுறும் விளைவுகளும் :

அழிவுகளையும், உயிரிழப்புகளையும் ஏற்படுத்தும் இவ் அனர்த்தங்கள், திடீர் சம்பவங்களாக நிகழும்போது உடனடியான அவசிய நிவாரணங்கள் தேவைப்படுகின்றன. இவ் இயற்கையின் சீற்றங்கள் கடவுளின் செயல் எனவும் கருதப்படுகின்றது. இவ் ஆபத்துக்களை ஆராயும் தன்மை, புவியியல் மற்றும் இயற்கை பற்றிய ஆய்வாளர்களினதும் மனித மேம்பாடு பற்றிய மனிதாபிமான நிலையங்களினதும் பங்களிப்பிலேயே தங்கியுள்ளது.

சூறாவளி, வெள்ளப்பெருக்கு, மண்சரிவு, வறட்சி, பூகம்பம் என்பன இயற்கை அபாயங்களாகும். ஆபத்துக்கள் எனப்படும் போது வாழ்க்கை, ஜீவனோபாயம், பழக்கவழக்கம் என்பவற்றிற்கு ஊறுவிளைவிக்கும் தன்மை என அறியப்பட்டுள்ளது. இவ் ஆபத்துக்கள் கட்டுக்கடங்காமல் போகும்போது, அதன் விளைவுகள், உயிரிழப்பையும், பொருட் சேதங்களையும் ஏற்படுத்தும்போது, அனர்த்தங்களாக

மாறுகின்றன. இதனால் தனி நபர்களிற்கும், நாடுகளிற்கும், நலிவுத் தன்மை ஏற்படுகின்றது.

ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான நலிவுற்ற மக்கள் அபாயத்தை எதிர்நோக்குவதன் மூலம், வெளிநாட்டு உதவிகள் எதுவுமில்லாதபோது, வாழ்வாதார அமைப்புக்கள் சேதமடையும்போது அல்லது, பிளவுறும் போதுதான் அனர்த்தங்கள் உண்டாகின்றன.[06]

அனர்த்தப் பாதிப்புகள் தொடர்வதனால் மக்களின் சமுதாய, பொருளாதார, அரசியற் செயற்பாடுகள் மேலும் அனர்த்தங்களை ஏற்படுத்துவதாகக் கருதப்படுகின்றது. இதனால், மக்களிடையே சமனற்றதன்மை, உலக நுண் பொருளாதாரக் கொள்கை, ஆரோக்கியமற்ற அபிவிருத்தி என்பன ஏற்படுகின்றன. ஆகையால் அனர்த்தத்தை எவ்வாறு கையாள்தல் ஏன்பதைப் பற்றி பல்வேறு கோணங்களில் நாமும் சிந்திக்க வேண்டியுள்ளது.

இவ் இயற்கை அனர்த்தங்களினால் அல்லது ஆபத்துக்களினால் ஏற்படும் நலிவுறு நிலை அல்லது பலவீனங்கள் சமூகத்தின் அல்லது நாட்டின் அபிவிருத்தியில் பாரிய பின்னடைவுகளை ஏற்படுத்துகின்றன. அவையாவன :

குறைந்த வாழ்க்கை நிலை, வலுவற்ற தன்மை, ஆபத்துக்கள் மற்றும் அதிர்ச்சிகள், பௌதீக தாக்க விளைவுகள் :

- ஆபத்து நிறைந்த இடத்தில் வாழ்தல்
- பாதுகாப்பற்ற அபாயகரமான வாழ்வாதார நிலைகள், வறுமை.
- அடிப்படை உற்பத்தி வளங்களைப் பெறமுடியாமை.
- அறிவு தகவல் கிடைக்கப்பெறாமை.
- அடிப்படைச் சேவைகள் கிடைக்கப்பெறாமை.

இதனால் சமூக தாக்க விளைவுகள் :

- நிறுவனங்களின் உதவிகள் கிடைக்கப்பெறாமை.
- தலைமைத்துவம் இல்லாமற் போதல்.
- பலவீனமான குடும்ப உறவு
- சமூகப் பிரிவுகள் பிணக்குகள்.
- தீர்மானங்கள் எடுக்க சக்தி அற்ற நிலை

அபிப்பிராயத் தாக்க விளைவுகள் :

- மாற்றங்களிற்கு முகம் கொடுக்கும் தன்மை
- எதிர்மறையான நம்பிக்கைகள்.[07]

வறுமை : அபாயங்களிற்கு முகங்கொடுக்கக் கூறி போதிய அறிவைப் பெற்றுக் கொள்ள முடியாததால் நலிவுறும் தாக்கத்திற்கு உள்ளாகின்றனர்.

விழிப்புணர்வு அல்லது எவ்வாறு தடுப்பது

- வறுமையின் பலவீனமும் அதன் விளைவுகளால் ஏற்படும் கொடூரமும் ஒன்று சேர்ந்துள்ளன.
- இவற்றைத் தீர்ப்பதற்குத் தகுந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.
- சமூக ரீதியாகப் பெரிதும் பாதிக்கப்பட்ட மக்கள் அனர்த்தத்தினால் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.
- தாக்க விளைவுகளிற்குட்பட்ட மக்கள் மேன்மேலும் பாதிக்கப்படுவதனால், அவர்கள் அனர்த்தத்தைத் தாங்கும் சக்தியை இழக்கின்றனர்.

பெண்கள் அனர்த்தத்தை எதிர்கொள்ளல் :

- சமீப காலங்களிற் தான் இதற்கான அணுகுமுறைகள் பிரபல்யமாகிக் கொண்டு வருகின்றது. இதன் விளைவுகளை அங்கீகரிப்பதற்குத் தெற்காசியா தற்பொழுது தான் முயற்சித்து வருகின்றது.
- அபிவிருத்தி தொடர்பான பால்நிலையின் முக்கியத்துவங்கள் அதிகரித்துக் கொண்டு வருகின்றன.
- அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஆணுக்குச் சமனாகப் பெண்களை ஈடுபடுத்தத் தவறியமை கண்கூடு.
- அபிவிருத்தி நடவடிக்கைகளின் அணுகுமுறைகள் ஆண்களையே சார்ந்திருந்தது.
- பெண்கள் குடும்பத் தலைவியாக, இரண்டாந்தரப் பிரஜையாக வீட்டில் இருந்தார்கள்.

பெண்கள் பல்வேறு வழிகளில் புறக்கணிக்கப்பட்டிருந்தனர் :

- பெண்கள் வறியவர்கள்
- வளங்கள் தொடர்பான கட்டுப்பாடு / வேறுபாடு
- பெண்களிற்கென்ற குறிப்பிட்ட சில தொழில்கள்
- வேறுபாடான தேவைகளும் இயல்புகளும்
- குறைந்த தர வேலைகள் பெண்ணிற்குத் தரப்படுதல்
- பொருளாதார பெறுமதிக் குறைப்பு
- சமூகங்களில் பெண்கள் ஆற்றும் பங்களிப்பு

என்பன பெண்களின் அங்கீகாரத்தைக் குறைக்கின்றன.

| பால்நிலை வகிபங்குகள் | |
| --- | --- |
| பெண் | ஆண் தொழில்தொடர்பு |
| உற்பத்தி, மீன் உற்பத்தி | உற்பத்தி நடவடிக்கைகள் |
| உறவுகளைப் பேணல் | வர்த்தகம், தொழில் ரீதியாக |
| சமய, சமூக ஈடுபாடுகள், கொண்டாட்டங்கள் | வெளிநாடு செல்லல் |
| விவசாய தொழிலாளி | உடல் ரீதியான பலமான தொழில்கள் |

அனர்த்த அபாயங்களை அதிகரிக்கச் செய்யும் பால்நிலைக் காரணிகள் :

- பிரசவம், மகப்பேறு தொடர்பான மட்டுப்படுத்தப்பட்ட சுகாதார அறிவுகள்
- நீண்ட கால வாழ்க்கை மட்டுப்படுத்தல்
- இனப்பெருக்கக் கட்டுப்பாடு
- வீட்டு / பாலியல் வன்முறையால் ஏற்படும் பயங்கள்
- கடன்பெற முடியாமை
- பொருளாதாரத்தில் தங்கியிருத்தல்
- உயர்கல்வியறிவற்ற வீதம்
- குறைந்த அளவில் பாடசாலைக்குச் சமூகமளித்தல்
- சமூகத்தில் தனிமைப்படுத்தப்படுதல்
- அவசர உதவிகளைப் பெற்றுச் சமாளிக்கக்கூடிய அறிவில்லாமை

அனர்த்தத்தின் போது பால்நிலை வெளிப்பாடு :

- சமூகக் கட்டமைப்புக் காரணமாக இரு பாலாரும் வித்தியாசமான அனுபவங்களைப் பெறுகின்றனர். இதனால் அனர்த்தத்தாக்க விளைவுகள் ஆணுக்கும், பெண்ணுக்கும் வேறுபட்டுள்ளது.
- பெண்களினதும், ஆண்களினதும் பங்களிப்புகள் வேறுபடுகின்றன.
- அதேவேளை அவைகளின் பலமும், பலவீனங்களும் வெளிப்படுகின்றன.
- பெண் தீமை விளைவிக்கும் அனர்த்தங்களை அறிந்துகொள்ளும், சுதேச அறிவைப் பெற்றிருந்தும் ஆண் கால நிலை
- அனர்த்தத்தின் போது பெண்ணின் வேலைப்பளு அதிகரிக்கும். ஆணின் வேலைப்பளு குறைகின்றது.
- அனர்த்த காலங்களில் ஆணுக்கு வேறு இடம் சென்று வேலை வேலை வாய்ப்பு பெற முடியும்.
- குடும்ப சுமை பெண்ணில் சுமத்தப்படுகின்றது
- ஆண் போல் பெண்களிற்கு அவசர நிவாரணம் கிடைப்பதில்லை.
- கலாச்சாரப் பழக்கவழக்கங்கள், ஆண் நிவாரணப் பணியாளர்களுடன் நேரடித் தொடர்பு வைத்திருக்க அனுமதிப்பதில்லை.

ஆய்வுகளின்படி பெண்கள், ஆண்களைவிட அதிக பாதிப்பிற்குள்ளாகின்றார்கள். எனினும் அவர்களின் முக்கியத்துவத்தைப் புறக்கணிக்க இயலாது.

அவர்களின் பெறுமதிமிக்க பலமும், ஆற்றல்களும் வீணடிக்கப்படுவதுடன் அவர்கள் இன்னொருவரில் தங்கியிருக்க வேண்டியுள்ளது.

பால்நிலை வேறுபாடுகள் கருத்தில் கொள்ளப்படவில்லை எனில் தகுந்த திறமையுள்ள நிவாரண நடவடிக்கைகளை ஏற்படுத்த முடியாது. இதனால் பெண்களின் திறமைகள் சிறப்பாக அடையாளம் காணப்படாமல் வீணடிக்கப் படுகின்றன.

ஆனால், பெண்களும், ஆண்களும் அனர்த்தம் தொடர்பான ஆயத்தப்படுத்தலை மிகத் திறமையுடன் செய்கின்றனர். பல திட்டமிடும் நிறுவனங்கள், பெண்களைப் பிரதிநிதித்துவப்படுத்தாததால் தீர்மானம் எடுப்பதிலும் கொள்கை வகுப்பதிலும் அவர்கள் தவிர்க்கப்படுகின்றார்கள்.[08]

வளர்ச்சித்திட்டங்களிலும், அனர்த்தக் குறைப்பு செயற்பாடுகளிலும் ஆண்களே அதிகம் ஈடுபடுத்தப்படுகின்றார்கள். கொள்கை வகுப்பாளர்களின் தவறான கருத்துகளால் பெண்களின் நலன்கள் மறுக்கப்பட்டு அவர்களின் நிலையைப் பாதிப்புக்குள்ளாக்குகின்றது. எனவே பெண்களிற்கு தகுந்த முக்கியத்துவம் கொடுத்து, திறமையுடன் அனர்த்தப் பாதிப்புக்களில் இருந்து அவர்களைப் பாதுகாப்பது அல்லது விடுவிப்பது சிறந்த பலன்களைக் கொடுக்கும். அதற்கேற்ப வலுவினையூட்டுவது மிகவும் இன்றியமையாதது.

இதனால் பெண்களிற்கு ஏற்படும் பாரிய தாக்க விளைவுகள் :

- அவர்கள் பல்வேறு குடும்ப, சமூகச் சூழல் காரணங்களினால் தங்கி வாழ்பவர்களாக ஆக்குகின்றது. இதனால் வளங்களைப் பெறமுடியாமலும் தாமாக முடிவெடுக்க முடியாதவர்களாகவும் இருக்கின்றனர்.
- குழந்தை பெறுவதனால் ஏற்படும் சுகாதார அபாயங்களினால் அதிக பலன்களைப் பெறமுடியாமல் இருக்கின்றது.
- கலாச்சாரத் தன்மைகளும், வீட்டுப் பொறுப்புக்களும் அவர்களின் இயங்கும் தன்மையைக் குறைக்கின்றது.
- அவர்களின் அரசியல், கல்வி, தகவல்கள் பெற்றுக்கொள்ளல் போன்ற சந்தர்ப்பங்களைக் குறைக்கின்றது. இதனால் அவள் மேலும் பலவீனம் அடைகின்றாள்.[09]
- அனர்த்த காலங்களில் ஆபத்துக்கள் தொடர்பான முன்னெச்சரிக்கைகள் / தகவல்கள் கிடைக்காமை.
- நீச்சல், மரமேறல் போன்ற வாழ்க்கைத் திறன்களைக் கற்காமல் இருத்தல்.
- சமூக, கலாச்சாரப் பாதிப்புக்குட்பட்டிருத்தல்.
- அனர்த்தங்களின் போது பாலியல் வன்முறைக்குட்படுவதனால் முறையிட முடியாமலும், உதவி கோர முடியாமலும், உடல் உளக் கவனிப்புகள் நேரத்துடன் கிடைக்கப் பெறாமையாலும் கஷ்டப்படுகின்றனர்.

- அதிகம் குழந்தை பெற்றவர்கள் (சுகாதாரப் பாதிப்புக்குள்ளானவர்கள்), வயோதிபப் பெண்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், குழந்தைகள் வைத்திருக்கும் பெண்கள், இலகுவில் ஆபத்திற்குள்ளாகின்றார்கள். (அம்பாறை மாவட்டம் – சுனாமி அதிக பாதிப்பு, இழப்பு)
- அவர்கள் தனியாக விடப்பட்டுச் செல்வதால், அதிக ஆபத்திற்குள்ளா கின்றார்கள்.

எனவே, அபிவிருத்திச் செயற்பாடுகளிலும் திட்ட நடவடிக்கைகளிலும், பால் நிலைச் சமத்துவம் பேணப்படும் போது இவ்வாறான தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டு, அனர்த்த பாதிப்புகள் குறைய இடமுண்டு.[10]

அனர்த்த விளைவுகளைக் குறைத்து அபிவிருத்திக்கான வழிவகைகள் :

அனர்த்த முகாமைத்துவத்தை நிலையானதாகவும் நீடித்து நிலைத்து அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்குப் பின்வரும் கருத்துக்கள் முக்கியமானவை :

- அவசரகால முகாமைத்துவத்திலிருந்து முழுக் கவனத்தையும் அபாய முகாமை த்துவத்திற்று மாற்றம் செய்தல்.
- அனர்த்த அபாய முகாமைத்துவத்தை அபிவிருத்தித் திட்டங்களுடன் இணைத்தல்.
- நிவாரணப் பங்கீடு திட்டமிட்டதாகவும், நீண்டகால அனர்த்தத் தயார் நிலை யையும் அபிவிருத்தியையும் இணைத்ததாக இருக்க வேண்டும்.
- அனர்த்த பயத்தைத் தடுப்பதற்கான சமூகங்களைக் கட்டியெழுப்புவதில் கவனம் செலுத்த வேண்டும்.
- அபிவிருத்தி அனர்த்த முகாமைத்துவம் என்பன பால்நிலை சார்ந்ததாக இருக்க வேண்டும்.
- அபாயக் குறைப்பிலும் அனர்த்த முகாமைத்துவத்திலும் பெண்களின் பெறுமதியை அங்கீகரிக்க வேண்டும்.
- எல்லாவகை அனர்த்த முகாமைத்துவத் திட்டங்களிலும் பெண்களை உட்படுத்தல் வேண்டும்.

கருத்துப் பரிமாற்றத்தின் போது யாழ் பல்கலைக்கழக பேராசிரியர் சிவச்சந்திரன் அனர்த்தம் தொடர்பான பல்வேறு வகையான முக்கிய விடயங்களைத் தெரிவித்தார். அவர் இலங்கை ஒரு சிறிய நாடு என்றும் சுனாமி போன்ற அனர்த்தங்களை எதிர்நோக்கும் சந்தர்ப்பத்தில் சிறந்த முன்னறிவித்தல் சாதனங்கள் வேண்டுமென்றார். மிகவும் முக்கியமான விடயமாக பாடசாலை, பல்கலைக்கழகப் பாட விதானங்களில் அனர்த்தங்கள் பற்றிய கற்கைநெறி சேர்க்கப்பட வேண்டுமென்றார். அதைப்பற்றிய புவியியல்சார் விளக்கங்களையும் அவர் எடுத்துக்

கூறினார். தெற்காசியாவில் குறிப்பாகக் கிழக்கு மாகாணத்தில் அதிகளவு அழிவு ஏற்பட்டதென்றும் அதில் அதிகமானோர் பெண்கள் என்றும் கூறினார். ஏனெனில் அவர்கள் புடவை அணிந்திருந்ததும் கலாச்சாரத்தின்படி தப்பிச்செல்ல முடியாமலும் பல உயிர்கள் காவுகொள்ளப்பட்டன என்றார். இவற்றை எதிர்காலத்தில் தவிர்ப்பதற்குப் பெண்கள் வசதியான உடைகளை அணிய வேண்டும் என்றும் கருத்துத் தெரிவித்தார்.

கலாநிதி செல்வி திருச்சந்திரன் கருத்துக் கூறுகையில் முதலாம் முறை சுனாமி அலை தாக்கியபோது ஆண்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டனர். இரண்டாம் அலை வந்தபோது தம் உயிரினும் மேலாக மானத்தைக் காக்க முற்பட்டார்கள். இதனால் தான் அதிக பெண்கள் பாதிக்கப்பட்டார்கள். மாத்தறையில் சுனாமி தாக்கியபோது ஜேர்மன் பெண் பாவாடை சட்டை அணிந்திருந்ததால் தனது உயிரைக் காப்பாற்ற முடிந்தது.

பெண்கள் நீச்சல் போன்ற உயிர் காக்கும் திறன்களைக் குடும்பக் கடமைகளுடன் கற்று வைத்திருத்தல் வேண்டுமென்று கலாநிதி சித்திரலேகா மௌனகுரு கருத்துத் தெரிவித்தார். குழந்தைகளும், பெண்களுமே இவ் அனர்த்தத்தில் அதிகம் பாதிக்கப்பட்டனர். பெண்கள் கொள்கைகளை ஆக்குபவர்களாகவும் அதாவது பெண்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களைக் களைவதற்கான முறையில் பெண்கள் சார்ந்த அரச கொள்கைகளை இயற்றுவோர்களாகவும் இருக்க வேண்டுமென்றார். சுனாமியின் போது பெணகள் அதிகம் பாதிக்கப்பட்டாலும் ஆணகளுக்குத் தான் நிலங்கள் கொடுக்கப்பட்டன. பெண்களிற்கான நிலங்களையும் ஆண்களே எடுத்துக் கொண்டனர். மேலும் பெண்களுக்குத் தொழில்கள் கொடுக்கப்பட வேண்டுமென்றார். குறிப்பாக மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் அதிக தொழில்வாய்ப்புக்களைப் பெண்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்றார்.

பல்வேறு வகையான இயற்கை அனர்த்தங்களினால் இழப்புகளும், அழிவுகளும் ஏற்பட்டு வருகின்றன. இவை அதிகளவில் பெண்களையே பாதிக்கின்றன. பெண்களும், அபிவிருத்தியில் பங்காளிகளாக இருப்பதனால் அனர்த்தத்திற்கு ஈடுகொடுக்கும் வகையிலும், திட்டமிடலிலும், அவசரகால முகாமைத்துவத்திலும் பால்நிலைச் சமத்துவத்தைப் பேணி விஷேட பயிற்சிகள் கொடுக்கப்படல் அவசியம். இதன்மூலம் திட்டமிட்ட, சமத்துவமான அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும்.

# REFERENCES


01. Main F. "Disaster and Development in Disaster Reduction" Mathuri .U. Publication, New Delhi, 2001

02. World Disaster Report - 2002, "International Red Cross and Red Cresent's Report", Jeneva, 2002

03. Ibid

04. Ibid, p. 200

05. Ibid, pp. 196 - 202

06. Blacky .P Canon .T. Vasner .B

07. Anderson, M.M. Woodro .J.P., "சாம்பலிலிருந்து உதயம் அனர்த்த காலங்களில் யுக்திகள்", Disaster Strategies - West View Press Unesco, 1989, pp. 13 - 14.

08. எனர்சன் .ஈ. ஹேண் மெறே .பி., "பெண்களின் கண்களூடாக அனர்த்தத்தின் கொடூரம்", கிரேக்கர், லண்டன், 1998.

09. Anderson, M., "அனர்த்தத்தை விளங்கிக் கொள்ளுதல் பெண்களும், அவசரகால நிலையும்", Walker .B. "பால்நிலையை நோக்கி", ஒக்ஸ்பாம், 1994.

10. Candida. M., இனஸ் .எஸ். முகோபாதயாய். எம். "பால்நிலைப் பகுப்பாய்விற்கு ஒரு வழிகாட்டி", Oxfam Publication, 1999.

# பண்பாட்டிற்கு மறுபக்கங்களும் உண்டு

செல்வி திருச்சந்திரன்

பல வருடங்களைக் கடந்த ஒரு சம்பவம் என் நினைவிற்கு வருகிறது. ஒரு அதிர்ச்சியான இளமைக்கால நினைவு. பதினைந்து வயது என்று நினைக்கிறேன். அண்ணா, தங்கை, தகப்பன் என்று வாழ்ந்த குடும்ப வாழ்வு துன்பம், துக்கம் என்னவென்று இன்றும் தெரியவில்லை. ஒரு நாள் மாலைப்பொழுது ஒரு கணவனும் மனைவியும் யார் என்று முன்பு தெரியாதவர்கள் என் தந்தையைச் சந்திக்க வந்ததாகச் சொன்னார்கள். உள்ளே சென்று தந்தைக்கு அறிவித்து விட்டு நானும் வந்து அவர்களுடன் அமர்ந்தேன்.

விருந்தினருக்கு வந்தவுடன் தேநீர் கொடுக்கத் தேவையில்லை என்று அறிவுறுத்தப் பட்டிருந்தபடியால் சிறிது அவகாசம் எடுக்கலாம் என்று அவர்களுடன் அமர்ந்திருந்தேன். அவர்கள் என்னுடன் எதுவும் பேசாதது எனக்கு ஆச்சரியமாகவே இருந்தது. அவர்கள் முகத்தில் சோகம் அப்பிக்கிடந்தது. அப்பெண் அழுதிருப்பாள் போலத் தோன்றியது. கணவன் முகத்தை கடுமையாக வைத்திருந்தார். என் தந்தை வந்தவுடன் மனைவி கண் கலங்கத் தொடங்கினாள். இருவரும் பேசத் தொடங்க முன் என்னைப் பார்த்தார்கள். அவர்கள் பார்வையைப் புரிந்து கொண்ட என் தந்தை என்னை உள்ளே செல்லச் சொல்லிவிட்டார். நானும் வியப்புடன் உள்ளே சென்று விட்டேன்.

ஆனாலும் எனக்கு அவர்கள் பேசியது நன்றாகவே கேட்டது. ஆனால் விளங்கவில்லை. ஏதோ குடி முழுகிப் போய்விட்ட ஒரு பிரச்சனையை அவர்கள் பேசுவது புரிந்தது. புரிந்த மட்டில் 20 வயது மகன் சிறிது காலமாகப் படிப்பில் அக்கறை இல்லை. மனக்கிலேசம், துன்பம், மரியாதைக் கேடு, சமூகத்தின் கேலி, வெட்கக்கேடு என்ற ரீதியில் அந்தக் கணவன் மனங்குமிறி மனம் நொந்து கூற மனைவி அமைதியாக ஆனால் அதே சமயம் குமிறிக் கொண்டு வந்த அழுகையை அடக்க எத்தனித்தார். கதையைக் கேட்ட என் தந்தை அப்பிரச்சனையை மிகவும் சாதாரணமாக எடுத்து சில அறிவுரைகளைக் கூறினார்.

அதற்குள் எனக்குக் கேட்ட ஆங்கிலச் சொற்பதம் Homosexual என்பதே. உடனே ஆங்கில அகராதியைத் தேடிப்பிடித்து அதன் அர்த்தத்தை வாசித்தவுடன்

எனக்கும் அதிர்ச்சியாகத் தான் இருந்தது. (Sexual என்றால் என்ன என்பது புரியத் தொடங்கிவிட்ட வயது அது. Homesexual என்பது என்ன என்று தெரியவில்லை) என் தந்தை கூறியவற்றில் சில.....

“இது மிகவும் சாதாரணமான விடயம். பல நாட்டு மக்களிடம் இது இருக்கிறது. சிலர் பிறக்கும் போதே அந்த மரபணுக்களுடன் பிறப்பார்கள். ஆணும் பெண்ணும் அப்படிப் பிறக்கலாம். இது ஒரு நோய் அல்ல. ஒரு பெரும் குற்றம், குறைபாடு அல்ல. அது ஒரு மாற்றம் மட்டுமே. தவிர்க்க முடியாதது. இப்படி எத்தனையோ பெண்களும் ஆண்களும் எங்கள் சமூகத்தில் இருக்கிறார்கள். அவர்கள் ஆண்கள் ஆண்களையும், பெண்கள் பெண்களையும் நாடுவார்கள். பொதுவாக மறைமுகமாகவே அவர்களது சகவாசம் தொடரும். எல்லாச் சமூகங்களிலும் ஆதிகாலம் தொடங்கி இருந்து வருகிறது. என்னிடம்' வருபவர்களில் கூட சிலர் அப்படித் தான்.

பல நாவல் ஆசிரியர்கள், ஓவியர்கள், தத்துவாசிரியர்கள், கவிஞர்கள், மதகுருமார்கள் Homosexual ஆக இருந்திருக்கிறார்கள். இன்னும் இருக்கிறார்கள். அவர்களைக் குறை கூறுவதில், ஒதுக்கி வைப்பதில் அர்த்தம் இல்லை. நீங்களும் உங்களது மகனை ஏற்றுக் கொண்டு சகஜ மனப்பாங்கோடு நடந்து கொள்ளுங்கள். அவனை ஒதுக்கி குறைகண்டு தனிமைப்படுத்தினால் அவன் மன நோய்வாய்ப்படுவான். அவனை துன்பப் படுத்தாதேங்கோ. கண்டும் காணாத மாதிரி நடந்து கொள்ளுங்கள். ஆனால் எக்காரணத்தைக் கொண்டும் அவனுக்கு மணமுடித்து வைக்காதீர்கள். இதனால் ஒரு பெண்ணுடைய வாழ்வு பாதிக்கப்பட்டு விடும். நீங்கள் வேணுமென்றால் ஒரு மருத்துவரது உதவியை நாடலாம். அவர் உங்களுக்கும் உங்கள் மகனுக்கும் சிலவற்றை தெளிவு படுத்தலாம்” என்று ஒரு மருத்துவருக்கு கடிதம் கொடுத்து அவரைப் போய்ப் பார்க்கச் சொன்னார்.

தேநீர் கொண்டு சென்ற எனக்கு, அவர்களது முகத்தில் ஒரு தெளிவு பிறந்திந்ததாகத் தோன்றியது. இப்பொழுது அந்தப் பெண் என்னைப் பார்த்துச் சிரித்து “போட்டு வாறன் தங்கச்சி” என்று விடைபெற்றாள்.

இது நடந்து கிட்டத்தட்ட அரை நூற்றாண்டுக்குப் பின்னும் எங்கள் சமூகத்தில் தன்னினச் சேர்க்கை பற்றி தெளிவு ஏற்படாதது எனக்கு ஆச்சரியமாகவே இருக்கிறது. இதை நான் இங்கு எழுதுவதற்கு யோகா பாலசந்திரனின் சிறுகதைக்கு ஞானத்தால் வந்த எதிர்விளைகள் தான் காரணம்.

அந்தச் சிறுகதையின் தராதரம் பற்றியோ, அதன் இலக்கிய மதிப்புப் பற்றியோ நான் இங்கு கூற வரவில்லை. அதன் கருப்பொருள் ஒரு பெண் பெண்ணினச் சேர்க்கையைத் தெளிவு செய்கிறாள். அதுவே, மிகவும் காரசாரமான

கண்டணங்களைத் தோற்றுவித்து விட்டது. பண்பாடு, கலாசாரம், தமிழ் சமூகம், மேலைத்தேயம், ஆசியா, எங்கள் நாடு, எங்கள் நாட்டு விழுமியங்கள் என்று பல போர்வைகளின் கீழ் இக்கண்டனக் குரல்கள் ஒலித்தன. சில விடயங்களை தெளிவுபடுத்தலே இக்கட்டுரையின் நோக்கம்.

மானிட வாழ்வியலில் சில அடிப்படைகள் எல்லாச் சமூகத்திற்கும் பொதுவானவை. உணவு, உடை, வீடு, பாலுறவு, இனப்பெருக்கம், வேலை என்பன அவற்றில் தவிர்க்க முடியாத சமூகப் பண்புகள். இதில் உடலும், உணர்வுகளும் ஒன்றை ஒன்று தழுவினவை. காதல், பசி, தாகம், கோபம், வெறுப்பு போன்ற உணர்வுகளின் வெளிப்பாடு உடலில் தோற்றம் பெற்று பரிமளிக்கின்றன. எவரைக் காதலிக்கலாம்? (சாதி, சமயம், இனம், வயது, உறவு முறை), எதை உண்ணலாம்?, எதை குடிக்கலாம்?, ஏன் கோபமும் குரோதமும் தவிர்க்கப்பட வேண்டும்? என்ற கோட்பாடுகள் பின்பு நாகரீகம், பண்பாடு என்ற ரீதியில் மனிதனால், உயர்வர்க்க மனிதர்களால் தோற்றுவிக்கப்பட்டன. அந்த வழிமுறைகள் எல்லாம் சரி என்று ஏற்றுக் கொள்ளக்கூடாது என்று பின் வந்த நாகரீக பண்பாட்டுக் கூறுகள் அவற்றை நிராகரித்தன. ஆகவே பண்பாடு என்பது எந்தச் சமூகத்திலும் ஸ்திரமாக, நிரந்தரமாக எக்காலத்திற்கும் பொதுவானதாக இருந்ததில்லை. இருக்க முடியாது. வேட்டியும் குடுமியும் கடுக்கனும் மாறின. சேலையும் அரைச்சேலையாக (Half Saree) மாறி வந்து இப்பொழுது மறைந்து விட்டது.

உணர்ச்சிகளிலிருந்து விடுபட்ட தர்க்கரீதியான அணுகுமுறைகள் காதலுக்கு சாதி, வர்க்கம், இனம் தேவை இல்லை என்றும், தொழிலாளருக்கும் உரிமை, ஊதியம், பேச சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும் என்றும், அடிமை ஆண்டாள் முறை ஒழிய வேண்டும் என்றும், காலனித்துவம் மறைய வேண்டும் என்றும் தோன்றத் தொடங்கின. விஞ்ஞானமும், மருத்துவமும், பொது அறிவும், அனுபவமும் ஒன்று கூடி பல பண்பாட்டுக் கோலங்களையும் அறிகுறிகளையும் அழித்து "புதிய பண்பாடுகளை" தோற்றுவித்து விட்டன. பல மூடிக்கிடந்த உண்மைகள் புலப்படத் தொடங்கின.

"சாதிப் புத்தி", "பெண் புத்தி" போன்ற அரைகுறை ஞானக் கூற்றுகள் தூக்கி எறியப்பட வேண்டும் என்ற மேதா விலாசம் தோன்றியது. இதில் ஒன்று தான் இந்த ஓரினச் சேர்க்கையும். ஊடலுறவும் அதன் பெறுபேற்றின்பமும் இனப்பெருக்கத்திற்கு மாத்திரமே உடையன. தேவையானவை என்ற ஒரு கருத்து சமயக் குரவர்களால் தோற்றுவிக்கப்பட்டன. இறைவனால் அளிக்கப்பட்ட அந்த வரம் இனப்பெருக்கத்துக்கே உபயோகிக்கப்பட வேண்டும். இன்பத்துக்காக அல்ல. இதனாலேயே துறவு. இந்த உடல் இன்பத்தை ஒதுக்க வேண்டும் என்று பௌத்த, இந்து, கிறிஸ்தவ மதங்கள் போதித்தன. இந்து மதத்தில் இதனால் பல முரண்பாடுகளும் பாட பேதங்களும் தோன்றின. சிவன் சக்தி தத்துவம் புராண

இதிகாசங்களில் கதாபாத்திரங்கள். லிங்கயோனி வழிமுறைகள் போன்றன இதற்கு உதாரணங்கள். ஆண், பெண் தன்னினச் சேர்க்கை பூடகமான இலை மறை காய் மறைவாக பல் புராண இதிகாசங்களில் கூறப்பட்டிருப்பதாக ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளார்கள். காம சூத்திரம், கஜராகு சிற்பங்கள், ஒரிசாவில் உள்ள சூரிய ஆலயம் போன்றவற்றிலும் பல ஆண் பெண் தன்னினச் சேர்க்கையாளர்களைக் காணலாம். இந்து, இந்திய, ஆசிய பண்பாட்டில் இவை இருந்தன. அங்கீகரிக்கப் பட்டன. பேசப்பட்டன. இடைக்காலத்தில் இவை பேசாப் பொருளாக மறைக்கப்பட்டு விட்டன.

பத்து வருடங்களுக்கு முன் ஆங்கில பத்திரிகை ஆசிரியர் ஒருவர் ஒரு கருத்துக் கணிப்பு எடுப்பதற்கு என்னையும் இனங்கண்டு தன்னினச் சேர்க்கையை பற்றி பல கேள்விகளைக் கேட்டுவிட்டு, உங்களது மகன் ஒரு Homosexual என்றால் என்ன செய்வீர்கள் என்று கேட்டார். அதற்கு நான் விடையாகக் கூறியவை.

"நான் அவனை வெளியே தள்ளி கதவைப் பூட்ட மாட்டேன். ஏற்றுக் கொண்டு அவனைப் புரிந்து கொள்வேன்" என்று கூறினேன். அப்பதில் ஒரு சலசலப்பையும் ஏற்படுத்தவில்லை. இப்படி ஒரு கேள்வி ஞானத்தில் வெளிவந்த எதிர்விளையிலும் இருந்தது கவனத்தில் கொள்ளத்தக்கது. நீங்கள் என்ன செய்வீர்கள்?, நான் என்ன செய்வேன் என்று தனிநபர்களைக் கேள்வி கேட்காமல் இதை ஒரு சமூக நோக்கில் நாம் பார்க்க வேண்டும்.

நெதர்லாந்து நாட்டிலும், பிரான்ஸ் நாட்டின் ஒரு பகுதியிலும், அமெரிக்காவின் சில மாநிலங்களிலும் சட்ட ரீதியாக இது அனுமதிக்கப்பட்டு விட்டது. எமது அயல் நாட்டில் நோபல் பரிசு பெற்ற அமார்திய சென் இந்தியன் பீனல் கோட் 377 பிரிவை நீக்க வேண்டும் என்று அறிக்கை விட்டுள்ளார். இன்றும் 150 பேர்கள் (சினிமா இயக்குனர், பாடகிகள், நாவலாசிரியர் விக்ரம் செத், அருந்ததி ராய், குல்திப் நய்யார், அபர்ணா சென் என்று) பல சமூக அந்தஸ்துப் பெற்றோரும் கையெழுத்திட்டு அதை நீக்க வேண்டும் என ஒரு கோரிக்கை முன்வைத்துள்ளார்கள்.

(377ம் பிரிவின் படி) ஓரினப் பாலுறவு தண்டனைக்குரிய குற்றமாக பீனல் கோட் கூறுகிறது. 1861ம் ஆண்டு இங்கிலாந்திலிருந்த சட்டம் காலனித்துவ காலத்தில் இந்தியாவிற்கு இறக்குமதி செய்யப்பட்டது. ஆனால் இங்கிலாந்தில் இது நீக்கப்பட்டு விட்டது. இன்னும் சில தகவல்கள்: இன்று இந்தியாவில் மட்டும் 5 கோடி ஆண்கள் தன்னினப் பாலுறவு வாழ்க்கை முறையைத் தேர்ந்தெடுத்துள்ளார்கள். பிரபல பட இயக்குனர், இலக்கியவாதிகள், விஞ்ஞானிகள், மருத்துவர் பலர் இவ் வாழ்க்கை முறைக்குள் இருக்கிறார்கள். இவர்களை அழித்து ஒழித்துவிடுவது தான் இப்பிரச்சனைக்குத் தீர்வு என்று யாரும் சொல்ல முன் வரமாட்டார்கள்.

1982ம் ஆண்டில் இரு தாய்மார்கள் தங்கள் மகள்மார் ஒருவரை ஒருவர் அதிக அக்கறையுடனும், ஆழமாகவும் அன்பு செலுத்தி ஒருவரை ஒருவர் இணைந்திருப்பதைப் பார்த்து இது தவறான உணர்வு என்று கண்டித்து அவர்களைப் பிரித்து விட்டார்கள். இந்த உறவும் பெண் தன்னினக் காதல் தான். அப்பெண்கள் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டார்கள். (பத்திரிகைச் செய்தி)

பெண்கள் அமைப்பு ஒன்று (இதில் நானும் இணைந்திருந்தேன்) இதை அறிந்து அந்தத் தாய்மார்களுக்கு அறிவுரை கூறி அவர்களை அவர்கள் போக்கில் விடும்படி கூறினார்கள். நம் நாட்டில் Equal Ground என்ற ஒரு அமைப்பு பெண் ஆண் ஓரினச் சேர்க்கையாளர்களை ஒன்றிணைத்து இயங்கி வருகிறது. சமுதாயத்தாலும், சட்டத்தாலும் புறக்கணித்து ஓரங்கட்டப்பட்ட படியால் இவர்களுக்கு ஒரு நிறுவனம் தேவைப்படுகிறது. தமிழர்கள், சிங்களவர்கள் என்று எல்லா இன மக்களும், எல்லா மத மக்களும் இதில் இணைந்துள்ளார்கள்.

எங்களுடைய சமூகத்தில் பல பெண்களும் ஆண்களும் திருமணம் செய்யாமல் தனி வாழ்க்கையைத் தேர்ந்தெடுத்ததற்கும், பல விவாகரத்துக்களுக்கும் (எதிர்ப்பால் கவர்ச்சி இவர்களுக்கு இல்லாதபடியால்) இந்த தன்னின ஈர்ப்புத்தான் காரணம்.

இந்த விடயத்தில் பெண் விடுதலையுடன் இதைக் குழப்பி இருப்பது கூட விளக்கத்துக்குரியது. அடிப்படையில் பாலுணர்வு தான் இதன் முக்கிய அம்சம். அது யாரிடம் தோன்றுகிறது என்பதைப் பொறுத்தது. எதிர்ப்பால் கவர்ச்சி இல்லாதவர்களை திருமண பந்தத்தில் இணைத்துவிட்டால் அது இருவரது வாழ்க்கையையும் பாதிக்கும். இதில் சிலர் இருபால் கவர்ச்சி உடையவர்களாகவும் இருக்கக் கூடும் (Bisexual). பெண் விடுதலைக்கும் Lesbians க்கும் என்ன தொடர்பு என்ற கேள்விக்கும் விடை கூறியே ஆக வேண்டும். கணவனால் கொடுமைப் படுத்தப்பட்ட பெண், வஞ்சிக்கப்பட்ட பெண், வன்முறைக்குட்படுத்தப்பட்ட பெண், ஏமாற்றப்பட்ட பெண் என்று பல பெண் கூட்டங்கள் உலகம் பூராவும் உண்டு. பன்முறை இந்த அனுபவங்களைப் பெற்றவர்கள் ஆண்களை கொடூரமாக வெறுத்தொதுக்கத் தொடங்கினார்கள். தனி வாழ்க்கையைத் தேடி இதே அனுபவமுடைய ஏனைய பெண்களுடன் ஒன்று சேர்ந்தார்கள். அங்கு அவர்கள் மனம் ஒத்த தோழிகளாக ஒன்றிணைந்தனர். ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு தங்களுக்குள் ஒரு காதல் ஒப்பந்தம் செய்து உடலாலும் உள்ளத்தாலும் இணைந்து வாழத் தொடங்கினார்கள். இங்கு அவர்கள் செய்தது ஒரு Political Choice. இது மரபணுப் பேதங்களால் ஓரினச் சேர்க்கையாளராக இருப்பதிலிருந்து வேறுபட்டது.

தீபா மேத்தாவின் Fire என்ற இந்தியப் படம் ஓரளவிற்கு இதை விளக்குகிறது. மனமொத்த அன்பு வேண்டும். உடல் தேவைகளும் பெண்களுக்கு உண்டு என்பதை

சமூகம் ஏற்க வேண்டுமென்று அத்திரைப்படம் கூற எத்தனிக்கிறது. ஆனாலும் இப்படிப் பிரித்து பேதங்காட்டி ஒதுங்கி ஆண்களை வெறுத்து வாழ்வது பெண் விடுதலைக்கு பூரண விடையாகாது. ஒரு சில அல்லது பல ஆண்களின் நடத்தைக்கு எல்லா ஆண்களையும் குற்றம் காண்பதுவோ, குறை கூறுவதுவோ சரி என்று தோன்றவில்லை. ஆண்கள் ஆணாதிக்கத்திலிருந்து விடுபட வேண்டும். வன்முறையை விலக்க வேண்டும். பெண்களது சமத்துவத்தை, சம உரிமையை, சம அந்தஸ்தை அங்கீகரிக்க வேண்டும். ஆனாலும் இப்படி ஒரு அல்லி ராஜ்ஜியத்தை தோற்றுவிக்கும் பெண்களையும் நாம் அங்கீகரிக்கத்தான் வேண்டும். நம் பண்பாட்டின் புதுக் கோலமிது என்று எண்ணுவோமாக.

Lesbian என்றால் Lesbos நாட்டைச் சேர்ந்தவர் என்பது தான். Lesbian என்ற சொல்லின் தோற்றம் ஒரு பெண் கவிஞரைக் குறிப்பதாக இருப்பதும் ஒரு முக்கியமான செய்தி. Lesbos என்பது கிரேக்க நாட்டில் ஒரு தீவு. இது ஒரு பிராந்திய மொழியையும் குறிக்கும். Sappho என்ற பெண் கவிஞர் தன்னினச் சேர்க்கையாளராக இருந்து தன்னுடைய கவிதைகளில் Lesbos என்ற கவிதை அணியையும் உபயோகித்தார். அந்த தீவு, அந்த மொழி, அந்த அணி, அந்த கவிஞர் Sappho வசித்த Lesbos தான் Lesbian என்ற சொல்லாக உருவெடுத்தது.


இப்படியான பூர்வீகமும் ஒரு வரலாறும் இருக்கும் ஒரு விடயத்தை நாம் கொச்சைப்படுத்தக் கூடாது. அறிவு பூர்வமாக அதை புரிந்து கொள்ள வேண்டும். கொள்ளை, களவு, இன அழிப்பு, பாலியல் பலாத்காரம், வன்முறை, சாதியம் பேசுதல் போன்ற கொடுமைகளை நாம் கண்டிக்கலாம். தண்டிக்கலாம். ஆனால் வித்தியாசமாக இயங்கும் இயல்பினரை நாம் பிரித்துப் பேசக் கூடாது. அவர்களைக் கேவலப்படுத்தக் கூடாது. நம் பண்பாடு இது இல்லை என்று ஒதுக்கக் கூடாது. அதுவும் நம் பண்பாட்டின் ஒரு கூறு தான். அவர்களும் எம் பண்பாட்டின் ஒரு மக்கள் கூட்டம் தான்.

# இந்நூல்களை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்

## மாற்று நோக்கில் சில கருத்துக்களும் நிகழ்வுகளும்.

- செ. யோகராசா -


பெண்ணியம், பெண்விடுதலை, பெண்நிலைநோக்கு என்றால் என்ன? இவை ஒரு வீண் சலசலப்பா? வீண் கோஷங்களா? பெண்களுக்கு என்னதான் பிரச்சினை? அவர்கள் கல்வி கற்று, உத்தியோகம் பார்த்து, மணம் முடித்து தாய்மார்களாகி, உண்டு உறங்கி சந்தோஷமாகத் தானே இருக்கிறார்கள். ஏன் அவர்களை ஆண்களிலிருந்து பிரித்து அவர்களை வாழ்வில் ஒரு பகுதியாக்கி அவர்களை நாம் பார்க்க வேண்டும்? இப்படியான கேள்விகளைப் பலரும் பல நிலைகளிலும் பல சமயங்களிலும் இன்னும் தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருக்கிறார்கள். மேடைகளிலும், வீடுகளிலும், கட்டுரைகள், நூல்கள் வழியாகவும் இக் கேள்விகளை எழுப்புகிறார்கள். அவர்களுக்கு இந்நூல் ஒரு வேளை சில விடயங்களைப் புகட்டலாம். சில விடயங்களை விரிவுபடுத்தலாம். சில விடயங்களின் புரிதலைப் பூரணமாக்கலாம்.




## பெண்களின் வாய்மொழி இலக்கியம் தாலாட்டு ஒப்பாரி பற்றிய ஒரு சமூகவியல் நோக்கு.

- செல்வி திருச்சந்திரன் -

ஆண், பெண் இருபாலாரும் ஓதிச், சொல்லிப் பாடிய பாக்கள், பழமொழிகள், நொடிகள், பாடல்கள் ஆகியன மானிடவியல், சமூகவியல், மொழியியல் போன்ற துறைகளுக்குரிய ஆய்வுக்களங்களாக அமைந்துள்ளன. கிராமியக் கதைகள், தாலாட்டு, ஒப்பாரி போன்றன சில தனிச்சிறப்புகளுடையன. இந்தச் சிறுநூல் தமிழ்ப் பெண்களின் எழுதா இலக்கியங்களாம். தாலாட்டு, ஒப்பாரி ஆகியனவற்றை ஆய்வு செய்கிறது.




# மலையக மக்களுடைய இனத்துவ இருப்பில் பால்நிலை.


-கமலினி கணேசன்-



இவ்வாய்வு தமிழில் எழுதப்பட்ட முதல் கள ஆய்வாக எமது நிறுவனத்தினால் வெளியிடப் படுகின்றது என்பதில் இதற்கு ஒரு தனிச் சிறப்புண்டு. தமிழில் பல வெளியீடுகள் வந்திருந்தபோதிலும் கள ஆய்வு என்ற ரீதியில் இதுவே எமது முதல் வெளியீடு. கள ஆய்வு என்பதில் எப்பொழுதும் பல சிக்கல்களை எதிர்நோக்கியே தீர வேண்டும். மலையகத்தின் நுழைவே முதல் பிரச்சனை. ஓயாது ஓடி ஓடி உழைக்கும் மக்களைச் சந்திப்பது. அளவளாவுவது கதைப்பது, ஆய்வு நோக்கி எமது இலக்கைத் திருப்புவது கஷ்டமானதாகும். இந்த ஆய்வை தேர்ந்தெடுத்து அதன் காலவரையில் இறுதிவரை ஈடுபட்டு தொழிலாள வர்க்கத்தில் பிரத்தியேகமாக பெண்களது உரிமை மறுப்புக்களில் ஆண் ஆதிக்க வெளிப்பாடுகள் எப்படி தோன்றுகின்றன, எப்படி நிலவுகின்றன எப்படி அவை பெண்ணைத்தாக்கி அவளை அவ்வர்க்கத்திலும் கூட ஓரங்கட்டி விடுகிறது என்பதை கமலினி மிகவும் நேர்மையாக ஈடுபட்டு தன்னை இவ்வாய்வுக்குட்படுத்தி உள்ளார் என்பதில் சற்றேனும் ஐயமில்லை.

## ஆங்கில வெளியீடுகள்



## வருடாந்த சந்தா - நிவேதினி

| | | |
|---|---|---|
| North America | : | US$ 15 |
| UK & Europe | : | US$ 10 |
| India, S. Asia | : | US$ 05 |
| Sri Lanka | : | SLR 350/- |

## சந்தா விண்ணப்பம் 2008

நிவேதினி சஞ்சிகைக்குச் சந்தா அனுப்பியுள்ளேன்

................................................................................

பெயர் : ................................................................................

விலாசம் : ................................................................................

................................................................................

திகதி : ................................................................................

இத்துடன் காசோலை / மணிஓடரைப் பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனத்தின் பேரில் அனுப்பி வைக்கிறேன்.

**Women's Education and Research Center**
58, Dharmarama Road,
Wellawatta,
Colombo - 06,
Sri Lanka.

# கையெழுத்துப் பிரதி ஒப்புவித்தல்

- ☞ கட்டுரை சமர்ப்பிப்போர் தங்கள் பிரதியை வைத்துக்கொண்டு இரு பிரதிகளை எமக்கு அனுப்பவேண்டும். A4 காகிதத்தில் ஒரு பக்கத்தில் ஒவ்வொரு வரிக்கும் இடைவெளி விட்டு (double space) எழுதப்பட வேண்டும்.

- ☞ ஹாவேர்ட் ஒழுங்குமுறையைப் (Harward Systems) பின்பற்றி அடிக்குறிப்புக்களும், உசாத்துணை நூல்களும் எழுதப்படவேண்டும்.

- ☞ அட்டவணைகள் புறம்பான தாளில் அல்லது இருவரிகள் இடைவெளிவிட்டு, எல்லா அட்டவணைகளின் கீழும் விளக்கமான தலைப்புக்களும், அவற்றின் மூல நூல்களும் குறிப்பிடப்படவேண்டும்.

- ☞ புரியாத சொற்கள் உபயோகிக்காமல் தெளிவாக வாசிக்கக்கூடிய நடையைப் பின்பற்றும் அதேவேளை கடினமான சொற்பிரயோகத்தையும் தவிர்த்துக் கொள்ளவும். ஆணாதிக்கம், இனவாதம் முதலியவற்றை வெளிப்படுத்தும் சொற்பிரயோகமும் இடம்பெறுவது தவிர்க்கப்பட வேண்டும்.

## பிரசுர உரிமை

- ☞ பிரதிகள் மீளப் பிரசுரிக்கும் முன், பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனத்திடம் பிரசுர உரிமையைப் பெற வேண்டும். இதன் மூலம் தங்கள் பிரதிகளை ஒரு வருடத்துக்குப் பின் வேறு வெளியீடுகளில் பிரசுரிக்க முடியும்.

# சமாதானக் கற்கைநெறி கைநூல்கள்

மதச் சார்பற்ற ஒரு அரசியலமைப்பு சமாதானத்திற்கு இன்றியமையாதது
- ஜி. அன்டன் ஃ பெர்னான்டோ -

சமாதான முயற்சிகளில் பால்நிலை பிரதிநிதித்துவம்
- டில்ருக்ஷி பொன்சேகா -

பெறுபேறற்ற யுத்தமும் அதில் மனித இழப்புக்களும்
- ஜெகான் பெரேரா -

அமைதியான இலங்கைக்கு சமஷ்டி ஆட்சி முறையின்மூலம்
இனப்பிரச்சினைக்குத் தீர்வு
- குமார் டேவிட் -

இலங்கையின் இன உறவுகள் சமூக வரலாற்று சூழமைவு
- லக்ஸிரி பெர்னான்டோ -

**இந்நூல்களை எமது நூலகத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.**

தொடர்புகளுக்கு : தர்ஷினி
தொ. பேசி. எண் : 0112595296

---

## வெளிவரவிருப்பது

"Writing Religion Decoding Women's Texts" என்ற தலைப்பில் செல்வி திருச்சந்திரன் அவர்களால் ஆங்கில நூல் ஒன்று வெளிவர இருக்கிறது.

**ISSN:1391 - 0353**
**Rs. 250/-**

PRINTED BY UNIE ARTS (PVT) LTD. 48B, BLOEMENDHAL ROAD, COLOMBO 13. TEL: 2330195